அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் முழுமையான சுகாதார பாதுகாப்புத்தன்மை கொண்டது.

பிரத்தியேகமான விசேட கிருமி எதிர்ப்புத் தன்மை கொண்ட இரசாயன கலவை மற்றும் இயற்கை மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட நறுமணம் மிக்க சிறப்பு நிறப்பூச்சைக் (பெயின்ட்) கொண்டு நமது பத்திரிகை அச்சிடப்படுகின்றது என்பதை வாசகர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.


Follow us:

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்


## நக்கல்நமசிவாயம்

‘கள்ளர் பாதிப்பேருக்கு எலெக்சனில நொமிநேஷன் குடுத்துப்போட்டு... கள்ளர மினிஸ்டரா நியமிக்க மாட்டோமெண்டு சொல்லுற நாடு ஸ்ரீலங்கா தான் ஓய்...’




மலர் : 01, இதழ் : 23 சார்வரி வருடம், ஆடி மாதம் 08ஆம் திகதி வியாழக்கிழமை (23.07.2020) ஹிஜ்ரி - 1441 துல்ஹஜ் பிறை-01, 0115886187 பக்கங்கள் 12 விலை ரூ.20


# ஜனாதிபதி - பிரதமர் மீதான கொலை அச்சுறுத்தல் பாதாள உலக புள்ளிகளை விசாரிக்கிறது சி.ஐ.டி!

## பூஸா சிறைக்கு விசேட குழு செல்கிறது - கைதிகளுக்கு கைத்தொலைபேசிகள் வழங்கும் அதிகாரிகளுக்கும் ஆப்பு

● நமது நிருபர்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ - பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்பு உயர்மட்ட பிரமுகர்கள் பலருக்கு பூஸா சிறைச்சாலையில் கொலை அச்சுறுத்தல் விடுத்த கைதிகளான பாதாள உலக புள்ளிகளிடம் விசாரணைகளை நடத்த ஆரம்பித்துள்ளது குற்றப் புலனாய்வுத் திணைக்களம்.

இதன்படி கொலை அச்சுறுத்தல் விடுத்த கொஸ்கொட தாரக்க, பொடி லெஸி, கெவுமா ஆகியோரிடம் வாக்குமூலங்களை பதிவு செய்ய பூஸா சிறைச்சாலைக்கு சி.ஐ.டி.யினர் செல்லவுள்ளனர்.

தமது சுதந்திரம் அதிகாரிகளால் பறிக்கப்படுவதாக கூறி பூஸா சிறைச்சாலையில் உள்ள கைதிகளான கஞ்சிப்பான... 02

## புதிய பிறப்புச்சான்றிதழ் டிஜிட்டல் முறைமையில்

### பெற்றோர் திருமணமானவரா இல்லையா என்ற கேள்வியும் நீக்கம்!




பிறப்புச் சான்றிதழில் தாய் – தந்தையின் திருமண விபரங்கள் மற்றும் இனம் தொடர்பான தகவல்களை உள்ளடக்காதிருப்பதற்கு பதிவாளர் நாயகம் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. 02

## கந்தக்காடு நிலையத்தில் மோதல்; ஐவர் காயம்

கந்தக்காடு தனிமைப்படுத்தல் முகாமில் சிகிச்சை பெற்றுவரும் இரு தரப்பினர் இடையில் இடம்பெற்ற மோதலில் ஐவர் காயமடைந்துள்ளனர்.

குறித்த ஐவரும் வெலிகந்த முகாமில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு இந்த மோதல் இடம்பெற்றுள்ளதுடன், தற்போது நிலைமை வழமைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. 02

# தேர்தலுக்கு முன்னர் என்னை சிறையில் அடைக்க முயற்சி



## முன்னாள் அமைச்சர் ரிஷாட் குருநாகலில் தெரிவிப்பு!

பயங்கரவாதச் செயற்பாடுகள் எவற்றுடனும் எந்தத் தொடர்பும் இல்லாத என்னை, சஹ்ரானின் மிலேச்சத்தனமான தாக்குதலுடன் கோர்த்து, தேர்தலுக்கு முன்னர் சிறையில் அடைக்க முயற்சிக்கின்றார்கள் என்று மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

குருநாகல் மாவட்டத்தில், ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிடும், மக்கள் காங்கிரஸ் வேட்பாளர் முஹம்மட் நஸீரை ஆதரித்து, குருநாகல், பொத்துஹெரவில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றிய முன்னாள் அமைச்சர் ரிஷாட் மேலும் கூறியதாவது,

“குருநாகல் மாவட்டத்துக்கு இன்று வருவேனா என்பது, நேற்று மாலை வரை எனக்குச் சந்தேகமாகவே இருந்தது. வரமுடியுமா அல்லது வரவிடுவார்களா? என்று எதுவுமே தெரியாத நிலையில் இருந்தேன். கட்சியின் தவிசாளர் அமீர் அலியுடன் தொடர்புகொண்டு, இன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கூட்டங்களில், என் சார்பில் கலந்துகொள்ள ஆயத்தமாகுமாறும் வேண்டினேன்.

நான் என்ன குற்றம் செய்தேன்? எனக்கு ஏதாவது வழக்கு இருக்கின்றதா? 02

## சமய வழிபாட்டுத்தலங்களில் தேர்தல் பிரசாரம்

### ஐந்து வேட்பாளர்களுக்கு எதிராக விசாரணை!

விகாரைகள் உள்ளிட்ட சமய வழிபாட்டுத் தலங்களில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்த ஐந்து வேட்பாளர்களுக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்டத்தை மீறி தேர்தல் பிரசாரக் கூட்டங்களை ஏற்பாடு செய்திருந்த மேலும், இரண்டு வேட்பாளர்களுக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

தேர்தல் பிரசாரக் கூட்டங்களை ஏற்பாடுசெய்தல், பொதுத் தேர்தலை நடத்துதல் ஆகிய செயற்பாடுகள் தொடர்பாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் வெளியிடப்பட்டுள்ள சுகாதார விதிமுறைகள் உள்ளடங்கிய பரிந்துரைகள் கடைப்பிடிக்கப்படுவதில்லை என்பதோடு, சமய வழிபாட்டுத் தலங்களில் தேர்தல் பிரசாரங்களை முன்னெடுத்தல் மற்றும் பல்வேறுபட்ட இடங்களில் பொருட்களை.... 02

## சிறைச்சாலை அதிகாரிகள் நால்வரை கைதுசெய்ய சட்டமா அதிபர் அறிவுறுத்து!

பணி நீக்கம் செய்யப்பட்டுள்ள நீர்கொழும்பு சிறைச்சாலையின் முன்னாள் அத்தியட்சகர் அனுருத்த சம்பாயோ, பிரதான சிறைச்சாலை பொறுப்பதிகாரிகளான சரத் பண்டார, நிஷாந்த சேனாரத்ன மற்றும் சிறைச்சாலை பொறுப்பதிகாரி காலிங்க கළුඅக்கல ஆகியோரை கைது செய்ய பிடியாணை பெற்றுக்கொள்ளுமாறு குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு சட்டமா அதிபர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். 02

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.

## யானையால் தாக்கப்பட்டவர் விமானம் மூலம் கொழும்புக்கு

யானையின் தாக்குதலில் தலைப்பகுதியில் கடுமையாக காயமடைந்த கிளிநொச்சி அறிவியல் நகர் வளாக, தொழில்நுட்பப் பீட விரிவுரையாளர் காயத்திரி டில்ருக்ஷி (வயது 32) நேற்று கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக கொண்டுவரப்பட்டார்.

விமானப்படை விமானத்தில் அவர் கொழும்பிற்கு கொண்டு வரப்பட்டார். 02

# சுகாதார விதிமுறைகளை மீறுவோர் பொலிஸ் ஆலோசனை வகுப்புகளுக்கு

கொழும்பு நகரில் முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியை பேணுதல் ஆகிய சுகாதார விதிமுறைகளை கடைப்பிடிக்காதவர்களை, பொலிஸாரால் முன்னெடுக்கப்படும் சுகாதார ஆலோசனை வகுப்புகளுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கைகளின்போது முகக்கவசம் அணியாமல் நடமாடிய மற்றும் சமூக இடைவெளியை பேணாதவர்கள் 5 ஆயிரத்து 636 பேர் இனங்காணப்பட்டிருந்ததோடு அவர்கள் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர். மேலும், இந்த சுகாதார வழிமுறைகளை கடைப்பிடிக்காத நபர்களை ஆலோசனை வகுப்புகளுக்கு அனுப்பி வைக்கவுள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களில் 435 பேர், கடந்த 11ஆம் திகதி பொலிஸ் துறை சார்ந்த படையின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஆலோசனை வகுப்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பொலிஸாரால் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட ஏனையவர்கள் எதிர்வரும் நாட்களில் படிப்படியாக ஆலோசனை வகுப்புக்களுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கொவிட் - 19 நோய்த்தொற்றை ஒழிப்பதற்காக முகக்கவசம் அணிதல் 02




புவனேகபாகுவின் ராஜ்ய சபை மண்டபம் குருநாகலில் இடிக்கப்பட்ட சம்பவத்தை கண்டித்து வடக்கு கிழக்கு முஸ்லிம் உரிமைகளை பாதுகாக்கும் அமைப்பு நேற்று கொழும்பிலுள்ள தொல்பொருள் திணைக்களம் முன் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியது. படப்பிடிப்பு - கிரிஷான் காரியவசம்

## குருநாகல் தொல்பொருள் கட்டிட சேதம் இடைக்கால அறிக்கை பிரதமரிடம்



குருநாகல் புவனேக ஹோட்டல் நடத்தப்பட்டுவந்த கட்டிடம் சேதமாக்கப்பட்டமை தொடர்பான இடைக்கால அறிக்கை நேற்று முற்பகல் அலரி மாளிகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது. 02

## அரச ஊழியர்கள் தபால் மூலம் வாக்களிக்க மேலும் இரண்டு நாட்கள் வழங்கப்பட்டன

தபால் மூலம் வாக்களிப்பதற்கு தவறிய அரச ஊழியர்களுக்கு மேலும் இரண்டு நாட்கள் வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த நாட்களில் இடம்பெற்ற தபால் மூல வாக்களிப்பில் பங்கேற்க முடியாமல் போன வாக்காளர்கள் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 தொடக்கம் மாலை 4.00 மணிவரையிலும், சனிக்கிழமை காலை 8.30 தொடக்கம் பிற்பகல் 2.00 மணி வரையிலும் வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. 02

# பொதுத்தேர்தலில் 70வீத வாக்களிப்பு ஜேர்மனி தூதுவரிடம் பிரதமர் நம்பிக்கை



தபால் மூல வாக்களிப்பின் வீதத்தினை பார்க்கும் போது தற்போதைய கொவிட் - 19 சூழ்நிலையில் எதிர்வரும் ஓகஸ்ட் 5 ஆம் திகதி இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலில் 70 வீத வாக்குப்பதிவினை எதிர்பார்க்க முடியும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான சேவைக்காலத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பவுள்ள ஜேர்மனி தூதுவர் ஜோன் ரொட் உடன் நேற்றுக் காலை அலரிமாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

இதன்போது இரு நாட்டு உறவுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், இலங்கை தொடர்பான ஜேர்மனியின் கொள்கை மாறவில்லை எனவும், அது எப்பொழுதும் இலங்கைக்கு ஆதரவாக இருக்கும் எனவும் ஜேர்மனி நாட்டு தூதுவர் குறிப்பிட்டுள்ளார். 02

## எழுவரின் விடுதலை விவகாரத்தில் தமிழக ஆளுநரின் தாமதம் குறித்து சென்னை உயர்நீதிமன்றம் அதிருப்தி!



முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று சிறைவாசம் அனுபவித்து வரும் ஏழு பேரின் விடுதலை தொடர்பாக 2 ஆண்டுகளாக ஆளுநர் முடிவெடுக்காமல் இருப்பது தொடர்பில் சென்னை உயர் நீதிமன்றம் அதிருப்தி தெரிவித்துள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள்... 02

## ஓகஸ்ட் 1ஆம் திகதி முதல் முன்பள்ளிகள் ஆரம்பம்

ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் முன்பள்ளிகளை மீள ஆரம்பிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. நேற்றைய அமைச்சரவை கூட்டத்தில் இதற்கான இணக்கம் ஏற்பட்டது என சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

கொரோனா அச்சுறுத்தலையடுத்து கடந்த சில மாதங்களாக பாடசாலைகள், முன்பள்ளிகள் மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.



| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **சனிதா வாசனா**<br>3338 ஆவது வாரம்<br>2020 ஜூலை 15ஆம் திகதி<br>ஆங்கில எழுத்து A<br>30 46 56 68 | **சுப்பர் போல்**<br>1176 ஆவது வாரம்<br>2020 ஜூலை 16ஆம் திகதி<br>ஆங்கில எழுத்து U<br>02 43 59 71 | **அத கோட்டிபதி**<br>982 ஆவது வாரம்<br>2020 ஜூலை 16ஆம் திகதி<br>ஆங்கில எழுத்து N<br>21 50 51 66 | **கோட்டிபதி கப்ருக**<br>599 ஆவது வாரம்<br>2020 ஜூலை 17ஆம் திகதி<br>ஆங்கில எழுத்து V<br>29 62 70 80 | **அத கோட்டிபதி**<br>983 ஆவது வாரம்<br>2020 ஜூலை 17ஆம் திகதி<br>ஆங்கில எழுத்து P<br>01 10 43 52 | **சுப்பர் போல்**<br>1177 ஆவது வாரம்<br>2020 ஜூலை 18ஆம் திகதி<br>ஆங்கில எழுத்து D<br>27 39 53 55 | **கோட்டிபதி கப்ருக**<br>600 ஆவது வாரம்<br>2020 ஜூலை 19ஆம் திகதி<br>ஆங்கில எழுத்து T<br>16 45 67 78 |
| **சுப்பர் போல்**<br>1178 ஆவது வாரம்<br>2020 ஜூலை 19ஆம் திகதி<br>ஆங்கில எழுத்து A<br>02 09 10 68 | **அத கோட்டிபதி**<br>985ஆவது வாரம்<br>2020 ஜூலை 19ஆம் திகதி<br>ஆங்கில எழுத்து W<br>36 44 53 64 | **அத கோட்டிபதி**<br>986 ஆவது வாரம்<br>2020 ஜூலை 20ஆம் திகதி<br>ஆங்கில எழுத்து X<br>10 17 24 34 | **சுப்பர் போல்**<br>1179 ஆவது வாரம்<br>2020 ஜூலை 20ஆம் திகதி<br>ஆங்கில எழுத்து T<br>17 22 25 58 | **சனிதா வாசனா**<br>3340 ஆவது வாரம்<br>2020 ஜூலை 20ஆம் திகதி<br>ஆங்கில எழுத்து W<br>01 11 50 63 | **கோட்டிபதி கப்ருக**<br>601 ஆவது வாரம்<br>2020 ஜூலை 21ஆம் திகதி<br>ஆங்கில எழுத்து K<br>08 32 33 61 | **அத கோட்டிபதி**<br>987 ஆவது வாரம்<br>2020 ஜூலை 21ஆம் திகதி<br>ஆங்கில எழுத்து U<br>06 27 36 60 |



குருநாகலில் அமைந்துள்ள இரண்டாம் புவனேகபாகு மன்னனின் ராஜ்ய சபையை இடித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் லிப்டன் சுற்றுவட்டாரத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது..
[படப்பிடிப்பு : லலித் பெரேரா]



கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை வெளிநாட்டுக்கு கொடுப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கிழக்கு முனையத்தைப் பாதுகாப்பதற்கான தொழிற்சங்க ஒன்றியத்தின் போராட்டத்தை மக்கள் மயப்படுத்தல் நிகழ்வு நேற்று கொழும்பு துறைமுகத்தின் முன்னால் இடம்பெற்றது. இதில் எல்லே குணவங்ச தேரர் பங்குப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. [படப்பிடிப்பு : இஷான் தஸநாயக]



மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பைரூஸ் ஹாஜி, ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய கொழும்பு அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அதற்கான நியமனக் கடிதத்தை அவர் கட்சித் தலைவர் ரணிலிடமிருந்து பெறுவதை படத்தில் காணலாம்.

## குருநாகல்...

அறிக்கையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

1) கட்டிடத்தின் முன்பக்கத்தில் கூரையின் ஒரு பகுதிக்கும், ஜன்னல்களுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது என்பதால் அப்பகுதிகளை தொல்பொருள் ரீதியில் ஆராய்ச்சிக்கு உட்படுத்த வாய்ப்புள்ளது. முழுமையாக சேதமாக்கப்பட்டுள்ள பின்பக்கத்திலுள்ள மரத்தாலான விட்டங்கள் மற்றும் செங்கல்கள் உள்ளிட்ட கட்டிட பொருட்கள் பாதுகாப்பாக உள்ளன. அதனால் இதற்கு முன்னர் தொல்பொருள் திணைக்களத்தினால் விரிவாக

அறிக்கையிடப்பட்டுள்ளதாலும் மற்றும் பாதுகாப்பு திட்டங்கள் தயார்படுத்தப்பட்டுள்ளதாலும் அந்த பழைமைவாய்ந்த பகுதியை மீண்டும் மீட்டெடுப்பதற்கான வாய்ப்புள்ளது. அதனால் பழைமை வாய்ந்த கட்டிடம் விரைந்து பாதுகாக்கப்பட வேண்டும்.

2) இக்கட்டிடத்தை தொல்பொருள் திணைக்களத்திற்கு கையகப்படுத்துதல்,

3) குறித்த இடத்தை விரிவாக்கும் திட்டத்தை திருத்துமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு ஆலோசனை வழங்கல்.

4) இந்த சேதமாக்கலுக்கு பொறுப்புகூற வேண்டிய நிறுவனம் அல்லது நபர்களினால் பாதுகாப்பிற்கு அவசியமான ஏற்பாடுகளை செய்தல்

பிரதமரின் ஆலோசனைகளுக்கு அமைய புத்த சாசன மற்றும் கலாசார விவகாரங்களுக்கான செயலாளரினால் இந்த குழு நியமிக்கப்பட்டதுடன், தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் செனரத் திசாநாயக்க, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் டீ.ஜீ.குலதுங்க, குருநாகல் மாவட்ட கூடுதல் செயலாளர் ஜீ.ஏ.கித்சிறி, மத்திய கலாசார நிதியத்தின் பதில் அபிவிருத்தி பணிப்பாளர் வாஸ்து நிபுணர் சுமேதா மாதொட்ட, புத்தசாசன கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சின் பிரதி பணிப்பாளர் தொல்பொருள் ஆய்வாளர் பிரசாத் ரணசிங்க ஆகியோர் குழுவை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

# ஓமந்தை கிணறொன்றிலிருந்து 14 மோட்டார் ஷெல்கள் மீட்பு



(வவுனியா)

வவுனியா ஓமந்தை குஞ்சுக்குளம் பகுதியிலுள்ள கிணறொன்றிலிருந்து 14 மோட்டார் ஷெல்கள் மீட்கப்பட்டுள்ளன. நேற்று விசேட அதிரடிப்படையினர் மற்றும் ஓமந்தை பொலிஸார் இணைந்து இதனை மீட்டுள்ளனர்.

வவுனியா, ஓமந்தை, குஞ்சுக்குளம் பகுதியைச் சேர்ந்த மார்க்கண்டு சிவகுமார் எனும் நபர் தனது விவசாயக் கிணற்றை நீர் இறைத்து துப்பரவு செய்தபோது கிணற்றினுள் வெடிபொருட்கள் காணப்பட்டதையடுத்து ஓமந்தை பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார். இதனையடுத்து, அங்கு சென்ற பாதுகாப்புத் தரப்பினர் குறித்த கிணற்றை பரிசோதித்ததுடன், மேலும் வெடிபொருட்கள் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் ஓமந்தை பொலிஸாரூடாக வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்று புளியங்குளம் விசேட அதிரடிப்படையினரால் குறித்த கிணற்றுக்குள் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது கிணற்றிலிருந்து 14 மோட்டார் ஷெல்கள் மீட்கப்பட்டு, செயலிழக்கச் செய்வதற்காக விசேட அதிரடிப்படையினரினால் எடுத்துச்செல்லப்பட்டது.

## தனிமைப்படுத்தலில் இருப்பவர்கள் 31ஆம் திகதி வாக்களிக்கலாம்

கொரோனா நோய்த்தொற்றின் காரணமாக தனிமைப்படுத்தல் நிலையங்களில் இருப்பவர்கள் வாக்களிப்பதற்கு, எதிர்வரும் 31ஆம் திகதி விசேட தினமாக தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. அதற்கமைய, தனிமைப்படுத்தல்களில் உள்ளவர்கள் அவர்களுக்குரிய தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களிலிருந்தபடியே வாக்களிப்பதற்கான வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்படுமென்றும் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

## சுகாதார...

மற்றும் சமூக இடைவெளியை பேணுதல் ஆகியவற்றை புறக்கணித்துச் செயற்படுபவர்களை இனங்காண்பதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகள் நாளாந்தம் இடம்பெறுவதுடன் இவர்கள் தொடர்ந்து சுகாதார விதிமுறைகளை மீறிச் செயற்படுவார்களாக இருந்தால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கந்தக்காடு...

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில், போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிக்கப்படுவதுடன், கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களுக்கிடையே இந்த மோதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## யானைத்தாக்குதல்...

கிளிநொச்சி காட்டுப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள விகாரையில் வழிபாட்டிற்கு சென்று வரும்போது, அவரும் இன்னொருவரும் காட்டு யானையை எதிர்கொண்டுள்ளனர். இந்நிலையில் அவர்கள் தப்பியோடிய போதும், டில்ருக்ஷி யானைத் தாக்குதலுக்கு இலக்கானார்.

அவர் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவர் கோமா நிலையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில் அவர் உயிரிழந்து விட்டதாக முன்னதாக தவறான செய்திகள் (தமிழனில் அல்ல) வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சிறைச்சாலை...

அவர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவும் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, நீர்கொழும்பு சிறைச்சாலையின் முன்னாள் அத்தியட்சகர் அனுருத்த சம்பாயோ மற்றும் மூவரை கைதுசெய்ய நீர்கொழும்பு நீதவான் நேற்று மாலை பிடியாணை பிறப்பித்தார். முன்னதாக அனுருத்த சம்பாயோ மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார். தன்னை கைது செய்வதை தடுக்க உத்தரவிடுமாறு அவர் அந்த மனுவில் கோரியிருந்தார்.

## ஜனாதிபதி...

இம்ரான், கொஸ்கொட தாரக்க ,பொடி லெஸி உட்பட்ட பாதாள உலகத் தலைவர்கள் என்று சொல்லப்படும் கைதிகள் கடந்த வாரம் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். அது தொடர்பில் அவர்களுடன் பேசச் சென்ற அதிகாரிகளை திட்டிய அந்த கைதிகள், எந்த நேரத்திலும் ஜனாதிபதி, பிரதமர் அல்லது முக்கிய நபர்களை தீர்த்துக்கட்டும் அளவுக்கு தங்களது வலையமைப்பு இருப்பதாக கூறி அச்சுறுத்தல் விடுத்துள்ளனர். வேண்டியளவு ஆயுதங்கள் வெளியில் இருப்பதாக இதன்போது இவர்கள் கூறியமை தொடர்பிலேயே சி. ஐ.டி கூடுதல் கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளது. இந்த அச்சுறுத்தல் வெளிவந்த பின்னர் நேற்றுமுன்தினம் கொழும்பில் விசாரணைகளை ஆரம்பித்த சி.ஐ.டி. பூஸா சிறைச்சாலை அதிகாரிகள் இருவரை அழைத்து முழு விபரங்களையும் பெற்றது. அதன் பின்னர் பல கோணங்களில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பாதுகாப்புத்துறையின் விசேட கண்காணிப்பில் பூஸா சிறைச்சாலை இருந்தாலும் அங்குள்ள கைதிகள் சிலருக்கு கைத்தொலைபேசிகள் எப்படி கிடைக்கிறதென்பது குறித்து தனி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பூஸா சிறையிலுள்ள கஞ்சிப்பான இம்ரான் கைத்தொலைபேசி பாவிப்பது சி.சி.ரி.வி. கெமரா பதிவுகளில் தெரியவந்திருப்பதால் அது குறித்தும் விசாரணைகள் நடக்கின்றன.

அத்துடன் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக கொண்டுசெல்லப்படும் முக்கிய கைதிகளை இடையில் தப்பிக்க வைக்கும் திட்டம் ஒன்று குறித்தும் தகவல் கசிந்துள்ளதால் அது தொடர்பிலும் சி.ஐ.டி. விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

## எழுவரின்...

தண்டனைக் கைதியான பேரறிவாளனை பரோலில் விடுவிக்கக் கோரி அவரது தாய் அற்புதம்மாள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். அதில், புழல் சிறையில் உள்ள கைதிகளுக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளதால் தனது மகனுக்கும் கொரோனா தொற்று வர வாய்ப்புள்ளதால் அவருக்கு 90 நாட்கள் பரோல் வழங்க வேண்டும் என்று தான் அளித்த மனுவில் கூறியிருந்தார்.

இந்த வழக்கு நேற்று நீதிபதிகள் கிருபாகரன் மற்றும் வேலுமணி அமர்வு முன்பாக விசாரணைக்கு வந்தது.

விசாரணையில், 2019 நவம்பர் மாதம் பேரறிவாளனுக்கு 90 நாட்கள் பரோல் வழங்கப்பட்டது, இதன்பின்னர் 2 ஆண்டுகளுக்கு பிறகு தான் மீண்டும் பரோல் வழங்க முடியும் என அரசுத் தரப்பு வழக்கறிஞர் தெரிவித்தார்.

தொடர்ந்து மனுதாரர் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் சண்முக சுந்தரம், பேரறிவாளன் உட்பட 7 பேரின் விடுதலை தொடர்பான தமிழக அரசின் தீர்மானத்தில் ஆளுநர் கடந்த இரு ஆண்டுகளாக முடிவெடுக்காமல் உள்ளார் என தெரிவித்தார்.

அப்போது, அரசியலமைப்புப் பதவியில் உள்ளவர்கள் மீதான நம்பிக்கையின் அடிப்படையில்தான் அவர்கள் முடிவெடுப்பதில் கால அவகாசங்கள் நிர்ணயிக்கப்படவில்லை என கூறிய நீதிபதி கிருபாகரன், எழுவர் விடுதலை விவகாரத்தில் 2 ஆண்டுகளுக்கு மேலாக ஆளுநர் முடிவெடுக்காமல் இருப்பதற்கு அதிருப்தி தெரிவித்தார். மேலும், இந்த விவகாரத்தில் ஆளுநர் முடிவெடுக்காமல் எவ்வளவு காலம் வைத்திருக்க முடியும்? என்று கேள்வி எழுப்பினார்.

தொடர்ந்து, ஏழு பேர் விடுதலை தொடர்பாகவும், பேரறிவாளனுக்கு பரோல் வழங்குவது தொடர்பாகவும் தமிழக அரசுக்கு பதிலளிக்க உத்தரவிட்டு வழக்கை ஜூலை 29ஆம் திகதிக்கு நீதிபதிகள் ஒத்தி வைத்தனர்.

## புதிய...

தாய் – தந்தையரின் திருமண விபரங்கள் தொடர்பில், சமூகத்தில் சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை கருத்திற் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக பதிவாளர் நாயகம் என்.சீ. விதானகே தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், நாட்டின் அனைத்து பிரஜைகளினதும் புதிய பிறப்புச் சான்றிதழ்களில் இலங்கையர் என குறிப்பிடப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். பிறப்புச் சான்றிதழ்களில் பெற்றோர் திருமணமானவர்களா அல்லது திருமணமாகாதவர்களா என்ற விடயம் உள்ளடக்கப்பட்டுள்ளமையினால் சிறுவர்கள், பாடசாலைகளில் சேர்க்கப்படும் போது மன உளைச்சலுக்கு ஆளாகிய சந்தர்ப்பம் காணப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

டிஜிட்டல் முறைமையிலான புதிய பிறப்புச் சான்றிதழ்களை பொதுத் தேர்தலின் பின்னர் விநியோகிப்பதற்குத் திட்டமிட்டுள்ளதாக பதிவாளர் நாயகம் என்.சீ. விதானகே மேலும் கூறியுள்ளார். பிறப்பின் போது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் வகையில் வழங்கப்படும் 12 இலக்கங்களே பிற்காலத்தில் தேசிய அடையாள அட்டைகள் உள்ளிட்ட ஆவணங்களை வழங்குவதற்கு பயன்படுத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். குறிப்பாக 15 வயதை பூர்த்தி செய்த ஒருவருக்கு குறித்த 12 இலக்கங்களிலேயே தேசிய அடையாள அட்டை வழங்கப்படும் எனவும் பதிவாளர் நாயகம் என்.சீ. விதானகே சுட்டிக்காட்டினார்.

## அரச ஊழியர்கள்

அரச ஊழியர்கள் தமது மாவட்டத்தில் அமைந்துள்ள மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் வாக்குகளைச் செலுத்த வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

புள்ளடியிடப்படாத வாக்குச் சீட்டுப் பொதிகள் தமது பொறுப்பில் உள்ள தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்கள் கூடிய விரைவில் அவற்றை உரிய மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களில் ஒப்படைப்பது அவசியமாகும் என்று நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

வாக்குப் பெட்டிகளை பாதுகாப்பாக மூடுவதற்கு விசேட வேலைத்திட்டம் அமுலாக்கப்பட்டுள்ளதுடன், கட்சிப் பிரதிநிதிகள் இரவு நேரத்தில் வாக்கு எண்ணும் நிலையங்களில் தங்கியிருக்க அனுமதிப்பது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதேவேளை தனிமைப்படுத்தல் நிலையங்களில் உள்ள வாக்காளர்கள் வாக்களிப்பதற்கும் விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய மேலும் தெரிவித்தார்.

## பொதுத்தேர்தலில்...

இதேவேளை, இலங்கை மற்றும் ஜேர்மனி நாட்டுக்கு இடையிலான இராஜதந்திர உறவுகள் 66 ஆண்டுகள் பழைமையானது.

தற்போது கொவிட் - 19 பொருளாதாரத்தில் ஏற்படுத்திய கடுமையான தாக்கத்திற்குப் பின்னர் வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்கு இலங்கை முன்னுரிமை கொடுத்து செயற்பட்டு வருகின்றது எனவும் இதன்போது ஜேர்மனி நாட்டு தூதுவர் கூறியுள்ளார்.

2016 ஆம் ஆண்டில் கிளிநொச்சியில் நிறுவப்பட்ட இலங்கை- ஜேர்மனி பயிற்சி நிறுவனத்தைப் போலவே, மேலும் இரண்டு நிறுவனங்கள் மாத்தறை மற்றும் இரத்மலானையில் அமைக்கப்படும் என்றும் இதன்போது ஜேர்மனி தூதுவர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு தொடர்ந்து வருகை தர தான் திட்டமிட்டுள்ளதாகவும், இலங்கையின் சுற்றுலாத்துறை விரைவில் வழமைக்கு திரும்பும் என தாம் எதிர்பார்ப்பதாகவும் தூதுவர் ஜோன் தெரிவித்துள்ளார்.

மேலும் கொரோனா வைரஸ் காரணமாக ஐரோப்பிய நாடுகளின் சுற்றுலாத்துறையும் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட தூதுவர், 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதி வரை 14 இலட்சத்து 95 ஆயிரத்து 55 பேர் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாகவும் அதில் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகைத் தந்த நாடுகளில் ஜேர்மனி இரண்டாம் இடத்தில் உள்ளதாகவும் ஜேர்மனி தூதுவர் ஜோன் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## சமய...

பகிர்ந்தளித்தல் ஆகிய குற்றச்சாட்டுகள் தொடர்பில் பெருந்தொகையான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் தேர்தல் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஒருசில வேட்பாளர்களுக்கு எச்சரிக்கை வழங்கப்பட்டுள்ளதுடன் சமய வழிபாட்டுத் தலங்கள் அல்லது அந்த சமய வழிபாட்டுத் தலங்களுக்கு சொந்தமான நிலங்களில் தேர்தல் பிரசாரம் அல்லது விளம்பரப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளமை வேட்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலையும் கடந்த 3 ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டிருந்தது.

## தேர்தலுக்கு...

அல்லது தவறு ஏதும் செய்ததாக பொலிஸில் முறைப்பாடு இருக்கின்றதா? 17 வருட அமைச்சுப் பதவி உட்பட, சுமார் 20 வருடகால அரசியலில், என்னைப் பற்றி போலியான கதைகளை பரப்பினார்களேயொழிய, எந்தக் குற்றச்சாட்டும் பொலிஸில் இதுவரை இல்லை.

மக்களுக்கு காணி வழங்கியதற்காக இனவாதிகள் வழக்கிட்டனர். சமூகத்துக்காக பேசியதனால் மதவாதிகள் நீதிமன்றத்தை நாடினர். வேறு எந்த தனிப்பட்ட வழக்கும் எனக்கு இதுவரை கிடையாது.

சஹ்ரானை வாழ்நாளில் நான் கண்டதில்லை. பேசியதில்லை. தொலைபேசியில் கூட கதைத்ததும் இல்லை. ஆனால், வேண்டுமென்றே அந்தக் கயவனின் செயலுடன் என்னையும் தொடர்புபடுத்தி, சிறையில் அடைக்க சதிகள் இடம்பெறுகின்றன. தேர்தலுக்கு முன்னர் என்னை அடைக்கலாம். எனினும், “இறைவன் பாதுகாப்பான்” என்ற நம்பிக்கை எமக்குண்டு. நமது சமுதாயத்தை அடிமைப்படுத்துவதற்காகவும் பயமுறுத்துவதற்காகவும், சமூகத் தலைமைகளாக அங்கீகரிக்கப்பட்ட எம்மை அச்சுறுத்தி, அடக்கப் பார்க்கின்றனர். அதுமட்டுமின்றி, சிறையில் அடைக்கவும் முயற்சிக்கின்றனர். எம்மை அடைப்பதன் மூலம், சமுதாயத்தை பயமுறுத்த முடியும் எனவும் திட்டமிடுகின்றனர்.

எதிர்வரும் 27 ஆம் திகதி, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு வருமாறு எனக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. நான் நிரபராதி. எமது நேரத்தை, காலத்தை வீணடிப்பதே இதன் நோக்கம். என்னை சிறையிலடைத்து, பெரும்பான்மையின வாக்குகளை அதிகரித்து, மூன்றிலிரண்டு நாடாளுமன்ற பெரும்பான்மை எடுப்பதே இவர்களின் திட்டம். அதன்மூலம், சமூக உரிமைகளை இல்லாமல் செய்வது, சமூகத்தை கையாலாகாததாக மாற்றுவதே இவர்களின் திட்டம். இதில் மக்களாகிய நீங்கள் தெளிவாக இருந்துகொள்ளுங்கள். இறைவனுக்குப் பயந்துகொள்ளுங்கள். குருநாகல் மாவட்டத்தில், இம்முறைத் தேர்தலில், இரண்டு வேட்பாளர்கள் களமிறக்கப்பட்டுள்ளனர்.

இம்முறை நமது சமூகத்துக்கான பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை என்றால், வரலாற்றில் ஒருபோதுமே பெறமுடியாது போய்விடும். முஸ்லிம் வேட்பாளர் ஒருவரை தமது கட்சியில் நிறுத்தாதவர்கள், தமது ஏஜெண்டுகளை அனுப்பி, வெட்கமில்லாமல் வாக்குக் கேட்கின்றனர். இவர்களின் ஆசை வார்த்தைகளுக்கு மயங்கினால், நமது சமூகம் தலைகுனிய நேரிடும். நாங்கள் அரசியல் அநாதைகளாகியும் விடுவோம். எங்களுக்கு எதுவும் நடக்கலாம். ஆனால், சமூகம் கௌரவத்துடன் வாழ வேண்டும். சமூகத்துக்கு அடித்தால் தட்டிக் கேட்கின்றோம். குருநாகல் மக்களாகிய உங்களுக்கு அடித்தாலும் ஓடி வருகின்றோம். நாங்கள் வரவில்லை என்றால் யார் வருவது? பொம்மைகளாக இருக்க வேண்டுமென்று அவர்கள் நினைக்கின்றார்களா?

இறைவன், குருநாகல் மக்களாகிய உங்களுக்குத் தந்த இந்தச் சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்தினால், உங்களின் தலையெழுத்தை இம்முறை மாற்ற முடியும். சுமார் 90 ஆயிரத்துக்கு மேற்பட்ட வாக்குகளைக் கொண்ட நீங்கள், தொடர்ந்தும் அரசியலில் தனித்துவிடப்பட முடியாது. எனவே, பொறுப்புடன் நடந்துகொள்ளுங்கள்” என்றார்.

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.



# கொரோனா கோரத்தாண்டவம்: 14 நாட்கள் ஓமானில் முழு முடக்கம்




ஓமானில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதையடுத்து, ஜூலை 25 முதல் ஓகஸ்ட் 8ஆம் திகதிவரை முழு ஊரடங்கு பிறப்பித்து அந்நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளது.

ஓமனில் இதுவரை 69 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். 337 பேர் பலியாகியுள்ளனர். கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருவதையடுத்து, நாட்டின் அனைத்து பகுதிகளிலும் முழு ஊரடங்கு பிறப்பித்து அந்நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளது.

ஜூலை 25 முதல் ஓகஸ்ட் 8ஆம் திகதிவரை முழு ஊரடங்கு அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இக்காலங்களில், இரவு 7 மணி முதல் காலை 6 மணி வரை அனைத்து வகையான இயக்கங்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும், பகல் நேரத்தில் கடைகள் அனைத்தும் மூடியிருக்க வேண்டும் எனவும், தீவிரமான ரோந்து மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து வகையான கூட்டங்கள், ஈத் பிரார்த்தனைகள் மற்றும் பாரம்பரிய ஈத் சந்தைகளுக்கும் தடை விதிக்கப்பட்டிருப்பதாக அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அலாஸ்காவில் 7.8 ரிச்டர் நிலநடுக்கம்:

## சுனாமி எச்சரிக்கையால் பரபரப்பு



அமெரிக்காவின் அலாஸ்கா மாகாணத்தில் 7.8 ரிச்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. நிலநடுக்கத்தை தொடர்ந்து அங்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என அமெரிக்க புவியியல் ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.


அலாஸ்கா மாகாணத்தில் கடந்த 16ஆம் திகதி முதல் தொடர்ந்து சிறியளவில் நிலநடுக்கம் அடிக்கடி ஏற்பட்டுவருகிறது. அந்த நிலநடுக்கங்கள் ஒவ்வொன்று ரிச்டரில் 3 என்கிற அளவிலேயே பதிவாகியுள்ளன.

தற்போது முதன்முறையாக ஒரேநாளில் இரண்டு சக்திவாய்ந்த நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன. அதாவது, இரண்டாவது முறையாக அலாஸ்காவின் சேண்ட் பொய்ண்ட் நகரின் ஏற்பட்ட நிலநடுக்கம் 6.1 ரிச்டராக பதிவாகியுள்ளது.

இந்த இரு நிலநடுக்கங்களால் அதிர்ச்சியடைந்த மக்கள் வீடுகளைவிட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சமடைந்துள்ளனர். சில இடங்களில் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். மேலும் சேதம் குறித்து விவரங்கள் (பத்திரிகை அச்சுக்கு செல்லும்வரை) வெளியாகவில்லை. சுனாமி எச்சரிக்கை விடப்பட்டுள்ளதால் அங்கு பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

# கந்தனுக்கு அரோகரா..!

## மதத் துவேஷமும் கடவுள் நிந்தனையும் ஒழியட்டும்



“இனி மேலாவது மதத் துவேஷமும், கடவுள் நிந்தனையும் ஒழியட்டும்” – என ரஜினிகாந்த் தெரிவித்துள்ளார்.


Rajinikanth
@rajinikanth
#கந்தனுக்கு_அரோகரா

கந்த சஷ்டி கவசத்தை மிகக் கேவலமாக அவதூறு செய்து, பல கோடி தமிழ் மக்களின் மனதைப் புண்படுத்தி கொந்தளிக்கச் செய்த, இந்த ஈனச் செயலை வாழ்க்கையில் மறக்க முடியாதபடி செய்தவர்கள் மீது துரிதமாக நடவடிக்கை எடுத்து சம்பந்தப்பட்ட வீடியோக்களை அரசு தலையிட்டு நீக்கியதற்காக தமிழக அரசுக்கு என்னுடைய மனமார்ந்த பாராட்டுகள். இனிமேலாவது மதத்துவேசமும், கடவுள் நிந்தனையும் ஒழியட்டும்... ஒழியணும்.

எல்லா மதமும் சம்மதமே !!! கந்தனுக்கு அரோகரா !!!

‘கறுப்பர் கூட்டம்’ யூடியூப் வலைத்தளத்தில் கந்தசஷ்டி கவசம் குறித்து வெளியான பதிவு, இந்து மக்களின் உணர்வுகளைப் புண்படுத்தியதாகத் தெரிவித்து பல்வேறு தரப்புகளின் சார்பில் சென்னை பொலிஸ் ஆணையகத்தில் முறைப்பாடளிக்கப்பட்டு குறித்த யூடியூப் செனலை சேர்ந்த சிலர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், இதுதொடர்பான விசாரணைகள் தொடர்ந்தும் நடைபெற்றுவருகின்றன.

இந்நிலையில், இதுதொடர்பில் சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நேற்று தனது டுவிட்டர் பக்கத்தில், “கந்தசஷ்டி கவசத்தை மிகக் கேவலமாக அவதூறு செய்து, பல கோடி தமிழ் மக்களின் மனதைப் புண்படுத்தி கொந்தளிக்கச் செய்த இந்த ஈனச் செயலை வாழ்க்கையில் மறக்க முடியாதபடி செய்தவர்கள் மீது துரிதமாக நடவடிக்கை எடுத்து சம்பந்தப்பட்ட வீடியோக்களை அரசு தலையிட்டு நீக்கியதற்காக தமிழக அரசுக்கு என்னுடைய மனமார்ந்த பாராட்டுகள். இனிமேலாவது மதத் துவேஷமும், கடவுள் நிந்தனையும் ஒழியட்டும்... ஒழியணும்.

எல்லா மதமும் சம்மதமே!!! கந்தனுக்கு அரோகரா!!!” – எனப் பதிவிட்டுள்ளார்.

# உலகளவில் 1.50 கோடி பேருக்கு கொரோனா பாதிப்பு!




## 91 இலட்சம் பேர் குணமடைந்துள்ளனர்



உலகளவில் புதிதாக 2 இலட்சத்து 39 ஆயிரம் பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளதால், இதுவரை பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை ஒன்றரை கோடியை கடந்துள்ளது.


கடந்த (நேற்று முடிவடைந்த)24 மணி நேரத்தில் அமெரிக்காவில் அதிகபட்சமாக 67ஆயிரம் பேருக்கு நோய்த்தொற்று உறுதியானதால், அங்கு மொத்த பாதிப்பு எண்ணிக்கை 40 இலட்சத்தை தாண்டியுள்ளது.

பிரேஸிலில் 44 ஆயிரம் பேர் ஒரே நாளில் கொரோனா பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். பல்வேறு நாடுகளில் ஒரே நாளில் 5 ஆயிரத்து 600 பேர் வரை கொரோனாவுக்கு உயிரிழந்ததால், மொத்த பலி எண்ணிக்கை 6 இலட்சத்து 19 ஆயிரமாக அதிகரித்துள்ளது.

கடந்த (நேற்று முடிவடைந்த) 24 மணி நேரத்தில் பிரேஸிலில் 1,300 பேரும், அமெரிக்காவில் 1,100 பேரும் உயிரிழந்துள்ளனர். அமெரிக்காவில் மொத்த பலி எண்ணிக்கை ஒரு இலட்சத்து 44 ஆயிரமாகவும், பிரேஸிலில் 81 ஆயிரமாகவும் உள்ளது. அதேசமயம், வைரஸ் பாதிப்பிலிருந்து குணமடைந்தவர்கள் எண்ணிக்கையும் 91 இலட்சத்தைக் கடந்துள்ளது.

# இந்திய - பாகிஸ்தான் நோக்கி படையெடுக்கும் சோமாலிய வெட்டுக்கிளிகள்

## எச்சரிக்கிறது ஐ.நா.



இந்திய–பாகிஸ்தான் எல்லை நோக்கி வெட்டுக்கிளி கூட்டம் படையெடுத்துவர வாய்ப்புள்ளதாக ஐ.நா. அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

2019ஆம் ஆண்டு இறுதியில் வெட்டுக்கிளிகள் படையெடுப்பால் சோமாலியா மற்றும் எத்தியோப்பியா உள்ளிட்ட நாடுகளில் 70 ஆயிரம் ஹெக்டர் பண்ணை நிலப்பயிர்கள் சேதமடைந்தன. மேலும், கென்யாவில் 2,400 கி.மீ. பரப்பிலான மேய்ச்சல் நிலம் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டது.

இந்நிலையில், மாலியாவின் ஹர்கீசியா மற்றும் கெரோவே பீடபூமியில் தற்போது வெட்டுக்கிளி கூட்டம் காணப்படுகிறது. அந்த வெட்டுக்கிளி கூட்டத்தை விரட்டும் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுவருவதாக ஐ.நா. உணவு விவசாய அமைப்பு தெரிவித்துள்ளது.

இதனால் சோமாலியாவிலிருந்து இந்திய பெருங்கடல் வழியாக இந்தியா மற்றும் பாகிஸ்தான் எல்லையின் இருபுறங்களிலும் இனப்பெருக்கத்திற்காக வெட்டுக்கிளிகள் விரைவில் வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாலைவனங்களில் வெட்டுக்கிளிகள் தற்போது இனப்பெருக்கம் செய்து வருவதால் அவற்றின் எண்ணிக்கையும் பல மடங்காக இருக்கும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பிளாஸ்டிக் உறைகளால் தனது மும்பை இல்லத்தை மூடிய ஷாருக்

பிரபல நடிகர் ஷாருக்கான் மும்பையிலுள்ள தனது இல்லத்தை பிளாஸ்டிக் உறைகளால் மூடியுள்ளார்.

இந்திய – மகாராஷ்டிர மாநிலம் கொரோனா தொற்றால் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அமிதாப்பச்சன் குடும்பத்தினர் கொரோனாவால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இந்நிலையில், மன்னாட் என்கிற தனது பங்களாவை பிளாஸ்டிக் உறைகளைக் கொண்டு மூடியுள்ளார் ஷாருக்கான். கொரோனா தொற்று பரவாமல் இருப்பதற்காக இதுபோல செய்ததாகக் கூறப்பட்டாலும் மும்பையில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் அதற்காக இதுபோன்று கட்டடத்தை மூடியுள்ளதாகக் கூறப்படுகிறது. இம்முறை மட்டுமல்ல, ஒவ்வொரு வருடமும் பெருமழையின்போது தனது பங்களாவை பிளாஸ்டிக் உறைகளால் மூடுவதை அவர் வழக்கமாகக் கொண்டுள்ளார்.

இந்த பங்களாவில் தனது மனைவி கௌரி கான், மகள் சுஹானா, மகன்கள் ஆர்யன், ஆப்ராம் ஆகியோருடன் ஷாருக்கான் வசித்து வருகிறார்.




# மருத்துவமனையிலிருந்தே அமைச்சரவை கூட்டத்தை வழிநடத்திய சவூதி மன்னர்

சவூதி அரேபிய மன்னர் சல்மான் மருத்துவமனையில் இருந்தபடியே அமைச்சரவைக் கூட்டத்தை தலைமை தாங்கி நடத்திய வீடியோ வெளியாகியுள்ளது.

உலகின் மிகப்பெரிய மசகு எண்ணெய் ஏற்றுமதி நாடான சவூதி அரேபியாவின் மன்னராக 2015ஆம் ஆண்டு முதல் சல்மான் பதவி வகித்துவருகிறார். 84 வயதாகும் அவர், பித்தப்பை **(inflammation of the gall bladder)** அழற்சி காரணமாக ரியாத்திலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



அங்கிருந்தபடி அமைச்சரவைக் கூட்டத்தை சல்மான் தலைமை தாங்கி வழிநடத்தியுள்ளார்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42, தொலைபேசி : 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilannews@yahoo.com

# கறுப்பு ஜுலை..!

**1983..... ஜீலை.... 23**

தமிழர்களாலும் சிங்களவர்களாலும் மறக்கமுடியாத நாள். இலங்கைத் தீவு, உலகின் கண்களுக்கு கறுப்பாக காட்சியளித்த நாள். நாகரீகமுள்ள எந்தவொரு இனமும் செய்யத் துணியாத, செய்யக்கூடாத செயல்கள் அரங்கேற்றப்பட்ட நாள்.

தமிழ் மக்கள் தனியான தாயகம் கேட்டு போராட காரணமாக அமைந்த நாள்.

யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் 13 படையினரைக் கொன்றமைக்காக தென்னிலங்கையில் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டனர். கட்டவிழ்த்து விடப்பட்ட சிங்களக் காடையர்கள், பொலிஸார் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க, தமிழ் மக்களைக் கொன்று குவித்து தமது துவேஷத்தை வெளிக்காட்டினர்.

ஜுலை 23 தொடக்கம் ஒரு வாரகாலம் நடைபெற்ற இந்த வன்முறைகளில் தென்னிலங்கையில் வாழ்ந்த 5,000 வரையான தமிழர்கள் கொல்லப்பட்டதாக வரலாறு பதிவுசெய்திருக்கின்றது.

இந்த வன்முறைகளின் வலிகளைத் தாங்க முடியாமலே தமிழ் இளைஞர்கள் ஆயுத ரீதியான போராட்டத்தை ஆரம்பித்தனர். இலங்கையில் இரத்த ஆறு ஓடுவதற்கு ஆடிக் கலவரம் முக்கியமான காரணியாக அமைந்தது.

ஜுலைக் கலவரம், தங்கள் இனத்தவர்கள் செய்த ஏற்றுக்கொள்ள முடியாத துன்பியல் நிகழ்வு என்று படித்த சிங்கள அதிகாரிகள், அரசியல்வாதிகள் சிலர் காலப்போக்கில் ஏற்றுக்கொண்டிருந்தனர். ஆனால், பிரச்சினைகளின் அடிப்படை இன்னமும் அப்படியேதான் இருக்கின்றது. எந்த மாற்றமும் அதில் இல்லை.

ஆடிக் கலவரத்தில் தமிழர்களின் உயிர்கள் மட்டும் பறிக்கப்படவில்லை. அவர்களின் பொருளாதாரம், வாழ்வுரிமை உட்பட்ட அடிப்படை உரிமைகள் அனைத்துமே பறிக்கப்பட்டன. சிதைக்கப்பட்ட நம்பிக்கைகளுடன் நாட்டைவிட்டு வெளியேறியோர் பலர். உள்நாட்டுக்குள் கையை ஊன்றி மீண்டும் வாழ்வை கட்டியெழுப்பியோர் பலர். வெளிநாடுகளுக்குச் சென்று இன்னமும் அகதியாக இருப்பவர்கள் ஏராளமானோர். என்றாலும் தமிழினம் பீனிக்ஸ் பறவைபோல் மீண்டும் மீண்டும் எழுந்துகொண்டிருக்கிறது. வீழ்ந்துவிடவில்லை.

இந்த துன்பியல் நிகழ்வுகள் இனிமேல் ஏற்படாமல் தடுப்பதற்கு இது தொடர்பான வரலாறுகள் மீளாய்வு செய்யப்படவேண்டியது அவசியம். நல்லிணக்கம், ஜனநாயகம் தொடர்பாக பேசிக்கொண்டிருக்கின்ற இந்தக் காலத்தில் வரலாறுகளை மறைத்துவிட்டு எதையும் சாதித்துவிட முடியாது என்பதை அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

சித்திரவதைகளுக்குட்பட்டு - அடிவாங்கி - உயிரிழப்புகளை சந்தித்து - இன்னமும் அழிந்துவிடாத தமிழினம் இலங்கைத் தீவில் தாம் பிறந்த மண்ணில் சமவுரிமை, சம அந்தஸ்துடன் கௌரவமாக வாழ விரும்பினாலும் அதனை வழங்குவதற்கான மனம் தென்னிலங்கை சிங்களத் தலைவர்களிடம் இல்லை. அநாயசமாக எதுவும் நடந்தாலன்றி இனியும் நிலைமை இப்படியேதான் இருக்கப்போகிறது.

ஆடிக் கலவரம் ஆரம்பித்த நாள் ஒரு திங்கட்கிழமை. அதற்கு முதல் நாளான ஞாயிறு இலங்கையில் பூரணை போயா தினம். அன்றைய போயா தினத்தில் 'சில்' எனப்படும் விரதமிருந்து, விகாரைகளுக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்ட பௌத்த கொள்கை கொண்ட பெரும்பான்மையினரே மறுநாள் தமிழர் சொத்துகளை சூறையாடி உயிர்களையும் பறித்தனர்.

இலங்கையின் மூத்த அரசியல் அரசியல்வாதியும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான சௌமியமூர்த்தி தொண்டமான், வெளிநாட்டு ஊடகமொன்றுக்கு வழங்கிய பேட்டியொன்றில் "சண்டே சில்.. மண்டே கில்" என்று வெளிப்படையாகவே கூறியிருந்தார். முதல்நாள் விரதம், மறுநாள் கொலை என்ற சாரப்பட அவர் உச்சந்தலையில் ஆணியடித்தாற்போல் கூறியிருந்தார்.

இந்தக் கலவரம், கொலைகள் வெளிநாட்டுச் சதி என்று அப்போதைய கைத்தொழில் அமைச்சர் சிறில் மெத்தியூ ஊடகங்களில் அறிவித்தபோது, "இல்லை. வெளிநாட்டுச் சதியெல்லாம் கிடையாது. இது அரசிலுள்ள சிலரின் வேலை" என்றும் தொண்டமான் ஜே.ஆர். அரசின் அமைச்சராக இருந்தபோதும் தைரியமாக கூறியதை இங்கு நினைவுபடுத்த வேண்டும்.

உலக நாடுகள் பல தமது வரலாறை மீளவும் திரும்பிப் பார்த்து, கடந்த கால தவறுகளை திருத்தி கற்றறிந்த பாடங்களைக்கொண்டு நவீன உலகத்திற்கேற்றபடி தங்களை இசைவாக்கம் செய்து வருகின்றன.

ஆனால், இலங்கைத் தீவு என்ன நிலையில் இருக்கிறது. தமிழர்களுக்கு சமவுரிமை வேண்டும் என்று கேட்க முயற்சிக்கும்போதே, காணாமலாக்கப்பட்டுவிடுவோமோ என்ற அச்சமே முதலில் மனதுக்குள் எழுகிறது.

வரலாறு தொடர்கிறது. நாங்கள் இருந்த இடத்தில் அப்படியே இருக்கிறோம். அதுதான் தமிழர்தம் விதி என்று நொந்துகொள்வதைத் தவிர எம்மால் வேறென்ன செய்யமுடியும் ?

சண்டே 'sil'... மண்டே 'kill'... தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வு 'Nil '!

"தமிழன்" பத்திரிகை தொடர்பான உங்கள் கருத்துக்களை news@liberty.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

- சுசிகலா மகாலிங்கம் -



# அழியாத 'கறுப்பு'

ஆடிக்கலவரம் அல்லது கறுப்பு ஜுலை கலவரம் என குறிப்பிடப்படுகின்ற 1983ஆம் ஆண்டு நடந்த இக்கலவரமானது தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட வன்முறைச் சம்பவமாகும். தமிழினத்தை அழிக்கும் நோக்குடன் திட்டமிடப்பட்டு நடத்தப்பட்ட இக்கலவரம் நடந்து இன்றைக்கு 37 ஆண்டுகள் கடந்திருந்தாலும் கூட அதனால் ஏற்பட்ட காயங்களும், இழப்புகளும் இன்னும் மக்கள் மனங்களில் பசுமரத்தாணிபோல் பதிந்தே கிடக்கிறது. அரசியல் ரீதியாக திட்டமிட்டு தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இன ஒழிப்பு முறையின் மிக மோசமான நிகழ்வாக இந்நிகழ்வு வரலாற்றில் பதியப்பட்டிருக்கின்றமை கவலைக்குரியது. இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் தமிழ் மக்கள் மீது பல தடவைகள் தாக்குதல் நடத்தப்பட்ட போதிலும், 1983ஆம் ஆண்டு நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் தமிழர்களாகிய சிறுபான்மையின ருக்குப் பாரிய விளைவுகளை ஏற்படுத்தியிருந்தது.

## 1915 சிங்கள - முஸ்லிம் கலவரம்

இலங்கை வரலாற்றில் முதன்முறையாக ஏற்பட்ட – அரசியல் ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்ட முதல் இனக்கலவரமாக 1915 சிங்கள – முஸ்லிம் இனக்கலவரமே கருதப்படுகிறது.

## 1958 கலவரம்

58 கலவரம் என சொல்லப்படுகின்ற இக்கலவரம் சிங்கள – தமிழ் இனத்தவரிடையே பொலன்னறுவை கொழும்புப் பகுதிகளில் ஏற்பட்டது.

## 1977 கலவரம்


1977ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தபின்னர், தமிழர்களை இலக்குவைத்து, இக்கலவரம் நடத்தப்பட்டது.

இந்தக் கலவரங்களுக்குப் பின்னர் கறுப்பு ஜுலை அல்லது ஆடிக்கலவரம் என பரவலாக அறியப்பட்டதும் தமிழருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பெரிய கலவரமாகவும் இக்கலவரம் கருதப்படுகிறது. இந்த வன்முறைச் சம்பவத்தினால் பல தமிழர்கள் வெட்டிக் கொலைசெய்யப்பட்டும், பலர் எரியூட்டி கொலைசெய்யப்பட்டும் இருந்தனர். ஆயிரக்கணக்கான தமிழர்கள் இந்த வன்முறைச் சம்பவத்தில் உயிரிழந்ததாக தகவல்கள் குறிப்பிடுகின்றன. கொழும்பு – வெலிக்கடைச் சிறைச்சாலையில் சிறைவைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகளான 53 தமிழர்கள் கொலைசெய்யப்பட்டிருந்தனர். இக்கலவரத்தினால் தமிழர்கள் இலங்கையில் வாழமுடியாத சூழ்நிலை ஏற்பட்டதனால் பெரும்பாலான தமிழர்கள் தமது சொத்துகளையும் சொந்தங்களையும் பிரிந்து நாட்டைவிட்டே வெளியேறியிருந்தனர். தமிழின அழிப்புக்கு முதன்முதலில் இக்கலவரமே வித்திட்டது என தமிழ் மக்கள் இன்றும் கூறிவருகின்றனர்.

## கலவரத்துக்கான காரணமும் - பின்னணியும்

யாழ்ப்பாணம், திருநெல்வேலி பகுதியில் இராணுவத்தினர் பயணித்த வாகனமொன்றின் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியிருந்தனர். இந்தத் தாக்குதல் சம்பவத்தில் 15 இராணுவ வீரர்கள் உயிரிழந்ததாகக் கூறப்பட்டது. உள்நாட்டு யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியில் இந்தத் தாக்குதல் சம்பவம் தென்பகுதியிலுள்ள சிங்கள மக்களை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருந்தது. கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்ட பின்னர், முற்றுகைத் தாக்குதலும் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பிலான தகவல்கள் மறுநாள் வெளியாகிய நிலையில், தென்பகுதியில் வாழ்ந்த தமிழ் மக்கள் மீது சிங்களவர்கள் தாக்குதல்களை நடத்த ஆரம்பித்திருந்தார்கள். யாழ்ப்பாணத்தில் உயிரிழந்த இராணுவ வீரர்களின் சடலங்களை கொழும்பு, பொரளை பொதுமயானத்தில் நல்லடக்கம் செய்ய அரசாங்கம் தீர்மானித்த நிலையில், பொரளை பகுதிக்கு உயிரிழந்தவர்களின் உறவினர்கள் வருகைதந்திருந்தனர். இந்நிலையில், தமிழீழ விடுதலைப் புலிகள் கொழும்பில் தாக்குதல் நடத்த வருகைதந்துள்ளதாக பொய் கருத்துகள் வெளியாகிய நிலையில், சிறியளவில் ஏற்பட்ட வன்முறை நாடுதழுவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டது. கொழும்பு மாத்திரமன்றி மலையகத்தில் வாழ்கின்ற தமிழ் மக்கள் மீதும் வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன.

கறுப்பு ஜுலை என்பது தமிழர்களுக்கு மாத்திரமன்றி, சிங்களவர்களுக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தியது. கறுப்பு ஜுலை சம்பவத்தினால் சிங்கள மக்களை உலகளாவிய ரீதியில் அனைவரும் தவறான கண்ணோட்டத்திலேயே பார்த்தனர். இது சிங்கள மக்களுக்கும் கறுப்பு ஜுலை என்றே கருதப்படுகிறது. இக்கலவரத்தின் பின்னரே 30 வருடகால யுத்தம் உருவாகியது. தமிழர் – சிங்களவர் என இரண்டு பக்கமும் இலட்சக்கணக்கான மக்கள் உயிரிழந்தார்கள். கறுப்பு ஜுலையின் ஆரம்பமே அது. அன்று அதை அரசியல் ரீதியில் நிறுத்தியிருந்தால், இன்று இலங்கைக்கு இவ்வளவு பெரிய அழிவு வந்திருக்காது. எது எவ்வாறிருப்பினும், சிங்கள மக்கள் மத்தியில் இக்கலவரம் திடீர் ஆவேசத்தினால் ஏற்பட்ட நிகழ்வாகவே இன்றும் கருதப்படுகிறது. பெரும்பான்மையினரான சிங்கள இனத்தவர்களால் இக்கலவரம் முன்னெடுக்கப்பட்டிருந்தாலும், சிங்கள மக்கள் அனைவருமே தமிழர்களுக்கு எதிராக வன்முறைகளில் ஈடுபடவில்லை என்பதையும், சிங்கள மக்களில் பெருமளவானோர் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு உதவிசெய்ததாகவும் ஆதாரங்கள் மூலம் அறியமுடிகின்றது.





## இலங்கையின் வடக்கே பலாலி

இராணுவத்தளத்திலிருந்து யாழ்ப்பாணத்தை நோக்கிச் சென்ற வாகனத் தொடரணியொன்றை திருநெல்வேலி தபால் பெட்டி சந்தியில் பதுங்கியிருந்த விடுதலைப் புலிகளின் அணியொன்று தாக்கியதில் 15 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இலங்கையின் இலகுக் காலாட்படையைச் சேர்ந்த லெப்டினன்ட் தர இராணுவ அதிகாரியாகிய வாஸ் குணவர்தன இறந்தவர்களில் முக்கியமானவராகக் கருதப்படுகிறார். இந்தத் தாக்குதல் சம்பவம் 1983ஆம் ஆண்டு ஜுலை மாதம் 23ஆம் திகதி இரவு 11.30 மணியளவில் இடம்பெற்றது. அக்காலத்தில் தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் அங்கொன்றும் இங்கொன்றுமாகவே தாக்குதல்களாக இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்டிருந்த வேளையில், இந்தத் தாக்குதலே ஒரே தடவையில் 15 இராணுவத்தினரை கொன்ற தாக்குதலாக பெரிதும் பேசப்பட்டது.

இராணுவ வீரர்களின் வாகனத் தொடரணியில் நான்கு வாகனங்கள் சென்றவேளை, முன்னால் சென்ற ஜீப் மீது விடுதலைப் புலிகளால் கண்ணி வெடித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டபோது சம்பவ இடத்திலேயே ஜீப் வெடித்துச் சிதறியது. பின்னால் வந்த வாகனங்களிலிருந்த இராணுவத்தினர் மீது முற்றுகைத் தாக்குதலை மேற்கொண்ட விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே பலத்த மோதல் ஏற்பட்டதுடன், சம்பவ இடத்திலேயே 13 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். படுகாய மடைந்த இரண்டு இராணுவ வீரர்கள் பின்னர் இறந்தனர். விடுதலைப் புலிகள் பக்கமும் உயிர்ச்சேதம் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நள்ளிரவு நேரத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் பற்றிய தகவல்கள் மறுநாள் பத்திரிகைகளில் தலைப்புச் செய்தியாக பிரசுரமாகியிருந்தன. கொல்லப்பட்டவர்களின் பெயர் விபரங்களும் விபரமாக வெளியிடப்பட்டிருந்தன. இதனால் யாழ்ப்பாணத்தில் சிங்களவர்கள் கொல்லப்பட்டனர் என்றவாறு இந்த வன்முறைச் சம்பவம் தென்னிலங் கையில் சூடுபிடித்தது. அதுவரையில் இவ்வாறான தாக்குதல்களை ஒரு பொருட்டாகவே மதிக்காத ஜே.ஆர்.ஜயவர்தன அரசு அப்போதுதான் அதிர்ச்சிக்குள்ளாகியது. தமிழர்களால் சிங்களவர்கள் கொல்லப்பட்டனர் என்பது சிங்களவர்களுக்கும் ஆச்சரியமாகவே இருந்தது.

அவ்வாறு தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் இறுதிக்கிரியைகளை பொரளை பொதுமயானத்தில் செய்வதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றிருந்த வேளையில் விடுதலைப் புலிகளால் மறுபடியும் தாக்குதல் மேற்கொள்ளப்படவுள்ளது என்ற பொய் வதந்தி சில விஷமிகளால் கிளப்பிவிடப்பட்டிருந்தன. இதனால் இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்ள 24ஆம் திகதி காலையில் கூடியிருந்த மக்கள் மத்தியில் ஒரு பதற்றமும் இருந்தது. இந்த மனநிலையே இந்தத் தாக்குதல் வெடிக்கக் காரணமாகவும் இருந்தது.

இந்தத் தாக்குதல் தென்னிலங்கையில் வாழ்ந்த பகுதிகளில் வன்முறைகள் பரவலாக மேற்கொள்ளப் பட்டதுடன் மட்டுமல்லாமல், நாட்டின் பல முக்கிய நகரங்களிலும் இந்த வன்முறைச் சம்பவம் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. தமிழர்களுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்கள், வாகனங்கள், தொழிற்சாலைகள், வீடுகள் என்பன தீயிட்டு கொளுத்தப்பட்டன. இந்த வன்முறைகளில் பெரியளவான உயிர்ச்சேதங்களும் ஏற்பட்டன. இதில் பலர் அகதிகளாகினர்.

இவ்வன்முறை பல தினங்கள் தொடர்ந்த நிலையில், இதனைக் கட்டுப்படுத்த அரசாங்கம் ஊரடங்கு உத்தரவையும் பிரப்பித்திருந்தது. ஆனால், ஊரடங்கு வேளையிலும் இந்த வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்த வண்ணமேயிருந்தன. ஊரடங்கைக் கட்டுப்படுத்த கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரும் படையினரும் வேடிக்கை பார்த்தனரேயொழிய யாரும் இதனைக் கட்டுப்படுத்த முன்வரவில்லை. இந்தத் தாக்குதலில் வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த சில முக்கிய குற்றவாளிக ளும் கொல்லப்பட்டனர். இந்த வன்முறை சிறைக்கூடங்களிலும் ஊடுருவியிருந்ததை இந்தச் சம்பவங்கள் பிரதிபலிக்கின்றன.

சிறைச்சாலைக்குள் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் குறித்து அரசாங்கம் எந்தவிதமான சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. நீதித்துறையின் பொறுப்பில் சிறைச்சாலை அதிகாரிகளின் நேரடி கண்காணிப்பிலிருந்த 53 தமிழ் அரசியல் கைதிகள் கொல்லப்பட்ட சம்பவம் நீதித்துறை மீதிருந்த மக்களின் நம்பிக்கையை இல்லாமல் செய்திருந்தது.

இந்தச் சம்பவங்கள் பற்றிய உண்மை நிலை ஊடகங்கள் ஊடாகவும் அறிய முடியாதிருந்தது. அப்போது கொழும்பிலிருந்த வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் வெளியே வர மறுக்கப் பட்டிருந்ததுடன், கட்டுப்பாடுகளை மீறிச் செயற் பட்டவர்கள் நாட்டைவிட்டே வெளியேற்றப்பட்ட சம்பவமும் நடைபெற்றிருந்தது. அப்போதைய ஜனாதிபதியும் பிரதமரும் அரசாங்கமும் இந்த வன்முறைச் சம்பவங்களின் உண்மையான நிலைமைகளை மறைத்து திசைதிருப்புகின்ற நடவடிக்கையில் பகிரங்கமாகவே ஈடுபட்டிருந்தனர். இவையாவும் அவ்வப்போது அரங்கேறிய சம்பவங்கள் வாயிலாக அப்பட்டமாக தெரியவருகின்றன.

இந்த வன்முறை பற்றிய உண்மைகளைக் கண்டறிவதற்கான விசாரணைகள் யாவும் காலந்தாழ்த்தியே மேற்கொள்ளப்பட்டிருந்தன. இருப்பினும் இந்த விசாரணைகளில் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களுக்கான எந்த நீதியும் கிடைக்கவில்லை. மாறாக, மீண்டும் ஒரு பெரிய யுத்தம் முளைவிடுவதற்குக் காரணமாகவே அமைந்தது. யுத்தம் நிறைவடைந்திருந்தாலும் இன்னும் இந்த இன ஒழிப்புச் சம்பவங்கள் நிழலாக தொடர்ந்து வருவதை அவதானிக்கக்கூடியதாகவே இருப்பது பெரும் துயருக்குரியதாகும்.

## கண்டதும்... கேட்டதும்... பார்த்ததும்...!

எதிர்க்கட்சிக்கு எதையும் மார்க்கட்டிங் பண்ணத் தெரியலைன்னு ஜேர்னலிஸ்ட் ஒருத்தர் சொன்னார்..

ரணிலும் சஜித்தும் சண்டைபோடுறதுக்கே நேரமில்ல இதில மார்க்கட்டிங் பண்றதுக்கு எங்க நேரம்னு நான் பதில் சொன்னேன்...

ஒருபக்கம் பார்த்தா அந்த ஜேர்னலிஸ்ட் சொன்னதிலயும் ஒரு உண்மை இருக்குறது...

தொல்பொருள் புராதன பெறுமதிகொண்ட கட்டிடமொன்று குருநாகலில் இடிக்கப்பட்ட காலத்தில் மஹிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவராக இருந்திருந்தால் எப்படி இருந்திருக்கும்... அது ஏன்... கொரோனா மேட்டர் கூட மஹிந்த எதிர்க்கட்சித் தலைவராக இருந்திருந்தால் தூள் பறந்திருக்கும்...

எங்கேயும் நல்ல மேனேஜர் இருக்கனும்... டெமேஜர் இருக்கப்படாது..

- சிவ் -



# வீடில்லா பிரச்சினைக்கு புதிய அரசின் கீழ் தீர்வு!

## - கண்டியில் பிரதமர் மஹிந்த தெரிவிப்பு -





*** ஐக்கிய தேசிய கட்சிக்காரர்களினதும் வாக்குகளை எங்களுக்கு இம்முறை தந்து பாருங்கள்**
*** பொதுமக்களின் வீட்டுப் பிரச்சினையை தீர்ப்பதற்கு முக்கியத்துவம்**

'உங்களின் பெறுமதியான வாக்குகளை வீணடிக்காமல் நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக பயன்படுத்துங்கள்' - என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் - பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை கண்டி பூஜாப்பிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:

கட்சி பேதத்தை மறந்து இந்தச் சந்தர்ப்பத்தில் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு உங்கள் வாக்குகளை வீணடிக்காமல் பயன்படுத்துமாறு ஐக்கிய தேசிய கட்சிக்காரர்கள் உட்பட அனைத்து மக்களிடமும் கேட்கிறேன்.

எதிர்வரும் நாட்களில் அதிகாரத்திற்கு வரும் பொதுஜன பெரமுன அரசாங்கம் மூலம் மக்களின் வீட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

கடந்த அரசாங்கத்தின்போது ஏற்பட்ட வீட்டுத்திட்ட முறைகள் தோல்வியடைந்தன. புதிய வீட்டுத்திட்ட முறை தயாரிக்கும்போது வாழ்வதற்கு தகுந்த சூழலுடனான வீட்டுத்திட்ட முறையொன்றை தயாரிக்கவேண்டும்.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டவுடன், உடனடியாக அனைத்து கிராமசேவகர் பிரிவுகளிலும் ஒரு வீடு என்ற கணக்கில் 14,500 வீடுகளுக்கும் அதிக வீடுகள் மக்களிடம் கையளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனினும், இந்த விடயம் தொடர்பில் கடந்த அரசாங்க காலப்பகுதியைபோன்று போஸ்டர் மூலம் அநாவசிய செலவு செய்து பிரசார நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்படவில்லை.

தோட்ட மக்கள் வாழக்கூடிய தகுந்த வீடுகளை வழங்குவது, மறைந்த அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் பிரதான எதிர்பார்ப்பாக இருந்தது.

தொண்டமான் தற்போது உயிரோடு இல்லை என்றபோதிலும் மக்களின் வீட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் அரசாங்கத்தின் மூலம் முன்னெடுக்கப்படும் - என பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

# எமது சங்கத்தின்பிரமுகர்களும் போட்டியிடுவதால் இத்தேர்தலில் தமிழ்க் கூட்டமைப்புக்கே ஆதரவு!

**இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவிப்பு**

நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமது ஆதரவை வழங்கவுள்ளதாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

அதேபோல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டுள்ளவர்களில் செயலாற்றல், ஆளுமை, மொழித்திறன் உள்ளவர்களை தெரிவுசெய்யுமாறும் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற தேர்தலில் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நிலைப்பாடு தொடர்பாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் குமாரசாமி அருணாசலம் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அனுப்பியுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

2020 ஒகஸ்ட் 5ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமது ஆதரவை வழங்க இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் தீர்மானித்துள்ளது.

சங்க உறுப்பினர்கள் தேர்தல் சட்ட விதிகளுக்கமைவாக செயற்பட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றிக்கு பங்களிப்புச் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

நமது சங்கத்தின் தற்போதைய தலைவர் இரா.சச்சிதானந்தன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளதுடன், சங்கத்தின் முன்னாள் பொதுச் செயலாளரும் சங்கத்தின் ஆலோசகருமான த.மகாசிவத்தின் பெயர் தேசிய பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது.


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையின் கோரிக்கைக்கமைய வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 20 உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும் வகையில் அனைத்து உறுப்பினர்களும் செயற்படவேண்டும் - என்றுள்ளது.

# கதிர்காமத்தில் 17 வருடகால அன்னதானம் நிறுத்தம்: பஸ்சேவைகளும் இன்மையால் மக்கள் கவலை!

(காரைதீவு)

கதிர்காம ஆடிவேல் விழாவையொட்டி கடந்த 17 வருட காலமாக நடத்திவந்த அன்னதானம் நாட்டின் கொரோனா சூழ்நிலை கருதி இம்முறை நிறுத்தப்பட்டுள்ளதாக அனனதான சபையின் இணைப்பாளர் எஸ்.ஞானசுந்தரம் தெரிவித்தார்.

கடந்த 17 வருடகாலமாக இந்து கலாசார திணைக்களத்தின் கதிர்காம இந்து யாத்திரிகர் விடுதியில் சிவபூமி அன்னதான தொண்டர் சபையினரால் அன்னதானம் சிறப்பாக நடைபெற்றுவந்தது. அதில் பல இலட்சக்கணக்கான பக்த அடியார்கள் பசியாறிவந்தனர். ஆனால், இம்முறை அதனை நடத்தக்கூடிய சூழ்நிலை இல்லை.ஆதலால் அது நிறுத்தப்பட்டுள்ளது என்பதை அனைவருக்கும் தெரிவிக்கிறோம் - என இணைப்பாளர் எஸ்.ஞானசுந்தரம் தெரிவித்தார்.





இதேவேளை, இந்து யாத்திரிகர் விடுதியும் இம்முறை பக்தர்களுக்கு அல்லாமல் கொரோனாத் தடுப்பு அலுவலர்கள் தங்குவதற்கான தங்குமிடமாக பயன்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை இந்துமாமன்றத்தின் முக்கியஸ்தர்கள் வழமைபோல் தொடர்ந்து அன்னதானம் வழங்குவதில் சிரத்தையெடுத்தனராயினும் அதற்கான அனுமதி கிடைக்கப்பெறாமையினால் அது நிறுத்தப்பட்டுள்ளதென்பதை மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம் - என்றார்.

**- கதிர்காமத்திற்கான விசேட பஸ்சேவைகள் இரத்து**

கதிர்காமம் மற்றும் உகந்தமலை முருகனாலய ஆடிவேல் விழாக்காலங்களில் மேற்கொள்ளப்படும் வழமையான விசேட போக்குவரத்து ஒழுங்குகள் நாட்டின் கொரோனா கட்டுப்பாடுகள் காரணமாக மேற்கொள்ளப்படவில்லையென தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டின் சகல பாகங்களிலுமிருக்கும் பல பஸ் டிப்போக்களும் கதிர்காமத்திற்கான பஸ்சேவைகளை நடத்திவந்தமை தெரிந்ததே. ஆனால், இம்முறை பக்தர்களுக்கு அங்கு அனுமதி மறுக்கப்பட்டிருப்பதனால் பஸ்சேவைகள் இடம்பெறவில்லை.

கல்முனையிலிருந்து கதிர்காமத்திற்கும் உகந்தைக்குமான பஸ் சேவைகள் இம்முறை நடத்தப்படவில்லை என கல்முனைச்சாலை அத்தியட்சகர் வெள்ளத்தம்பி ஜெளபர் தெரிவித்தார்.

இச்சேவைகளினால் கடந்தகாலங்களில் டிப்போவுக்கு மிகுந்த வருமானம் கிடைக்கப்பெற்றிருந்தது.

இம்முறை கொரோனா அதனை நிறுத்தியுள்ளது - என்றார்.




# சுவர்ணமஹால் வைப்பாளர்களுக்கு நட்டஈடு வழங்கும் திட்டம் மக்கள் வங்கிக் கிளைகளூடாக சனிக்கிழமை முதல் ஆரம்பம்!

இலங்கை மத்திய வங்கியானது ஈரிஜ பினான்ஸ் லிமிட்டெட் மற்றும் சுவர்ணமஹால் பினான்ஸ்சியல் சேர்விஸஸ் பிஎல்சி என்பனவற்றின் நிதி வியாபாரங்கள் 2020.07.13ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் இடைநிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்திலிருந்து ஈரிஜ பினான்ஸ் லிமிட்டெட் மற்றும் சுவர்ணமஹால் பினான்ஸ்சியல் சேர்விஸஸ் பிஎல்சி வைப்பாளர்களுக்கு நட்டஈட்டுக் கொடுப்பனவுகளை செலுத்துவதற்கான வழிமுறைகளை எடுத்துள்ளது.

அதற்கமைய தீவு முழுவதிலுமுள்ள தெரிவு செய்யப்பட்ட மக்கள் வங்கிக் கிளைகளினூடாக 2020.07.25ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் நட்டஈட்டுக் கொடுப்பனவு ஆரம்பிக்கப்படும். இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்தின் ஒழுங்குவிதிகளின் நியதிகளுக்கமைவாக வைப்பாளர் ஒருவருக்கு 6,00,000 ரூபா கொண்ட உயர்ந்தபட்ச நட்டஈடு தீவுமுழுவதிலுமுள்ள 45 மக்கள் வங்கிக் கிளைகளினூடாக கொடுப்பனவு




செய்யப்படும்.

அதற்கமைய, ஈரிஜ பினான்ஸ் லிமிட்டெட் மற்றும் சுவர்ணமஹால் பினான்ஸ்சியல் சேர்விஸஸ் பிஎல்சி மூலம் உறுதிப்படுத்தப்பட்ட அனைத்து வைப்பாளர்களுக்கும் சட்டமுறையான பயன்பெறுநர்களுக்கும் நட்டஈடுகளைக் கொடுப்பனவு செய்வதற்குத் தேவையான நிதியங்கள் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்தின் மூலம் ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், நட்டஈட்டு நடைமுறை வினைத்திறன்மிக்க மற்றும் செயல்திறன் வாய்ந்த விதத்தில் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்வதற்கு இலங்கை மத்திய வங்கி அனைத்து தேவையான வழிமுறைகளையும் எடுத்துள்ளது.

வைப்புச் சான்றிதழ்கள், அடையாளப்படுத்தும் விபரங்கள் மற்றும் ஏனைய தேவையான மூல ஆவணங்களை மக்கள் வங்கியின் தொடர்புடைய கிளைக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் இந்நட்டஈட்டுக் கொடுப்பனவுத் திட்டத்திற்கு தமது உயர்ந்தபட்ச ஒத்துழைப்பை வழங்குமாறு ஈரிஜ பினான்ஸ் லிமிட்டெட் மற்றும் சுவர்ணமஹால் பினான்ஸ்சியல் சேர்விஸஸ் பிஎல்சியின் வைப்பாளர்கள் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஈரிஜ பினான்ஸ் லிமிட்டெட் மற்றும் சுவர்ணமஹால் பினான்ஸ்சியல் சேர்விஸஸ் பிஎல்சி வைப்பாளர்களுக்கான நட்டஈடு தொடர்பான மேலதிக விபரங்களை பின்வரும் தொலைபேசி இலக்கங்களிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

மக்கள் வங்கி: 0112 481 594, 0112 481 320, 0112 481 617, 0112 481 703

இலங்கை மத்திய வங்கி: 0112 398 788, 0112 477 261

# மல்வத்தை ஆரம்ப வைத்திய பிரிவு 23 வருடங்களாக தரமுயர்த்தப்படாதது ஏன்?




அம்பாறை மாவட்டத்தில் மிகவும் பழைமை வாய்ந்த கிராமங்களில் ஒன்றான மல்வத்தைக் கிராமம் நீண்டகாலமாக எல்லா வகையிலும் கவனிப்பாரற்ற கிராமமாகவே காணப்படுகின்றது.

இம்மல்வத்தைக் கிராமத்தைச் சூழ புதுநகரம், கணபதிபுரம், தம்பிநாயகபுரம், திருவள்ளுவர்புரம், மல்லிகைத்தீவு, வளத்தாப்பிட்டி, புதிய வளத்தாப்பிட்டி, ஹிஜிராபுரம், மஜீட்புரம், 26ஆம் காலனி போன்ற 10இற்கும் மேற்பட்ட கிராமங்களைக் கொண்டது. இங்கு மூவின மக்களும் எந்தவிதமான பாகுபாடும் இல்லாமல் வாழ்ந்து வருகின்றனர்..

இந்தக் கிராம மக்களின் வைத்திய தேவையைப் பூர்த்திசெய்ய ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப வைத்தியப் பிரிவு 23 வருடங்களைக் கடந்தும் எந்தவித தரவுயர்வும் இல்லாமல் அதே நிலையில் இருப்பது மிகவும் வேதனையான விடயமாகும்...

இங்கு நிரந்தர வைத்தியரும் இல்லை, தாதியரும் இல்லை. இரவுநேரத்தில் அவசர நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க எந்த வசதியும் இல்லை. அத்துடன், அவசர சிகிச்சைகாக தொலைவிலுள்ள அம்பாறை அல்லது சம்மாந்துறை வைத்தியசாலைகளையே இம்மக்கள் நாடவேண்டியுள்ளது. தேர்தல் காலங்களில் வாக்குகளுக்காக மட்டும் படையெடுக்கும் அரசியல்வாதிகள் இம்மக்களின் குறைகளைக் கேட்டறிந்தும் எந்தவித ஆக்கபூர்வமான செயற்பாடுகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என மக்கள் அங்கலாய்க்கின்றனர்..

சுமார் 10,000இற்கும் மேற்பட்ட மக்கள் வாழும் மல்வத்தை உட்பட சுற்றிவரையுள்ள கிராமங்களின் மிகவும் அத்தியாவசிய தேவையாகிய இந்த வைத்தியசாலையை "சி" தர பிரதேச வைத்தியசாலையாக மாற்றி ஒரு நிரந்தர வைத்தியரும் தாதியும் தங்கியிருந்து சேவை செய்யக்கூடிய வகையில் தரமுயர்த்தப்படவேண்டும் என்பதே மக்களின் கோரிக்கையாகக் காணப்படுகின்றது.

அண்மையில் ஆரம்ப மருந்துப் பராமரிப்பு நிலையமாக இருந்த வான்எல கிராம வைத்தியசாலை "சி" தர வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. எனவே, இது சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு நடவடிக்கை எடுத்து இந்த வைத்தியசாலையை தரமுயர்த்தி மக்களின் அத்தியாவசிய தேவையை நிவர்த்திசெய்ய சுகாதார சேவை அமைச்சு மற்றும் அதிகாரிகளிடம் மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

**இரவிச்சந்திரன் கிருஷ்ணப்பிள்ளை**

# இன்றைய ராசி பலன்கள்

**23.07.2020 (வியாழக்கிழமை)**

**வித்வ கலாபூஷணம் ஜோதிட திலகம்**
**சிவஸ்ரீ வெங்கட சுப்ரமணிய குருக்கள்**

| | |
|---|---|
| மேஷம் - | நலம் |
| ரிஷபம் - | பயம் |
| மிதுனம் - | ஆசை |
| கடகம் - | வாழ்வு |
| சிம்மம் - | நன்மை |
| கன்னி - | கவனம் |
| துலாம் - | ஆர்வம் |
| விருச்சிகம் - | முயற்சி |
| தனுசு - | உயர்வு |
| மகரம் - | கடன் |
| கும்பம் - | பரிவு |
| மீனம் - | உழைப்பு |

**சுப நேரம்**
காலை: 07.32 - 09.02
மாலை: 03.30 - 05.40

**இராகு காலம்**
01.32
03.02

**எம கண்டம்**
06.02
07.32

# சீனாவிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்ட தேயிலை பறிக்கும் இயந்திரம்: நாளாந்த ஊதியத்தை அதிகரிக்கலாம் என்கிறார் மொகான் இன்னதுவகே

(மஸ்கெலியா)

மலையகத்தில் பெருந்தோட்டத் தேயிலை தொழிலாளர்கள் பயிர்ச்செய்கையில் ஈடுபடுதல் குறைந்துவருவதால், தேயிலைக் கொழுந்து பறிக்கும்போது மிகவும் சிரமத்திற்குள்ளாகின்றனர். இதனால், சீனாவிலிருந்து நமது நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள தேயிலை பறிக்கும் இயந்திரத்தின் மூலம் அதிகூடிய பலனைப் பெற முயற்சிக்கவுள்ளதாக அக்கரபத்தனை ஹோல்புருக் பெருந்தோட்ட முகாமையாளர் மொகான் இன்னதுவகே கூறினார்.

தோட்டத் தொழிலாளர் ஒருவர் நாளொன்றுக்கு வேதனத்திற்காக 8 மணித்தியாலத்தில் 18 கிலோ பச்சை கொழுந்தை பறிக்க வேண்டும். ஆகையால் தோட்ட முகாமையாளரால் 750 ரூபா வேதனமாக வழங்கப்படுவதுடன், அதற்கு மேல் பறிக்கப்படும் பச்சை கொழுந்துக்கு 25 ரூபா முதல் 40 ரூபா வரை பல விலைகளில் வழங்கப்பட்டு வருகின்றது.



சம்பளப் பிரச்சினையால் தேயிலை தொழிலில் ஈடுபட தொழிலாளர்கள் முன்வராமையால் தொழிலை கொண்டு செல்வதில் சிறுதோட்ட உரிமையாளர்களும் பெருந்தோட்ட முகாமைத்துவமும் பாரிய பின்னடைவை சந்தித்துள்ளனர். தேயிலை பறிப்பதிலுள்ள சிரமத்தைக் குறைப்பதற்காக தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிலையமான சென். 'கூம்'சில் அவர்களால் புதிய உபகரணங்கள் பல முன்மாதிரியாக எடுத்துக்காட்டப்பட்டது. அந்த புதிய வழிமுறையின்படி முன்னெடுத்துச் செல்ல பெருந்தோட்ட முகாமைத்துவமும் சிறுதோட்ட பயிர்ச்செய்கையாளர்களும் இந்த புதிய உபகரணங்களை பாவிக்காமல் தேயிலைத் தொழிலாளர்களும் பணிக்கு வரவில்லையெனில் மேலதிக பின்னடைவை ஏற்படுத்துகின்றது.

இந்நிலையிலிருந்து மாற்று நடவடிக்கை மேற்கொள்ள பெருந்தோட்ட பயிர்ச்செய்கையாளர்களும், சிறுதோட்ட பயிர்ச்செய்கையாளர்களும் வெளி நாட்டிலிருந்து தேயிலை அறுவடை செய்யும் இயந்திரம் கொண்டுவர முயற்சித்தனர். எனவே, சீனநாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட தேயிலை பறிக்கும் இயந்திரம் இந்நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டது. அந்த இயந்திரம் மூலம் ஒரு மணித்தியாலத்திற்கு 25 கிலோவிற்கும் மேல் தேயிலை பறிக்கப்படலாம் எனவும் அந்த இயந்திரத்தை 6 மணிநேரம் மின்சாரம் மூலம் சார்ஜ் செய்தால் 10 மணிநேரம் தொடர்ந்து தேயிலைக் கொழுந்து பறிக்க முடியும் எனவும் இதனால் சுற்றுச் சூழல் மாசடையாது எனவும் மொகான் இன்னதுவகே கூறினார். மேலும், இந்த இயந்திரத்தின் எடை ஒரு கிலோ என்பது குறிப்பிடத்தக்கது. இதன்மூலம் நாளொன்றுக்கு அதிகளவு பச்சைக்கொழுந்து பறிப்பதால் எமது நாளாந்த ஊதியம் அதிகரிக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பதுளை மாவட்டத்தில் 2015ஆம் ஆண்டைவிட இம்முறை 12 ஆயிரம் வாக்காளர்கள் அதிகரிப்பு

(பதுளை)

பதுளை மாவட்டத்தில் நடைபெறப்போகும் பொதுத் தேர்தலில் 6 இலட்சத்து 68 ஆயிரத்து 166 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனரென்று மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் தமயந்தி பரணகம தெரிவித்தார்.

இந்நிலையில், மஹியங்கனை – 1,05,150, வியலுவை – 54,995, பசறை – 67,196, பதுளை – 59,353, ஹாலி-எல – 74,785, ஊவா – பரணகம – 66,278, வெலிமடை – 80,482, பண்டாரவளை – 89,861, ஹப்புத்தளை – 70,066 என்ற வகையில் 6 இலட்சத்து 68 ஆயிரத்து 165 பேர் வாக்காளர்களாக மேற்படி ஒன்பது தேர்தல் தொகுதிகளிலிருந்து வருகின்றனர்.

இவர்களில், ஒரு இலட்சத்து இருபத்தாராயிரம் பேர் தமிழ் வாக்காளர்களாகவும், ஐம்பதாயிரம் பேரை அண்மித்த வகையிலானோர் முஸ்லிம் வாக்காளர்களாகவும் உள்ளனர்.

இத்தேர்தலில் பன்னிரு அரசியல் கட்சிகளும், பன்னிரு சுயேச்சைக் குழுக்களுமாக ஒன்பது பேரை தெரிவுசெய்ய 288 வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர். இவர்களில் 15 தமிழ்ப் பெண்கள் உள்ளிட்டு 60 தமிழ் வேட்பாளர்களும், முஸ்லிம் பெண் வேட்பாளர் ஒருவர் உள்ளிட்டு 17 முஸ்லிம் வேட்பாளர்களும் உள்ளடங்கியுள்ளனர்.

கடந்த 2015ஆம் ஆண்டைவிட 12 ஆயிரம் வாக்காளர்கள் அதிகரிப்பு 2020இல் ஏற்பட்டுள்ளது. அத்துடன், எட்டு உறுப்பினர்கள் என்ற நிலையிலிருந்து ஒரு உறுப்பினர் அதிகரிக்கப்பட்டு ஒன்பது உறுப்பினர்கள் இம்முறை தெரிவுசெய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

**மொனராகலை மாவட்டம்**

மொனராகலை மாவட்டத்தில் 3 இலட்சத்து 72 ஆயிரத்து 156 பேர் இம்முறை வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனரென்று மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் குணதாச சமரசிங்க தெரிவித்தார்.

மொனராகலை, பிபிலை, வெல்லவாயா ஆகிய இடங்களிலிருந்து இம்முறை 6 பேரைத் தெரிவுசெய்யும் வகையில், 383 வாக்களிப்பு நிலையங்களில் 3 இலட்சத்து 72 ஆயிரத்து 156 பேர் வாக்களிப்பர்.

கடந்த 2015ஆம் ஆண்டு தேர்தலில் ஐந்து ஆசனங்கள் மட்டுமே இம்மாவட்டத்தில் இருந்தன. வாக்காளர் அதிகரிப்பினால் 2020இல் தேர்தலில் ஆறு ஆசனங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த 14ஆம் திகதி முதல் நேற்று வரை 23 ஆயிரத்து 411 பேர் தபால் மூலமான வாக்குகளை வழங்க தகுதிபெற்றிருந்தனர்.




# சினிமாப் பாணியில் கொள்ளை மஸ்கெலியாவில் சம்பவம்

(மஸ்கெலியா)



ஆட்டோ சாரதிக்கு மயக்க மருந்து கொடுத்து, பணம் மற்றும் அவர் அணிந்திருந்த ஆபரணங்களை கொள்ளையர்கள், கொள்ளையிட்டுச்சென்ற சம்பவமொன்று நேற்று முன்தினம் மஸ்கெலியாவில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

மஸ்கெலியா நகரில் 2 ஆவது ஆட்டோ நிறுத்துமிடத்திலிருந்து, நோட்டன் பகுதியில் உள்ள லக்சபானவிற்கு செல்லவேண்டும் எனக்கூறி 3 இளைஞர்கள், ஆட்டோவொன்றை வாடகைக்கு அமர்த்தி பயணித்துள்ளனர். இவ்வாறு செல்லும் வழியில் ஆட்டோ ஓட்டுனருக்கு குளிர்பானம் ஒன்றை வழங்கி குடிக்குமாறு கூறியதுடன், அவர்களும் அருந்தியுள்ளனர்.

ஆட்டோ நோட்டன் பகுதியை அண்மித்த வேளையில், அதன் ஓட்டுனர் மயக்கமடைந்து ஆட்டோ வடிகால் ஒன்றின் அருகில் சென்று நின்றதும் அதில் பயணித்த இளைஞர்கள் ஆட்டோ சாரதியின் பணம், நகை என்பவற்றை கொள்ளையிட்டு தப்பிச்சென்றுள்ளனர். ஆட்டோ சரிந்து கிடப்பதை கண்ட மக்கள், மயக்கமுற்றிருந்த சாரதியை மஸ்கெலியா வைத்தியசாலையில் அனுமதித்தனர். மேலதிக விசாரணைகளை நோட்டன் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# தீவிரவாதிகளுக்கு அடிபணியாத அரசாங்கத்தை அமைப்போம்

## -கோரிக்கை விடுக்கிறார் கெஹெலிய ரம்புக்வெல்ல

(கண்டி)

முப்பது வருடகால நாடாளுமன்ற சம்பிரதாயங்களை மாற்றி தீவிரவாதிகளுக்கு அடிபணியாத அரசாங்கமொன்றை வரலாற்றிலே முதன்முறையாக அமைப்போம் - என்று முன்னாள் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கெஹெலியா ரம்புக்வெல்ல தெரிவித்தார். குண்டசாலைத் தேர்தல் தொகுதியிலுள்ள பலகொள்ள மைதானத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அதில் மேலும் தெரிவித்ததாவது;

எதிர்வரும் பொதுத் தேர்தலையடுத்து தீவிரவாதத்திற்கு அடிபணியாத அரசொன்றை உருவாக்கும் சூழ்நிலை காணப்படுகிறது. எனவே, இதுகால வரை இல்லாத ஒரு நிலைமையை வரலாற்றில் முதன்முதலாக மேற்கொள்ள முடியும். அரசியலமைப்பில் 13ஆவது திருத்தத்தில் அதிகாரப் பரவலாக்கம் தொடர்பாக சில விடயங்களில் சிறைப்பட்டுள்ளோம். அதனை களையவேண்டும். அதேபோல் சுயாதீன ஆணைக்குழுக்கள் என்று கூறிக்கொள்ளும் விடயத்திலும் 19ஆவது திருத்தத்திலு



ள்ள விடயங்கள் மாற்றப்படவேண்டும். இவையனைத்தையும் மேற்கொள்ள ஜனாதிபதிக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை தேவை. அதேபோல் அரசின் முக்கிய வேலைத்திட்டமான 'செழிப்பின் பார்வை' (சௌபாக்கியே இதிரி தெக்ம) என்ற பணியை முடிப்பதற்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவைப்படுகிறது.

இன்று நாட்டில் சம்பிரதாய வாக்களிப்பு தெரிவு முறையில் வேறுபாடொன்று ஏற்பட்டுள்ளது. நாட்டை அபிவிருத்தி செய்யக்கூடிய கட்சி எது என்பதை மக்கள் உணர்ந்து வாக்களிக்கும் ஒரு புதிய அணுகுமுறை ஏற்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் அப்பணியை முன்னெடுக்கக்கூடிய ஒரே கட்சி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்ற கட்சி மட்டுமேயாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஸ்தாபகர் டி.எஸ்.சேனாநாயக்கவுக்கு பிரதியீடாக்கக்கூடிய தலைவர் தற்போது ஐக்கிய தேசியக் கட்சியிலும் இல்லை, ஐக்கிய மக்கள் சக்தியிலும் இல்லை. சஜித்தோ, ரணிலோ அதற்கு ஒப்பாக மாட்டார்கள். வாக்காளர்கள் அதனையே புரிந்துவைத்துள்ள காரணத்தால் சம்பிரதாய வாக்கு தெரிவுமுறையை கைவிட்டு நாட்டை அபிவிருத்திசெய்யும் கட்சிக்கு வாக்களிக்க வேண்டுகிறேன் - - என்றார்.

# நானுஓயா வீதியில் 75அடி பள்ளத்தில் முச்சக்கரவண்டி குடைசாய்ந்தது: 20 வயது இளைஞன் பலி; காயமடைந்த சாரதி பொலிஸாரால் கைது!

(தலவாக்கலை)

நானுஓயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நானுஓயா கிலாசோ ஆர்.டி.ஒன்று என்ற பகுதியில் வீதியை விட்டுவிலகி முச்சக்கர வண்டியொன்று விபத்துக்குள்ளானதில் 20 வயது இளைஞன் ஒருவன் பலியாகியுள்ளார்.



இந்த விபத்து சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் இடம்பெற்றதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். சம்பவத்தில் பலத்த காயங்களுக்குள்ளான முச்சக்கரவண்டியின் சாரதி தப்பித்துச் செல்ல முற்பட்டபோது சாரதியை கைதுசெய்த பொலிஸார், அவரை நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது;

நானுஓயா பகுதியிலிருந்து கிலாசோ மேற்பிரிவு தோட்டப் பகுதிக்குச் சென்ற முச்சக்கரவண்டி மீண்டும் நானுஓயாவை நோக்கி பயணித்துக்கொண்டிருந்தவேளை 75அடி பள்ளத்தில் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் முச்சக்கரவண்டியின் பின்னால் சென்ற இளைஞனே உயிரிழந்துள்ளதாகவும், சம்பவத்தில் உயிரிழந்த இளைஞன் நானுஓயா பெரகும்பர பகுதியைச் சேர்ந்த கே.யோகேஸ்வரன் என அடையாளம் காணப்பட்டுள்ளார் எனவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது

சம்பவத்தில் பலியான இளைஞனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதோடு, பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 'வாசலுக்கு வரும் கோடை கால தூறல்' எதிர்நீச்சல் வெளியீட்டகத்தின் நூல் வெளியீடு

(கண்டி)

மடவளை 'எதிர்நீச்சல்' வெளியீட்டகம் ஏற்பாடுசெய்துள்ள கவிதைநூல் வெளியீட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மடவளை மதீனா மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மடவளை அன்சார் எம்.ஷியாம் எழுதியுள்ள 'வாசலுக்கு வரும் கோடை காலத் தூறல்' என்ற கவிதைநூல் மேற்படி வைபவத்தில் வெளியிடப்படவுள்ளது. எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மடவளை மதீனா தேசிய பாடசாலை அஷ்ரப் கேட்போர் கூடத்தில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

மாத்தளை இஸ்லாமிய தமிழ் இலக்கிய பேரவை செயலாளர் எம்.எம்.பீர்முஹமது தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக தேசகீர்த்தி அல்ஹாஜ் பௌஸ் ஏ.காதர் கலந்துகொள்வார். வரவேற்புரையை எழுத்தாளர் அக்ரம் வழங்க, நூல் பற்றிய கருத்துரையை சமூக சமயப் பேச்சாளர் முத்தையாபிள்ளை ஸ்ரீகாந்தன் ஆற்றவுள்ளார். விமர்சன உரையை எழுத்தாளர் இரா.நித்தியானந்தனும், முன்னாள் கல்விப் பணிப்பாளர் ஏ.ரஷீட்டும் வழங்குவர். அவ்வைபவத்தில் அல்ஹாஜ். எஸ்.எம்.நுஸ்ரி சவ்பர்தீன் முதற் பிரதியை பெற்றுக்கொள்ள ஏற்புரையை நூலாசிரியர் நிகழ்த்தவுள்ளார்.

# சஜித்தை ஜனாதிபதியாக்க வாக்குகேட்ட ஐ.தே.க. பிரதமராக்க நினைக்கையில் ஏற்க மறுப்பது ஏன்?

## - கேள்வியெழுப்புகிறார் திலகர்

கடந்த பொதுத்தேர்தலில் நாங்கள் அனைவருமே ஐக்கிய தேசிய முன்னணியாக போட்டியிட்டோம். ஜனாதிபதித் தேர்தலில் யானைக்கு சுகமில்லாமல் போனபோது ஐக்கிய தேசிய முன்னணி போட்டியிட்டது. அப்போது சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதியாக்குவதற்கு வாக்கு கேட்ட ஐக்கிய தேசிய கட்சிக்கு அதே சஜித் பிரேமதாஸவை பிரதமராக்க வேண்டும் எனும்போது அதனை ஏற்க முடியாது போனது என புரிந்து கொள்ள முடியாதுள்ளது. எனவே, ஜனாதிபதி தேர்தலின்போது போலவே "எலிபன்டுக்கு" சுகமில்லை. அதனால் "ரெலிபோன்" வந்திருக்கிறது - என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தேசிய பட்டியல் வேட்பாளர் எம்.திலகராஜ் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் இரத்தினபுரி மாவட்டத்தின் பலாங்கொட, மாரத்தன்ன தோட்டத்தில் இடம்பெற்றது. ஐக்கிய மக்கள் சக்தியின் மாவட்ட தலைவரும் முன்னாள் அமைச்சருமான தலதா அத்துக்கோரள, ஆசிரியர் எம்.சந்திரகுமார், கியாஸ் ஆகிய மூன்று வேட்பாளர்களும் கலந்துகொண்டிருந்த இந்த பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே திலகராஜ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஐக்கிய மக்கள் சக்தியின் தலதா அத்துக்கோரளவின் பரம்பரையே ஐக்கிய தேசிய கட்சி வழிவந்தவர்கள்தான். தமிழ் முற்போக்குக் கூட்டணி உறுப்பினர்களான நானும் ஆசிரியர் சந்திரகுமாரும் ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்தவர்கள் அல்ல. ஆனாலும் கடந்த பொதுத் தேர்தலில் நாங்கள் எல்லோரும் ஐக்கிய தேசிய முன்னணியாக போட்டியிட்டவர்கள்தான். இந்த முறையும் அதே மூவரும் இங்கே ஒரே கூட்டணியிலியே இருக்கிறோம். அதன் பெயர் மாறியிருக்கிறது. சின்னம் மாறி இருக்கிறது. கடந்த கால்நூற்றாண்டு காலமாக அவ்வப்போது யானைக்கு சுகமில்லாது போனபோது ஐக்கிய தேசிய கட்சியே மூன்று தடவை அன்னம் சின்னத்தில் வாக்கு கேட்டதை மறந்துவிடக்கூடாது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதியாக்க ஐ.தே.கவினர் அனைவரும் யானை இல்லாத சின்னம் ஒன்றில் வாக்கு கேட்டு வந்தனர். ஆனால், அவரையே இப்போது பிரதமராக்க யானையில்தான் வரவேண்டும் என அடம்பிடித்தது ஏன் எனத் தெரியவில்லை. எனவே, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நேர்ந்தது போல் "எலிபன்டுக்கு" சுகமில்லை. அதனால் ரெலிபோன் வந்திருக்கிறது - என்றார்.

# 1000 பாலங்கள் அபிவிருத்திசெய்யும் வேலைத்திட்டம்: பொதுஜன பொறியியலாளர்கள் அமைப்பினர் தீர்மானம்!

(இரத்தினபுரி)

நாட்டில் கஷ்ட பிரதேசங்களை தெரிவுசெய்து பாவனைக்குதவாத மின் கம்பங்களை பயன்படுத்தி ஆயிரம் பாலங்கள் அமைக்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபைத் தலைவரும் இலங்கை பொதுஜன பொறியியலாளர் பெரமுன அமைப்பின் தலைவருமான பொறியியலாளர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இலங்கை பொதுஜன பொறியியலாளர் பெரமுன அமைப்பின் மூலம் யட்டியாந்தோட்டை தேர்தல் தொகுதியில் முதலாவதாக அமைக்கப்பட்டஇரண்டு பாலங்களை திறந்துவைக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் இடம்பெற்றபோது அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யட்டியாந்தோட்டை தேர்தல் தொகுதியில் உடுகும்புர மற்றும் கனேபல ஆகிய பிரதேசங்களில் அமைக்கப்பட்ட பாலங்களே இவ்வாறு திறந்துவைக்கப்பட்டன.

இது குறித்து அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

மேற்படி பாலங்கள் அமைப்பதற்கு அரசாங்கத்தின் மூலம் எவ்வித நிதியோ அல்லது பொருட்களோ, உதவிகளோ பெற்றுக்கொள்ளப்படவில்லை. பாவனைக்குதவாத மின் கம்பங்களை கொண்டும் மற்றும் இலங்கை பொதுஜன பொறியியலாளர் பெரமுன அமைப்பின் உறுப்பினர்களால் சேகரிக்கப்பட்ட நிதியின் மூலம் மேற்படி பாலங்கள் அமைக்கப்பட்டு வருவதாகவும் இலங்கை மின்சார சபைத் தலைவரும் இலங்கை பொதுஜன பொறியியலாளர் பெரமுன அமைப்பின் தலைவருமான பொறியியலாளர் விஜித ஹேரத் மேலும் தெரிவித்தார்.





இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ மற்றும் யட்டியாந்தோட்டை பிரதேச சபைத் தலைவர் கே.டி.வசந்த, இலங்கை பொதுஜன பொறியியலாளர் பெரமுன அமைப்பின் உறுப்பினர்களான ஜானக மலவிஆராச்சி, பேராதெனிய பல்கலைக்கழகத்தின் பொறியியலாளர் பிரிவின் பேராசிரியர் ரஞ்ஜித் திசாநாயக்க உட்பட அரச அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# கைப்பற்றிய போதைப்பொருட்களை விற்றே சொத்து சேர்த்த பொலிஸ் உத்தியோகத்தர்கள்!





பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்ட ஹெரோயின் போதைப்பொருளை கடத்தல்காரர்களுக்கே மீள விற்பனைசெய்தமை தொடர்பில் கைதுசெய்யப்பட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளுக்கு பொலிஸ் விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த சில அதிகாரிகள் ஆதரவுடன் பாதுகாப்பும் பெற்றுக் கொடுத்துள்ளமை தெரியவந்துள்ளதாகவும், அவர்களையும் விரைவில் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த இருப்பதாகவும் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் கொழும்பு பிரதான நீதிவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் தெரிவித்தார்.

போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்ட போதைப்பொருளை கடத்தல்காரர்களுக்கே மீள விற்பனை செய்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைகள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.

இதன்போது சந்தேகநபர்கள் அனைவரும் கொவிட் – 19 வைரஸ் பரவல் காரணமாக அங்குணுகொலபலஸ்ஸ சிறைச்சாலையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக சிறைச்சாலை திணைக்களத்தினால் நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டது.

ராகம – பட்டுவத்த பகுதியைச் சேர்ந்த பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் விமலசேன லயனல், களுத்துறை – நாகொட பகுதியைச் சேர்ந்த உப பொலிஸ் பரிசோதகர் கயான் தரங்க பிரேமரத்ன சில்வா, மாலம்பே பகுதியைச் சேர்ந்த சார்ஜன் முத்துபண்டாகே சமிந்த லக்ஸ்மன் ஜயதிலக்க, கேகாலை – ஹெட்டிமுல்ல பகுதியைச் சேர்ந்த சார்ஜன் ஜயசிங்ககே சமன் குமார ஜயசிங்க, பாதுக்க – கனேகொட பகுதியைச் சேர்ந்த சார்ஜன் வதுகாரகே விமல பிரசாத் வதுகார, பன்னிப்பிட்டிய – மாக்கும்புர பகுதியைச் சேர்ந்த கான்ஸ்டபிள் பட்டுவத்தக ருவன் புஸ்பகுமார, பிங்கிரிய பகுதியைச் சேர்ந்த கான்ஸ்டபிள் ரத்துகமகே அஷங்க இந்திரஜித் ரத்துகமகே, திரப்பனை பகுதியைச் சேர்ந்த கான்ஸ்டபிள் சமித் பிரதீப் குமார, கிரிந்திவெல பகுதியைச் சேர்ந்த கான்ஸ்டபிள் வன்னியாராச்சிகே லக்ஷான் சமீர, கெடலாவ – கொகாவெல பகுதியைச் சேர்ந்த கான்ஸ்டபிள் ஹேரத் முதியன்சேலாகே லலித் ஜயவர்தன, கன்துன – வனதிவெல பகுதியைச் சேர்ந்த உப பொலிஸ் பரிசோதகர் தஹனக ராலளாகே அத்துல ஜயந்த பண்டார மற்றும் ஆட்டிகம பகுதியைச் சேர்ந்த ஜயசிங்க ஆராச்சிகே தினேஷ் நிர்மல ஆகியோரே கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களாவர்.

முறைப்பாட்டாளர்கள் சார்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப்ப பீரிஸ், அரச சட்டவாதி நுவன் ஆட்டிகல, அரச சட்டவாதி கசுன் சரச்சந்திர, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மெரில் ரஞ்சன் லமாஹேவா, பிரதான பொலிஸ் பரிசோதகர் லலித் திசாநாயக்க, பொலிஸ் பரிசோதகர் விஜேசூரிய, பொலிஸ் பரிசோதகர் உபாலி பண்டார ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

பிரதிவாதிகள் சார்பில் சட்டத்தரணி அஜித் பத்திரண, சட்டத்தரணி வசந்த பிட்டிகல, சட்டத்தரணி டம்மிக்க ரத்நாயக்க ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

இதன்போது பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் தெரிவித்ததாவது:

பொலிஸ் பரிசோதகர் சமன் பொறுப்பிலிருந்து கைப்பற்றப்பட்ட துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் தொடர்பில் அரச இரசாயன பரிசோதகரினால் பரிசோதனைகளை மேற்கொண்டு அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த சந்தேகநபர்கள் பலப்பிட்டி பகுதியில் அமைந்துள்ள 'விலா' எனும் பாதுகாப்பு வீட்டில் தங்கியிருந்து கடந்த 2018ஆம் ஆண்டு தொடக்கம் சுற்றிவளைப்புகளில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

பாகிஸ்தான் கப்பலொன்றில் ஏற்றிவரப்பட்ட 243 கிலோ ஹெரோயின் போதைப்பொருளை இவர்கள் கடலிலிருந்து எடுத்துவந்தனர்.

இதன்போது 5 துப்பாக்கிகளையும் எடுத்து வந்துள்ளனர்.

அதில் ஒரு துப்பாக்கி காணாமல் போயுள்ளது. தற்போது மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள கெமிலஸ் பிள்ளை என்பவரே இந்தக் கடத்தல்களில் பின்னணியிலுள்ளார்.

இவர்கள் போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு போதைப்பொருட்களை நாட்டுக்குள் கொண்டுவருவதற்கு உதவி ஒத்தாசைகளை வழங்கியுள்ளனர்.

ஆழ்கடலில் இருந்த போதைப்பொருட்களை எடுப்பதற்காக போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் படகில் சென்றுள்ளதுடன், அதன்போது படகை செலுத்திய நபருக்கு ஒரு கோடி ரூபா பணத்தை இந்த அதிகாரிகள் பெற்றுக்கொடுத்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

மீன் பிடித்து வருவதாக காண்பித்தே இந்த போதைப்பொருட்களை எடுத்துவந்துள்ளதுடன், மீன் கொள்வனவுக்கு 15 இலட்சம் ரூபாவும், எண்ணெய்க்கு 5 இலட்சம் ரூபா என்ற அடிப்படையிலே இந்தப் பணம் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

இவர்கள் செய்மதி வசதிகளைக்கொண்ட தொலைபேசியை பயன்படுத்தியுள்ளார்கள். இதற்கான கட்டணத்தை சிங்கப்பூர், டுபாய் போன்ற நாடுகளிலேயே செலுத்தவேண்டும்.

இவ்வளவு தொகை பணம் எவ்வாறு பொலிஸாருக்குக் கிடைக்கப்பெறும்?. இந்தளவு பணம் அவர்களுக்குக் கிடைப்பதற்கு வசதியில்லை. இந்நிலையில், வீரசிங்கம் என்ற உத்தியோகத்தரிடமிருந்து 320 இலட்சம் ரூபா கைப்பற்றப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி கைப்பற்றப்பட்ட ஹெரோயின் தொகையில் 11 பக்கற்றுகளை முதல் சந்தேகநபர் பொதி செய்துள்ளார்.

90 சதவீதத்திலான சர்வதேச தருவிப்பாளர்களுக்கு தூய்மையான ஹெரோயின் வழங்கப்படுகின்றது. அதனை இவர்கள் கலப்படம் செய்து பொதிசெய்கின்றனர். ஒரு கிராம் ஹெரோயின் விலை 12 ஆயிரம் ரூபாவாகும்.

இந்தக் குழுவினர் பிரதிப் பொலிஸ்மா அதிபரினால் தெரிவுசெய்யப்பட்ட குழுவினராவர். இவர்கள் நேரடியாகவே பிரதிப் பொலிஸ்மா அதிபரிடமே தங்களது செயற்பாடுகள் தொடர்பில் அறிவிப்பார்கள்.

இதுவரையில் 115 மில்லியன் ரூபாவை சொத்துகளாக சேமித்துள்ளனர். அடிப்படையான 33 மில்லியன் பெறுமதியான சொத்தும், 43 வங்கிக் கணக்குகள், 20 பவுண் தங்கநகைகள் போன்ற சொத்துகளை சேமித்துவைத்துள்ளனர். இவர்களுடன் நெருங்கி செயற்படும் பொலிஸ் விசேட அதிரடிப்டையினர் இதற்கு ஆயுதங்களுடன் பாதுகாப்பு அளித்துள்ளதாக தெரியவந்துள்ளது. இது தொடர்பில் விரைவில் அறியப்படுத்துவேன்.

ரத்நாயக்க என்ற அதிகாரியின் தோட்டத்தில் புதைக்கப்பட்டிருந்த 300 இலட்சம் தொகை பணம் மீட்கப்பட்டுள்ளது. மூன்று வருட காலத்தில் சேகரிக்கமுடியாத அளவுக்கு பணத்தை சேமித்துக் கொண்டுள்ளனர்.

பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி முறைபாட்டாளர்களால் முன்வைக்கப்பட்ட மேலதிக விசாரணை அறிக்கையையும், சாட்சி சுருக்கத்தையும் ஆராய்ந்து பார்த்து எதிர்வரும் வழக்கு விசாரணையின்போது விளக்கமளிப்பதாக தெரிவித்தார்.

எதிர்வரும் வழக்கு விசாரணையின்போது சந்தேகநபர்கள் அனைவரையும் மன்றில் முன்னிலைப்படுத்துமாறு சிறைச்சாலை ஆணையாளருக்கு அறிவிப்பதாக நீதிவான் மன்றுக்கு தெரிவித்ததுடன், விசாரணையின்போது மீட்கப்பட்ட துப்பாக்கி மற்றும் தோட்டா தொடர்பில் அரச இரசாயன பகுப்பாய்வு அதிகாரிகளினால் பரிசோதனையை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டார்.

இதனையடுத்து சந்தேகநபர்கள் அனைவரையும் எதிர்வரும் ஒகஸ்ட் 4ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

# புதிய கடற்படைத் தளபதி இராணுவ தலைமையகத்திற்கு விஜயம்





புதிதாக நியமிக்கப்பட்ட 24ஆவது கடற்படைத் தளபதியான வைஸ் அட்மிரல் நிஷாந்த உளுஹேதென்ன நேற்றுமுன்தினம் ஸ்ரீ ஜயவர்தனபுரவில் அமைந்துள்ள இராணுவத் தலைமையகத்திற்கு விஜயத்தை மேற்கொண்டு கொவிட் நிலையத் தலைவரும், பாதுகாப்புத் தலைமை பிரதானி மற்றும் இராணுவத் தளபதியுமான லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வாவை சந்தித்தார்.

இராணுவத் தலைமையகத்திற்கு வருகைதந்த கடற்படைத் தளபதியை தலைமையக நுழைவாயிலில் வைத்து இராணுவத் தலைமையகத்தின் பட்டாலியன் தலைமையக கட்டளை அதிகாரியான கேர்ணல் இந்திக பெரேரா வரவேற்றார்.

பின்பு இராணுவத் தலைமையகத்திற்கு வருகைதந்த கடற்படைத் தளபதியை இராணுவ நிறைவேற்றுப் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சூல அபேநாயக்க வரவேற்று பின்னர் இராணுவ சம்பிரதாய முறைப்படி இராணுவ பீரங்கிப் படையணியினரால் அணிவகுப்பு மரியாதைகள் வழங்கி வரவேற்கப்பட்டார்.

பின்னர் இராணுவத் தளபதியின் பணிமனைக்குச் சென்ற கடற்படைத் தளபதியை இராணுவத் தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா வாழ்த்துகளைத் தெரிவித்து வரவேற்று பின்னர் இராணுவத் தலைமையகத்திலுள்ள மூத்த உயரதிகாரிகளை கடற்படைத் தளபதிக்கு அறிமுகப்படுத்திவைத்தார்.

பின்னர் கடற்படைத் தளபதி மற்றும் இராணுவத் தளபதி இருவருக்குமிடையில் நல்லுறவை மேம்படுத்தும் நோக்கத்துடன் - கடந்த கால நினைவுகளை பகிர்ந்துகொள்ளும் நோக்கத்துடன் கலந்துரையாடல்கள் இடம்பெற்று இருவருக்கும் இடையில் இந்தச் சந்திப்பை நினைவுபடுத்தும் முகமாக நினைவுச்சின்னங்கள் பரிமாறப்பட்டன.

இறுதியில் கடற்படைத் தளபதியால் பிரமுகர்களின் வருகையை முன்னிட்டு கையொப்பமிடும் புத்தகத்தில் கையொப்பமிட்டு தனக்கு கௌரவ மரியாதையை வழங்கிய இராணுவ தளபதிக்கு நன்றியைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் கடந்த 15ஆம் திகதி 24ஆவது புதிய கடற்படைத் தளபதியாக வைஸ் அட்மிரல் நிஷாந்த உளுஹேதென்ன நியமிக்கப்பட்டார்.

புதிய கடற்படைத் தளபதி 1985 ஆம் ஆண்டு 13 ஆவது பயிற்சி கெடெற் அதிகாரியாக இணைந்து திருகோணமலை கடற்படை முகாமில் அடிப்படை பயிற்சியைப் பெற்றுக்கொண்டார். இந்தப் பயிற்சியை வெற்றிகரமாக நிறைவுசெய்ததன் பின்பு, அவர் 1987ஆம் ஆண்டு ஜனவரி 7 ஆம் திகதி இரண்டாவது லெப்டினனாக நியமிக்கப்பட்டார். பின்னர் இவர் அடுத்தடுத்த தரவரிசைகளுக்கு சீராக உயர்த்தப்பட்ட பின்னர், அவர் 2015ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி ரியர் அட்மிரல் பதவிக்கு உயர்த்தப்பட்டார்.

கொழும்பு றோயல் கல்லூரியில் தனது கல்வியை மேற்கொண்ட இவர், இருமுறை ஹேர்மன் லூஷ் கிண்ணத்தை வென்று சிறந்த கெடற் அதிகாரியாக விளங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது..

# இத்தாலியிலுள்ள இலங்கைத் தொழிலாளர்களுக்கு வெளிநாட்டு உறவுகள் அமைச்சினால் விசேட உதவி

சண்ரரோரியா 2020 திட்டத்தின்கீழ் 2020 ஜூன் 01 முதல் ஒகஸ்ட் 15 வரையான காலப்பகுதிக்கு இத்தாலிய அதிகாரிகள் வழங்கியுள்ள பொதுமன்னிப்பின் மூலமாக பயன்களை அடைந்துகொள்வதற்காக இத்தாலியிலுள்ள இலங்கைத் தொழிலாளர்களுக்கு உதவும் முகமாக வெளிநாட்டு உறவுகள் அமைச்சர் தினேஷ் குணவர்தனவினால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

'கொவிட்-19' சூழலில் இலங்கைத் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை கருத்திற்கொண்டு, இலங்கையின் கடவுச்சீட்டுக்காக விண்ணப்பிக்கும் தொழிலாளர்களிடமிருந்து போதிய ஆவணங்கள் இல்லாத காரணத்தினால் அறவிடப்படும் அபராதக் கட்டணத்தை தள்ளுபடி செய்து, கட்டணங்களை 140 யூரோவாக (330 யூரோ மற்றும் 420 யூரோவிலிருந்து) குறைப்பதற்கு அமைச்சர் குணவர்தன நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்.




இந்த முயற்சியானது, தற்போது இத்தாலியில் தங்கியுள்ள 20,000 இலங்கைத் தொழிலாளர்களுக்கு பயனளிப்பதாக அமைவதுடன், அவர்கள் இலங்கையின் கடவுச்சீட்டுகளைப் பெற்றதன் பின்னர் இத்தாலியில் பணிபுரிவதற்கான விசாக்களுக்கு விண்ணப்பிக்க முடியுமென வெளிநாட்டு உறவுகள் அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இனவாத சக்திகளை முறியடிக்கும் சக்தி ஐக்கிய தேசிய கட்சியிடம் மாத்திரம் உள்ளது

**வன்னி வேட்பாளர் ஜேம்ஸ் பிரமிளஸ் கொஸ்தா**



(மன்னார் )

தென்னிலங்கையில் இனவாதத்தை தூண்டிக் கொண்டிருக்கும் ராஜபக்ஷவின் கட்சியை தமிழ், முஸ்லிம் மக்கள் நிராகரிப்பதோடு, சிறுபான்மை மக்கள் சுபீட்சமாக வாழ்வதற்கு ஐக்கிய தேசிய கட்சிக்கு வாக்களிக்க வண்டும் - என்று நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஜேம்ஸ் பிரமிளஸ் கொஸ்தா தெரிவித்தார்.

மன்னாரிலுள்ள ஐக்கிய தேசிய கட்சி அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசிய கட்சி - யானை சின்னத்திற்கு பெரும்பான்மையான வாக்குகள் கிடைக்கும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

இறுதி யுத்தத்தில் காணாமல்போனவர்களின் பிரச்சினை, சரணடைந்தவர்களுடைய பிரச்சினை, சிறையில் வாடும் இளைஞர்களின் பிரச்சினை என்று தமிழ் மக்களுக்கு கொடுங்கோல் ஆட்சி செய்தவர் மஹிந்த ராஜபக்ஷ என்றவகையில் அவருடைய ஆட்சியை ஏற்படுத்த தென்னிலங்கையிலே இனவாத சக்திகள் கங்கணங்கட்டிக்கொண்டு நிற்பதை ஊடகங்களூடாக அறியமுடிகிறது.

எனவே, வன்னி மாவட்ட மக்களே இந்த நாட்டில் தலைதூக்கியுள்ள இனவாத சக்திகளை முறியடிக்கக்கூடிய ஒரே பலம் ஐக்கிய தேசிய கட்சிக்கு மாத்திரம்தான் இருக்கிறது என்பதை இந்த இடத்தில் ஆணித்தரமாக கூறுகின்றோம்.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் காலத்தில் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இருந்த சோதனைச்சாவடிகள் அகற்றப்பட்டன. தமிழ் மக்களின் பூர்வீக காணிகள் தமிழர்களுக்கே வழங்கப்பட்டன. அதேபோல் 20 ஆயிரம் வீடுகள் தமிழ் மக்களுக்கு கட்டிக்கொடுக்கப்பட்டன.


அவரது ஆட்சியில் தமிழ், முஸ்லிம் மக்கள் பாதுகாப்புடன் வாழக்கூடிய சூழ்நிலை காணப்பட்டது. தமிழர்களுடைய நீண்டகால பிரச்சினைக்குத் தீர்வாக புதிய அரசியலமைப்பு வரைபை ரணில் விக்கிரமசிங்க உட்பட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து தயாரித்தார்கள். ஆனால், மஹிந்த ராஜபக்ஷவின் இனவாத சக்திகள் அந்த வரைபை நாடாளுமன்றத்திற்கு கொண்டுவரமுடியாமல் தடுத்தார்கள்.

அப்படியான ஓர் இனவாத சக்தியை எந்தக்காரணம் கொண்டும் தமிழ், முஸ்லிம் மக்கள் வன்னி மாவட்டத்தில் ஆதரிக்கவேண்டாம் என்பதை மிகவும் வினயமாகக் கேட்டுக்கொள்கின்றோம் என்றார்.

இதன்போது ஐக்கிய தேசிய கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளரும்,வேட்பாளருமான அப்துல் சமீயு முஹம்மது பஸ்மி கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஐஸ் போதைப்பொருள் விற்பனைசெய்த இருவர் கைது!





ஹெரோயின் போதைப்பொருள் வியாபாரத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டு ரயிடர் எனும் பெயருடைய சந்தேகநபர் வழங்கிய தகவலுக்கமைய ஐஸ் போதைப்பொருள் விற்பனை செய்துவந்த சந்தேகநபரொருவரும் சந்தேகத்துக்குரிய பெண் ஒருவரும் அத்துருகிரிய பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் தலங்கம, அத்துருகிரிய, கடுவல, நவகமுவ ஆகிய பிரதேசங்களில் ஐஸ் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுப்பட்டுவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேகநபரிடமிருந்து 125 கிலோகிராம் ஐஸ் போதைப் பொருளும் குறித்த பெண் சந்தேகநபரிடமிருந்து 25 கிலோகிராம் ஐஸ் போதைப்பொருளும் கைப்பறப்பட்டுள்ளன.

மேலும், இவர்கள் அங்கொடை, ஹிம்புட்டான பிரதேசத்தில் வசித்து வந்துள்ளதோடு அவர்கள் தங்கியிருந்த வீட்டை சோதனை செய்தபோது போதைப் பொருள் வியாபாரத்துக்காக பயன்படுத்தப்பட்ட 5 மோட்டார் சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக அத்துருகிரிய பொலிஸ் பிரிவு தெரிவித்துள்ளது.

# மன்னாரில் கேரள கஞ்சா பொதிகளுடன் ஒருவர் கைது



(மன்னார் )

மன்னார் சின்னக்கரிசல் பகுதியில் சுமார் 6 கிலோ எடை கொண்ட கேரள கஞ்சா பொதிகளுடன் குறித்த கிராமத்தைச் சேர்ந்த 32 வயதுடைய நபர் ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு மன்னார் மாவட்ட பொலிஸ் ஊழல் தடுப்புப் பிரிவு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பண்டுல்ல வீரசிங்கவின் அறிவுறுத்தலின்கீழ் மன்னார் பொலிஸ் நிலைய தலைமையகப் பொறுப்பதிகாரி கிருசாந்தனின் வழிகாட்டலுக்கு அமைவாக மன்னார் மாவட்ட ஊழல் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் குமார தலைமையிலான குழுவினர் சின்னக் கரிசல் பகுதிக்கு சென்று மேற்கொண்ட நடவடிக்கையின்போது மூன்று பொதிகளில் பொதிசெய்யப்பட்ட சுமார் 6 இலட்சம் ரூபா பெறுமதியான 6 கிலோ 90 கிராம் எடை கொண்ட கேரள கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டன.

மேலும், கஞ்சா பொதிகளை தனது உடைமையில் வைத்திருந்த குறித்த கிராமத்தைச் சேர்ந்த 32 வயதுடைய நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழர் அரசியல் சூழல் கவலையான நிலைமையில்; யாருக்கு வாக்களிக்கலாம்?

**மன்னார் ஆயர் விசேட அறிக்கை!**



(மன்னார்)

"தமிழ் மக்களாகிய நமக்கு இன்று இருக்கக்கூடிய ஒரேயொரு ஆயுதம் நமது வாக்குச்சீட்டுத்தான். எனவே, அதை நாம் முறையாகப் பயன்படுத்தி தகுதியான பிரதிநிதிகளை நாடாளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டும். இது விடயத்தில் நாம் அலட்சியமாக இருக்கக்கூடாது" என மன்னார் மறைமாவட்ட ஆயர் பிடேலிஸ் லயனல் இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மன்னார் மறைமாவட்ட ஆயர் பிடேலிஸ் லயனல் இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை மறைமாவட்ட இறைமக்களுக்கு எழுதும் மேய்ப்புப்பணித் திருமடலில் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த திருமடலில் அவர் மேலும் குறிப்பிடுகையில், ஓர் இக்கட்டான சூழ்நிலையில் நாம் மீண்டும் ஒரு பொதுத் தேர்தலைச் சந்திக்கின்றோம். கொரோனா வைரஸ் நோயின் தாக்கமும், அச்சமும் நிறைந்த இக்காலகட்டத்தில் இந்தத் தேர்தல் நம்மை நோக்கி வருகின்றது.

இன்றைய எமது அரசியல் சூழ்நிலை, தமிழ்த் தேசியத்தின் அடிப்படைகள், தீர்க்கப்படாத தொடரும் பிரச்சினைகள், ஜனநாயக உரிமைகளைப் பயன்படுத்துவதன் அவசியம், வேட்பாளர்களை எப்படி இனங்காண்பது, எப்படிப்பட்ட பிரதிநிதிகளை நாம் தேர்ந்தெடுக்க வேண்டும் போன்றவை குறித்து சில சிந்தனைகளை உங்களோடு பகிர்ந்துகொள்ள விளைகின்றேன்.

இன்று உலகில் பெரும்பாலான நாடுகளில் ஜனநாயக ஆட்சிமுறை நடைமுறையில் உள்ளது. இந்நிலையில், கிறிஸ்தவர்கள் தம் நாட்டு அரசியலுக்கு அப்பாற்பட்டவர்களாக அல்லது அரசியலிலிருந்து ஒதுங்கிக் கொண்டவர்களாக இருக்கமுடியாது.

மாறாது பொறுப்புள்ள குடிமக்கள் என்ற வகையில் தமது அரசியல் கடமைகளை தவறாது நிறைவாக ஆற்றவேண்டும். அரசியல் புனிதமானது. ஆனால் தவறானவர்கள் அதற்குள் நுழைவதனால் அது சிலவேளை சாக்கடையாகின்றது.

இந்தப் புனிதமான அரசியலில் எல்லா மக்களைப்போல கிறிஸ்தவர்களும் ஈடுபட வேண்டும் எனத் திருச்சபை விரும்புகின்றது, ஊக்குவிக்கின்றது. அதேவேளை, மிக முக்கியமான, மிக அவசியமான சூழ்நிலையில் அன்றி பொதுவாகத் திருச்சபை கட்சி அரசியலில் ஈடுபடுவதில்லை.

### இன்றைய எமது சூழ்நிலை

இன்றைய எமது நாட்டு அரசியல் சூழ்நிலை மிகவும் சிக்கலானதாக உள்ளது. பெரும்பான்மை மக்களின் நலன்களை முதன்மைப்படுத்தும் அரசியல் தலைமையே இன்று நாட்டில் காணப்படுகின்றது.

தமிழ் அரசியல் நிலைமை இன்னும் குழப்பமானதாக உள்ளது. முன்பு ஓரளவுக்கேனும் இருந்த ஒற்றுமை நிலைமை இன்று இல்லாது போய்விட்டது. உதாரணமாக, வன்னித் தேர்தல் நிலைமையை எடுத்துக்கொண்டால் வரலாற்றில் என்றுமில்லாதவாறு ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கு 45 கட்சிகளைச் சேர்ந்த 405 உறுப்பினர்கள் இத்தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

தமிழர் அரசியல் எந்தளவுக்கு சிதறிச் சின்னாபின்னமாகி இருக்கிறது என்பது இதிலிருந்து புலனாகின்றது.

ஒரு ஜனநாயக நாட்டில் யாரும் போட்டியிடலாம், எத்தனை பேரும் போட்டியிடலாம் என்ற நிலைப்பாடு இருந்தாலும், தமிழர் அரசியல் பலம் சிதறிடிக்கப்பட்டுள்ளது என்பது இத்தேர்தலில் வெள்ளிடை மலை.

இந்நிலையில், இத்தேர்தலில் நமது நிலைப்பாடு என்ன என்பது முக்கியமான கேள்வி. காலத்திற்குக் காலம் அரசியல் சூழ்நிலைகள் மாறிக்கொண்டே இருக்கின்றன. இன்றைய அரசியல் சூழ்நிலையை நாம் நின்று நிதானித்து சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

தமிழ்த் தேசியத்தின் அடிப்படைகள் சுயாட்சி, சுயநிர்ணயம், தமிழர் தாயகம், மொழியுரிமை போன்ற தமிழ்த் தேசியத்தின் அடிப்படைகள் என்றும் மாறாதவை, எந்தவித விட்டுக்கொடுப்புக்கோ சமரசத்திற்கோ உள்ளாக்கப்பட முடியாதவை.

இவற்றை முன்னிலைப்படுத்தியே பல தசாப்தங்களாக அகிம்சைப் போராட்டத்தையும் ஆயுதப் போராட்டத்தையும் தமிழ் மக்கள் முன்னெடுத்து வந்துள்ளனர்.

இவற்றை வென்றெடுக்கவே பல ஆயிரம் உயிர்களையும், உடைமைகளையும் இழந்துள்ளோம். இன்னும் பல்வேறு இழப்புகளைச் சந்தித்துள்ளோம். எனவே, தமிழ்த் தேசியத்திற்கு அப்பாற்பட்ட கொள்கையுடையவர்களை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. தமிழர்களாகிய நமக்கு நமது உரிமைகள் முக்கியமா அல்லது சலுகைகள் முக்கியமா என்றால் முதலில் நமது உரிமைகள் நமக்கு முக்கியம். அத்தோடு நாம் நின்றுவிட-முடியாது.

நமது அடிப்படைத் தேவைகளும் இன்னும் நமது மக்களுக்கான அபிவிருத்திகளும் நமக்குத் தேவை. இவை இரண்டிற்குமான நமது அரசியல் போராட்டம் சமாந்தரமாகச் செல்ல வேண்டும். ஒன்றிற்காக ஒன்றை நாம் விட்டுக்கொடுக்க முடியாது.

### தீர்க்கப்படாத தொடரும் பிரச்சினைகள்

இந்த நாட்டில் தமிழ் மக்களின் பல பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் தொடர்கதையாகவே உள்ளன. அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினை, முன்னாள் போராளிகளுக்கான புனர்வாழ்வு, யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீடு, நிலைமாறுகால நீதி போன்றவை அவசரமாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளாகும்.

இவற்றை முன்னிலைப்படுத்தி ஓங்கிக் குரலெழுப்பக்கூடியவர்கள், அக்கறையோடு துணிவோடு செயலாற்றக்கூடியவர்களை நாம் தெரிவுசெய்ய வேண்டும். நமது ஜனநாயக உரிமையைப் பயன்படுத்துவோம்.

நமது ஜனநாயக உரிமைகள் மட்டில் நாம் மிகவும் விழிப்போடு இருக்க வேண்டும். தேர்தலில் வாக்களிப்பது நமது உரிமையும் கடமையும் ஆகும். நமது இந்தப் புனிதமான ஜனநாயக உரிமையை நாம் விட்டுக்கொடுக்கவோ அல்லது நமது இந்த ஜனநாயகக் கடமையை உதாசீனம் செய்யவோ கூடாது.

தமிழ் மக்களாகிய நமக்கு இன்று இருக்கக்கூடிய ஒரேயொரு ஆயுதம் நமது வாக்குச்சீட்டுத்தான். எனவே அதை நாம் முறையாகப் பயன்படுத்தி தகுதியான பிரதிநிதிகளை நாடாளுமன்றத்திற்கு அனுப்பவேண்டும். இது விடயத்தில் நாம் அலட்சியமாக இருக்கக்கூடாது.

சரியானவர்களையும் தவறானவர்களையும் இனங்காண்போம். இரண்டாம் வத்திக்கான் சங்கம் கண்டனத்திற்குரிய ஆட்சிமுறை குறித்துப் பேசுகின்றது. 'கண்டனத்திற்குரிய அரசியல் ஆட்சிமுறைகள் சில விடயங்களில் இருந்துகொண்டுதான் வருகின்றன. இவை குடிமை உரிமைக்கு அல்லது சமயச் சுதந்திரத்திற்கு தடை போடுகின்றன.

அரசியல் ஆதாயம் சார்ந்த, கட்டுக்கடங்காப் பேராசைக்கு இழிசெயலுக்குப் பலரைப் பலியாக்குகின்றன. அதிகாரத்தைப் பொதுநலனுக்கெனப் பயன்படுத்தாமல் ஒருசில குறிப்பிட்ட பிரிவினருக்கு அல்லது ஆட்சியாளர்களுடைய வசதிக்கெனவே திரித்து விடுகின்றன' (இன்றைய உலகில் திருச்சபை எண். 73). இத்தகைய சூழ்நிலை நமது நாட்டிலும் இல்லாமல் இல்லை. எனவே இத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை நாம் சரியாக இனங்காண வேண்டும்.

### யாரை ஆதரிப்பது? யாரை நிராகரிப்பது?

ஒவ்வொரு கட்சியினதும் சுயேட்சை வேட்பாளர்களினதும் தேர்தல் வாக்குறுதிகளை நாம் நுணுக்கமாகச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். மக்கள் நலன்சார்ந்த, பொதுநலன் சார்ந்த, சமய விழுமியங்களைக் கொண்ட தேர்தல் வாக்குறுதிகளை நாம் அடையாளம் காணவேண்டும்.

போலியான பொய்யான நடைமுறைச் சாத்தியமற்ற வாக்குறுதிகளோடு வரும் வேட்பாளர்களை நிராகரிப்போம். உண்மையான, நடைமுறைச்சாத்தியமான வாக்குறுதிகளோடு வரும் வேட்பாளர்களை ஆதரிப்போம். உண்மை, நேர்மை, சேவை மனப்பான்மை உள்ள வேட்பாளரை ஆதரிப்போம். பொய், புரளி சுயநல மனப்பான்மை கொண்ட வேட்பாளரை நிராகரிப்போம். மதத்துவேசம், இனத்துவேசம், மொழித்துவேசம் கொண்ட வேட்பாளர்களை நிராகரிப்போம், மதப்பற்றும், இனப்பற்றும், மொழிப்பற்றும் கொண்ட வேட்பாளர்களை ஆதரிப்போம். குழப்பவாதிகளையும், சந்தர்ப்பவாதிகளையும் நிராகரிப்போம். சமாதான விரும்பிகளையும், சமூக அக்கறை கொண்டவர்களையும் ஆதரிப்போம்.

அறிஞர் பேர்னாட் ஷா கூறும் வார்த்தைகள் இவ்வேளையில் நினைவுகூரத்தக்கன: 'வாக்காளர்கள் முட்டாள்களாக இருந்தால் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு நாடாளுமன்றத்திற்குச் செல்பவர்கள் அயோக்கியர்களாகத்தான் இருப்பார்கள்' எனவே, நமது யதார்த்த சூழ்நிலையை நுணுகி ஆராய்ந்து, நமது தனிப்பட்ட சுயநலன்களுக்கு அப்பால் நின்று, மனச்சாட்சியின் குரலுக்கு செவிமடுத்து இத்தேர்தலைச் சந்திப்போம், நமது வாக்குரிமையைப் பயன்படுத்துவோம்.

இலங்கை நாட்டின் திருத்தூதரான தூய யோசவ்வாஸ் அடிகளாரின் பரிந்துரை நமக்குக் கிடைப்பதாக. நமது மறைமாவட்டத்தின் பாதுகாவலியாகிய மடு அன்னை நம்மோடு பிரசன்னமாக இருந்து தாய்க்குரிய பாசத்தோடு நம்மை வழிநடத்துவாராக என மன்னார் மறைமாவட்ட ஆயர் பிடேலிஸ் லயனல் இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை விடுத்துள்ள மேய்ப்புப்பணித் திருமடலில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

# அரசியல் கைதிகள் விடயத்தை அரசாங்கத்துடன் பேசியே தீர்க்க முடியும்; அதன் வலி எனக்குத் தெரியும்!

**முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரட்ணம்**



(வவுனியா)

அரசியல் கைதிகள் விடயத்தை அரசாங்கத்துடன் பேசியே தீர்க்க முடியும். எனது மகனும் 11 வருடங்களாக சிறையில் இருப்பதால் அதன் வலி எனக்குத் தெரியும் - என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், பொதுஜன பெரமுனவின் வன்னி மாவட்ட வேட்பாளருமான சதாசிவம் கனகரட்ணம் தெரிவித்துள்ளார்.

வவுனியா தமிழ் ஊடக சங்கத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போதைய ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருடன் எனக்கு நெருக்கமான தொடர்பிருக்கின்றது. அரசாங்கம் சார்பில் வன்னி மாவட்டத்திலிருந்து இருவர் தெரிவுசெய்யப்படக்கூடிய நிலை இருக்கின்றது. அதில் ஒரு தமிழரை நீங்கள் அனுப்பவேண்டும்.

போரால் பாதிக்கப்பட்ட பிரதேசம் வன்னி. இங்குள்ள மக்கள் துன்பங்களையும், துயரங்களையும் சுமந்துகொண்டிருக்கின்றார்கள். அரசாங்கத்துடன் இணைந்து நாம் அவர்களின் துயரங்களைப் போக்கவேண்டும். கடந்த காலத்தில் நடைபெற்ற அபிவிருத்தி, வேலைவாய்ப்பு என்பன தமிழ் மக்களிடம் வருவது குறைவு. இதனைப் புரிந்துகொள்ளவேண்டும். எனக்கு போட்டப்படும் வாக்கு முதன்மை வேட்பாளருக்கு செல்லும் என தப்பான ஒரு கருத்தை சிலர் பரப்பிவருகிறார்கள். ஆனால், அப்படியல்ல. ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும் விருப்பு வாக்குகளே கவனத்திற்கொள்ளப்படும் என்பதை மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். கூடுதலான வாக்குகளைப் பெறுபவரே தெரிவுசெய்யப்படுவார். இதனை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். மஹிந்த அரசாங்கத்தினால்தான் எமது அழிந்துபோன மாவட்டத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

அரசியல் கைதிகள் விடயம், காணி விடுவிப்பு, காணாமல்போனோர் பிரச்சினை தொடர்பில் அரசுடன் பேசியே தீர்வைப் பெறமுடியும். போரின்போது உயிரிழப்புகள் ஏற்பட்டன. போராளிகள், மக்கள் எனப் பலரும் கொல்லப்பட்டார்கள். போர் முடிந்த பின் அவை நிறுத்தப்பட்டுள்ளன.

தேசியம் பேசுபவர்களுக்கு நாம் எதிரானவர்கள் அல்ல. அவர்கள் வரட்டும். ஆனால், அரசாங்கத்திற்குள் ஒரு தமிழன் வரவேண்டும். அதற்காக மக்கள் செயற்பட வேண்டும். அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான ஒரு சந்தர்ப்பத்தை முன்னாள் ஜனாதிபதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கியிருந்தார். ரணில் அல்லது மஹிந்தவா பிரதமர் என்ற நிலை வந்தபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனை செய்திருக்க முடியும்.

அப்போது மஹிந்தவுக்கு ஆதரவு கொடுத்தால் சில பிரச்சினைகளைத் தீர்ப்பதாக வாக்குறுதி வழங்கினார்கள். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்பட்டது. அப்போது அரசியல் கைதிகளை விடுதலை செய்யுங்கள். காணிகளை விடுவியுங்கள் என பேசியிருக்கலாம். ஆனால், அதை செய்யாமல் அரசாங்கத்திடம் சோரம்போனார்கள்.

மக்கள் எனக்கு அதிக வாக்களித்தால் மக்கள் என்னுடனும், அரசுடனும் இருக்கிறார்கள் என்பதைக் காட்டி இப்பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். எனது பிள்ளையும் 11 வருடமாக சிறையில் இருக்கின்றார். அந்த வலி எனக்குத் தெரியும். இங்குள்ள மக்களின் வலிகளை சுமந்தவன் என்றவகையில் அரசுடன் பேரம் பேசமுடியும் – என்றார்.

---





# டெங்கு நுளம்பு பெருக்கம் அதிகரிப்பு; விசேட பரிசோதனைகள் முன்னெடுப்பு!





(வவுனியா)

வவுனியா நகரப்பகுதிகளிலுள்ள கிணறுகளில் டெங்கு நுளம்பின் பெருக்கம் அதிகரித்து காணப்படுவதால் சுகாதாரத் திணைக்கள பூச்சியலாளர்கள் மற்றும் ஆய்வுக்குழுவின் உத்தியோகத்தர்களால் வீட்டுக்கிணறுகளில் டெங்கு நுளம்பு பெருக்கப் பரிசோதனைகள், மலேரியா தடுப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

கொரோனா நோய் தொற்று காரணமாக மக்களின் அன்றாட செயற்பாடுகளின் நடவடிக்கைகளில் டெங்கு மலேரியா நுளம்பின் தாக்கம் பற்றிய விழிப்புணர்வுகள் அற்றுச் செல்வதையும் அதனால் ஏற்படக்கூடிய பின்விளைவுகளையும் மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகளையும், வவுனியா நகர எல்லைப்பகுதிகளிலுள்ள வேப்பங்குளம், குருமண்காடு, பூந்தோட்டம், வைரவப்புளியங்குளம் போன்ற பகுதிகளில் கடந்த சில தினங்களாக பூச்சியலாளர்களின் ஆய்வுக்குழுவும் மூன்று குழுக்களும் வவுனியா சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்களுடன் இணைந்து கிணறுகளில் அண்மைக்காலங்களில் விடப்பட்ட மீன்களின் பெருக்கம், அதனுடன் இணைந்து டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை இனங்காணுதல், கிணறுகளில் நுளம்பு டெங்கு நுளம்பின் பெருக்கம் போன்ற பரிசோதனை நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

சில கிணறுகளில் விடப்பட்ட மீன்குஞ்சுகள், கிணறு சுத்திகரிப்பு, கிணறு இறைப்பு, கிணறுகளுக்கு குளோரின் பயன்படுத்தல் போன்ற நடவடிக்கையால் முற்றாக நுளம்புக் குடம்பிகளை கட்டுப்படுத்தி குடம்பிகளை உண்ணும் கப்பி மீன்குஞ்சுகள் அழிந்து போயுள்ளதையடுத்தும் நுளம்பு பெருகும் இடங்களை இனங்காணுதல் போன்ற செயற்பாடுகளையும் மலேரியா தடுப்புப் பரிசோதனை நடவடிக்கைகளையும் முன்னெடுத்துவருகின்றனர்.

எனவே, இவர்களுக்கு பூரண ஒத்துழைப்புகளையும் ஆதரவையும் பொதுமக்கள் வழங்கி, டெங்கு நுளம்பு மலேரியா பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு உத்தியோகத்தர்கள் கோருகின்றனர்.

---

# வன்னி பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் - ஊடகவியலாளர் சந்திப்பு

(வவுனியா)

வன்னி பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தம்மிக்க பிரியந்த - வவுனியா, மன்னார் மாவட்ட ஊடகவியலாளர்களுடனான சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மக்களுடன் நெருக்கமாக பழகுபவர்கள் ஊடகவியலாளர்களே என்றவகையில் வவுனியா மக்கள் எதிர்நோக்கும் விடயங்கள் வவுனியா, மன்னார் மாவட்டங்களில் பொலிஸாரால் மக்களுக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக இதன்போது கேட்டறிந்துகொண்டார்.

வவுனியா , மன்னார் மாவட்டத்தில் எடுக்கவேண்டிய பொறிமுறைகள் தொடர்பாகவும் பிரதி பொலிஸ்மா அதிபருக்கும் ஊடகவியலாளர்களுக்குமிடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதேவேளை, அவசர அழைப்பின்போது பொலிஸார் தாமதமாக குறித்த பகுதிக்கு வருகின்றமை மற்றும் வைரவப்புளியங்குளம் வைரவர் கோவில் வீதியில் அதிவேகமான மோட்டார் சைக்கிள் செலுத்தப்படுகின்றமை, குறித்த பகுதியில் பொலிஸ் காவலரணின் முக்கியத்துவம் தொடர்பிலும் இதன்போது எடுத்துக்கூறப்பட்டது.

---

# சுவரொட்டி ஒட்டும் சர்ச்சை; வீடு புகுந்து தாக்குதல்: சிறிதரனின் சாரதி உள்ளிட்டோர் கிளிநொச்சியில் கைது

யாழ்ப்பாண தேர்தல் தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தற்போதைய வேட்பாளருமான சி.சிறிதரனின் வாகனச் சாரதி உள்ளிட்ட மூவர் வன்முறையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கிளிநொச்சி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மூவரினாலும் தாக்கப்பட்ட பெண்ணொருவர் கிளிநொச்சி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வாகனச் சாரதி வேந்தன், உருத்திரபுர அமைப்பாளர் திலக்சன் உள்ளிட்ட மூவரே கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் இன்று கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர்.

உருத்திரபுரம் பகுதியில் இந்தக் குழுவினர் தேர்தல் விதிமுறையை மீறி வீட்டுக் கதவுகளிலும், சுவர்களிலும் சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டு சென்றுள்ளனர். இதன்போது உருத்திரபுரத்திலுள்ள வீடொன்றின் கேற்றில் சுவரொட்டியை ஒட்ட முனைந்தனர். இதற்கு குடியிருப்பாளர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

இதற்கு அந்த நபர்கள், "நாங்கள் அனைத்து வீடுகளிலும் ஒட்டிக்கொண்டு வருகிறோம். உனக்கு மட்டும் தனிச்சட்டமா? இங்கு ஒட்டுவோம்" என அடாவடியில் ஈடுபட்டதாக வீட்டு உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

இரு தரப்புக்கும் தர்க்கம் உச்சமாக, தனது வீட்டு கேற்றில் சுவரொட்டி ஒட்டினால், அவர்களை தாக்குவேன் என கோடாரியை எடுத்து குடியிருப்பாளர் எச்சரித்துள்ளார். இதனால் கோபமடைந்த மூவரும் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்த குடியிருப்பாளரை தாக்கி, அவரது மனைவியையும் தாக்கியதாகவும், வீட்டின் சொத்துகளுக்கும் சேதம் விளைவித்ததாகவும் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

தாக்குதலில் காயமடைந்த பெண்மணி கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு விடயம் அறிவிக்கப்பட்டதையடுத்து, அடாவடியில் ஈடுபட்ட 3 பேரையும் மடக்கிப்பிடித்தனர். கைதுசெய்யப்பட்டபோது அவர்கள் மதுபோதையில் இருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மதுபோதையில் வீடு புகுந்து பெண்ணை தாக்கிய மூவரும் தற்போது கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இன்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவர்.

---

# தனிமைப்படுத்தலை நிறைவுசெய்த 124 பேர் விடுவிப்பு

(வவுனியா)

அநுராதபுரம் வேரகொட இராணுவ முகாமில் தனிமைப்படுத்தலை நிறைவுசெய்த 124 பேர் நேற்று முன்தினம் மாலை விடுவிக்கப்பட்டனர்.

கொவிட்-19 நோய்த்தாக்கம் கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் அதிகளவாக காணப்பட்டதையடுத்து அவர்களின் உறவினர்கள் தனிமைப்படுத்தல் முகாம்களில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

அந்தவகையில் கடந்த மாதம் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் அழைத்துவரப்பட்ட 150இற்கும் மேற்பட்டோர் அநுராதபுரம் வேரகொட இராணுவ தனிமைப்படுத்தல் முகாமுக்கு அழைத்துவரப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

அவர்கள் தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவுசெய்த நிலையில் நேற்றையதினம் அவர்களது சொந்த இடங்களான கொழும்பு, களுத்துறை, புத்தளம், கம்பஹா, அநுராதபுரம் போன்ற இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பயணிகளுக்கான பி.சி.ஆர். பரிசோதனைகளும் முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன், கொரோனா தொற்று பீடிக்கவில்லை என்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே அவர்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

# மாகாண சபையை வெற்றிகரமாக நடத்தியவன் நான் அதனால்தான் என்னை எவரும் எதிர்க்கவில்லை!

## கிழக்கின் முன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமட்



(செங்கலடி)

நான் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகும் பட்சத்தில் எனக்குக் கிடைக்கும் கொடுப்பனவுகளில் ஐந்து சதத்தையேனும் எனது சொந்தத் தேவைக்காக எடுக்காமல் முழுமையாக மக்களின் பயன்பாட்டிற்காக வழங்குவேன்- என கிழக்கின் முன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

நல்லாட்சி என்ற நாமத்தோடு வந்தவர்கள் சிறுபான்மையினருக்கு பொல்லாப்பாக இருந்துவிட்டுச் சென்றார்கள் என்றும் அவர் கூறினார் .

ஏறாவூரில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கடந்த கால அபிவிருத்திச் சேவைகளின் தொகுப்பு நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றும்போதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

நாட்டில் அரசியல் அதிகாரங்களை கைப்பற்றிய நல்லாட்சி அரசாங்கம், நல்லாட்சி செய்யாமல் நழுவிக் கொண்டிருக்க நாட்டுக்கும் முழு உலகுக்கும் முன்னுதாரணமாய் நல்லாட்சியை நடத்திக் காட்டியவர்கள் நாங்களே. இந்த விடயம் இப்பொழுதும் சிலாகித்துப் பேசப்படுகிறது.

மத்திய அரசின் நல்லாட்சியில் பல ஊழல்கள் நடந்த வரலாற்றை எல்லோரும் அறிவோம். ஆனால், எல்லா இனங்களும் இணைந்து ஆட்சி நடத்திய எங்களது கிழக்கு மாகாணசபை நல்லாட்சியிலே ஒரு முள்ளுக்கொப்புகூட முறியவில்லை. ஊழலும் இடம்பெறவில்லை. மாறாக, இன ஐக்கியமே மேலோங்கியிருந்தது. அபிவிருத்தி அபாரமாக இடம்பெற்றது.

மத்திய அரசின் நல்லாட்சியில்தான் சிறுபான்மையினரின் உரிமைகள் வெளிப்படையாக மறுக்கப்பட்டன.

எனது தலைமையிலான மாகாண சபை நல்லாட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட கையோடு கிழக்கு மாகாணத்தில் எந்தவொரு அபிவிருத்தியும் இடம்பெறாதது ஒருபுறமிருக்க, ஏற்கனவே எனது தலைமையில் கிழக்கு மாகாண சபையால் ஆரம்பித்து வைத்த திட்டங்களும் முடிக்கப்படாமல் ஆளுநர்களால் புறக்கணிக்கப்பட்டு வருவது கவலைக்குரிய விடயமாகும்.

மாகாண சபையின் அதிகாரத்தை முழு உலகுக்கும் முன்னுதாரணமாக நடத்திக் காட்டியதில் நான் வெற்றியடைந்தேன். அதனால்தான் என்னை எவரும் எதிர்க்கவில்லை. இனியும் எதிர்க்கப் போவதுமில்லை.

கிட்டத்தட்ட எனது இரண்டரை வருட கிழக்கு மாகாண முதலமைச்சர் என்ற நல்லாட்சியிலே தினமும் பல பாடசாலைகளைப் புதிய கட்டிட வசதிகளோடு அமைப்பதற்காக அடிக்கல் நாட்டியிருந்தோம். அவற்றில் பல பாடசாலைகள் எனது ஆட்சிக்காலத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஆயினும், இன்னும் பல பாடசாலைகள் முடிவுறாத நிலையிலுள்ளன.

இந்நிலையில், நாடாளுமன்ற அரசியல் அதிகாரம் எனக்குக் கிடைக்குமாயின், நாட்டின் அரசியல் அதிகாரத்தை அனைத்து மக்களின் அபிவிருத்திப் பணிகளுக்குமாக அர்ப்பணிப்புடன் பயன்படுத்தவேன் - என்றார்.




# கூட்டமைப்பின் முயற்சி இல்லையென்றால் அரசியல் தீர்வு அடிபட்டுப் போயிருக்கும்

## தமிழரசுக் கட்சியின் மட்டு. வேட்பாளர் துரைராஜசிங்கம்



(பாண்டிருப்பு)

தீர்வு தொடர்பில் கூட்டமைப்பின் முயற்சி இல்லையென்றால் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு என்ற விடயம் இதுவரையிலே அடிபட்டுப் போயிருக்கும் என தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் மட்டு வேட்பாளருமான கி.துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

மட்டு. சத்துருக்கொண்டான், பன்சேனை ஆகிய கிராமங்களில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எல்லாக் காலங்களிலும் யார் ஆட்சிக்கு வந்தாலும் தமிழ் மக்கள் தொடர்பான அரசியல் தீர்வு என்கின்ற விடயம் அரசுகளால் பரிசீலிக்கப்பட வேண்டிய மிக முக்கிய விடயமாக அமைவது எமது முயற்சியினால்தான்.

தமிழ் மக்களுக்கான உரிமையைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையில் எமது நடவடிக்கைகள் வழுக்குமரம் ஏறும் செயற்பாடாக அமைவது என்பது உண்மைதான் என்றாலும் நாங்கள் வெறுமனே வார்த்தையாடிக் கொண்டிருக்கவில்லை. எங்கள் முயற்சியின் காரணமாகத்தான் தீர்வு தொடர்பான மங்கள முனசிங்க அறிக்கை, சந்திரிக்கா அம்மையாரின் அரசியல் தீர்வு, திஸ்ஸவிதாரன அரசியல் தீர்வு, ராஜபக்ஷ காலத்தைய நிபுணர்குழு அறிக்கை ஆகியன வெளிவந்தன.

அது மட்டுமல்ல, சாட்சியங்கள் இல்லாமல் சர்வதேச நியமங்களைப் புறந்தள்ளி தாம் வென்றுவிட்டதாக அரசு வெற்றிப்பறை அறைந்தபோது அரசாங்கத்தை அந்தப் போர் தொடர்பாக பொறுப்புக் கூறவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தொடர்ச்சியாக உள்ளாக்கிக்கொண்டிருக்கின்ற செயற்பாடுகளுக்கு கூட்டமைப்பே பங்குதாரர்கள்.

விடுதலை வரலாறுகளைப் பார்க்கின்றபோது ஒரு நூற்றாண்டுக்கும் மேலாகக் கூட தமக்கான உரிமைகளைப் பெறாது நசுங்குண்டு வாழ்ந்த இனங்களின் வரலாறு இதற்குச் சான்று. இத்தகைய எதிர்ப்புகளை எமது கட்சி செயற்பாட்டின்மூலம் தெரிவிக்காதிருந்தால் புத்தளத்திலும், சிலாபத்திலும், நீர்கொழும்பிலும், காலியிலும், கதிர்காமத்திலும் தமிழர்கள் தமது அடையாளத்தை இழந்ததையொத்த நிகழ்வுகள்தான் வடக்கு, கிழக்கில் நடந்திருக்கும். இந்நிலையில், தீர்வு என்பதைப் பெற்றுக்கொள்ளவில்லை என்பது உண்மையாக இருந்தபோதிலும் தீர்வைப் பெறுவதில் தமிழ் மக்கள் விடாப்பிடியாக இருக்கின்றார்கள் என்ற செய்தியை தொடர்ச்சியாக அரசுக்கு வலியுறுத்திக்கொண்டிருக்கின்ற கட்சியும், அரசின் சிங்களமயமாக்கலை தடுத்து நிறுத்திக்கொண்டிருக்கின்ற கட்சியும் கூட்டமைப்புத்தான் என்பதை பொதுமக்கள் விளங்கிக்கொள்வார்கள் - என்றார்.

# 7 வயது சிறுமியை பாலியல் சேஷ்டை செய்த நபர் கைது!

திருகோணமலை ஆண்டாம்குளம் பகுதியில் ஏழு வயதுடைய சிறுமியொருவருக்கு பாலியல் ரீதியில் சேஷ்டை செய்த சந்தேக நபரொருவரை இம்மாதம் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் சமிலா குமாரி ரத்நாயக்க நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

ஆண்டாம் குளம், திருகோணமலை பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையொருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலே இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபரின் வீட்டுக்கு அயல் வீட்டிலுள்ள ஏழு வயதுச் சிறுமி சென்றிருந்த சந்தர்ப்பத்தில் சிறுமியை அழைத்து பாலியல் ரீதியில் சேஷ்டை செய்ததை சிறுமி பெற்றோரிடம் தெரிவித்ததையடுத்து பெற்றோர் உப்புவெளி பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கமைய குறித்த நபர் கைது செய்யப்பட் டார். சந்தேக நபரை பொலிஸார் திருகோணமலை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

# அம்பாறையில் வேட்பாளர்கள் பிரசுரத்துடன் வீடுவீடாகப் படையெடுப்பு!



அம்பாறை மாவட்டத்தில் வேட்பாளர்கள் தமது தேர்தல் பிரசாரத்தின் ஒரு யுக்தியாக வீடுவீடாகச் செல்கின்றனர். தமது ஆதரவாளர் குழுமத்தினருடன் பயணிக்கும் அவர்கள் தமது பரப்புரையைச் செய்வதுடன், துண்டுப்பிரசுரங்களையும் விநியோகித்து வருகின்றனர். த.தே.கூட்டமைப்பின் வேட்பாளர்களான க.கணேஸ் மற்றும் இரா.சயனொளிபவான் ஆகியோர் தமது ஆதரவாளர்கள் சகிதம் பிரசுரங்களுடன் வீடுகளுக்குச் செல்வதைக் படத்தில் காணலாம்.

# திருமலையில் கேரள கஞ்சா வைத்திருந்தோர் கைது!

திருகோணமலை மாவட்டத்திலுள்ள வெவ்வேறு பொலிஸ் நிலையங்களுக்குட்பட்ட பகுதிகளில் கேரள கஞ்சா வைத்திருந்த ஐவரை கடந்த திங்களன்று கைதுசெய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை, கோமரங்கடவெல, சீனக்குடா மற்றும் கிண்ணியா பகுதிகளைச் சேர்ந்த 42,34,40,27 மற்றும் 25 வயதிலான ஐவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இருநூறு மில்லிகிராம் கேரளா கஞ்சா வைத்திருந்த இருவரையும், கோமரங்கடவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 100 மில்லிகிராம் கேரள கஞ்சாவுடன் ஒருவரையும், சீனக்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 200 கிராம் கேரள கஞ்சா வைத்திருந்த நிலையில் ஒருவரையும், கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஐம்பது கிராம் கேரள கஞ்சாவுடன் ஒருவரையும் கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# முஸ்லிம்கள் ஒன்றுபடாவிட்டால் அடிமை சமூகமாக வாழும் நிலை ஏற்படலாம்

## சுயேட்சைக்குழு - 6 வேட்பாளர் இர்சாத்



முஸ்லிம் சமூகம் இந்நாட்டில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றபோதிலும் அதற்கான நிரந்தரமான தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான எந்த முயற்சிகளையும் முஸ்லிம் கட்சித் தலைவர்கள் எடுக்கவில்லை - என்று திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் மக்கள் ஜனநாயக முன்னணி சார்பில் சுயேட்சைக்குழு - 6 இல் போட்டியிடும் ஏ.எம்.இர்சாத் தெரிவித்தார்.

திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் சுயேட்சைக்குழு - 6 இல் போட்டியிடும் மக்கள் ஜனநாயக முன்னணியின் கொள்கைப் பிரகடனமும் ஊடகவியலாளர் மாநாடும் அக்கரைப்பற்றில் இடம்பெற்றபோது அதில் கலந்துகொண்டு பேசும்போதே வேட்பாளர் ஏ.எம்.இர்சாத் மேற்படி கருத்தைத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

இலங்கையில் சுமார் இருபது இலட்சம் முஸ்லிம்கள் வாழ்ந்துவருகின்றனர். தமது உரிமைகளைப் பெற்றுத்தருவார்கள் என்று முஸ்லிம் கட்சிகளுக்கு தொடர்ச்சியாக நமது மக்கள் வாக்களித்து வருகின்றபோதிலும் இதுவரைக்கும் நிரந்தரமான ஒரு தீர்வை அந்தக் கட்சிகளால் பெற்றுக்கொடுக்க முடியவில்லை.

இத்தலைவர்கள் மக்களின் உரிமைகளைப் பற்றிப்பேசாமல் தங்களை வளர்த்துக் கொள்வதற்கான முதலீடுகளில் ஈடுபடுகின்றனர். தேர்தல் காலங்களில் மாத்திரம் வந்து உணர்ச்சி அரசியலை மக்கள் மத்தியில் விதைக்க முற்படுகின்றனர்.

அம்பாறை மாவட்டம் என்பது முஸ்லிம்களின் தாயகமாகும். அந்த மாவட்டத்தை வெற்றி கொள்வதற்காக முஸ்லிம்கள் எல்லோரும் ஒன்றுபடவேண்டிய காலத்தில் முஸ்லிம் கட்சிகள் பிரிந்து நின்று தேர்தல் கேட்கின்றனர். நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் இந்நாட்டு முஸ்லிம்களுக்கு பாரிய பிரச்சினைகள் ஏற்படலாம் என அரசியல் விமர்சகர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். சிறுபான்மையினராக வாழும் நாங்கள் ஒன்றுபட்டு செயற்படாமல்போனால் உரிமைகளை இழந்து அடிமைச் சமூகமாக வாழுகின்ற நிலை ஏற்படலாம் - என்றார்.

# கட்சிக்குள் இருக்கும் பிளவுகளை தீர்க்கமுடியாதவர்கள் சமூகத்தின் பிரச்சினைகளை எவ்வாறு தீர்ப்பார்கள்?

## பொதுஜன பெரமுன வேட்பாளர் சுபியான்



எதிர்த்தரப்பில் உள்ளவர்களின் கட்சிக்குள் பல பிளவுகள் காணப்படுகின்றன. இதனைத் தீர்க்க முடியாதவர்கள் எப்படி சமூகத்தின் பிரச்சினைகளை தீர்க்க முடியும் - என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் திருகோணமலை மாவட்ட வேட்பாளர் எஸ்.எம். சுபியான் தெரிவித்தார்.

தம்பலகாமம் சிராஜ் நகர் பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் உரையாற்றுகையில் கூறியதாவது;

இங்கு அரசியலில் போட்டியிடுபவர்கள் தங்களது சுய அரசியலுக்காகவே செயற்படுகிறார்கள். அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் , முஸ்லிம் காங்கிரஸ் போன்ற கட்சிகளில் போட்டியிடுகின்றவர்களுக்கு தாம் எத்தனை ஆசனங்கள் பெறுவோம் என்ற எண்ணமே தவிர, சமூக அக்கறை கொண்டவர்களாக அவர்கள் இல்லை.

கொரோனா காலங்களில் அதனை ஒழிக்கவேண்டும் என்ற முயற்சியில் சிறந்த நிர்வாகத்தை வழிநடத்தியவரே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. திறம்பட சமூக நலனுக்காக அவர் சிறப்பாக செயற்பட்டார் - என்றார் .

# நிரந்தர புகை பரிசோதனை நிலையம் அமைத்துத் தருமாறு கோரிக்கை



வாழைச்சேனை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் வாகன புகை பரிசோதனை நடவடிக்கைகளை நிரந்தர நிலையமாக அமைக்குமாறு வாகன உரிமையாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

குறித்த பிரதேசத்தில் நிரந்தர புகை பரிசோதனை நிலையம் இல்லாததால் வாகன உரிமையாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இப் பிரதேசத்தில் குறிப்பிட்ட சில தினங்களுக்கு மாத்திரமே வாகன புகை பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தியோகத்தர்கள் வருவதினால், நாள் முழுவதும் நீண்ட வரிசையில் காத்துநின்று புகை பரிசோதனையை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்று வாகன உரிமையாளர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி குறித்த பகுதியில் நிரந்தர புகை பரிசோதனை நிலையமொன்றை அமைத்துத் தருமாறு வாகன உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# தேசியத்தில் பொருளாதாரத்தை இழந்துள்ள தமிழ்ச் சமூகத்தை மீட்டெடுக்க வேண்டும்

## த.தே.கூ. அம்பாறை மாவட்ட வேட்பாளர் தாமோதரம் பிரதீவன்

(மருதமுனை )

30 வருடகாலமாக தேசியத்தில் பொருளாதாரத்தை இழந்துநிற்கும் தமிழ்ச் சமூகம் அதை மீட்டெடுக்க முன்வரவேண்டும். வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் தமிழ் மக்களது வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக எமது வளங்களைப் பயன்படுத்தி தற்சார்பு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவேண்டிய தேவை நமக்கிருக்கின்றது - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட வேட்பாளர் தாமோதரம் பிரதீவன் தெரிவித்தார்.

அம்பாறை, திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளராக போட்டியிடும் இவர், கல்முனை, பாண்டிருப்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது,

அம்பாறை மாவட்டத்தில் கருணாவின் வருகையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மக்களும் பெரிதாகக் கணக்கெடுக்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதுள்ள அதிருப்தியில்தான் ஒருசிலர் கருணாவோடு கைகோர்த்துள்ளனர். இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாக்குவங்கியில் எந்தப் பாதிப்பும் ஏற்படாது.

இம்முறை நடைபெறவிருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் நான் போட்டியிடுகின்றேன். அரசியலுக்கு வரவேண்டும் என்கின்ற எண்ணமும் நோக்கமும் எனக்கிருந்ததில்லை. மக்களுடைய வேண்டுகோளுக்கும் கட்சியின் அழைப்பின்பேரிலும்தான் இந்தத் தேர்தலில் நான் களமிறங்கியிருக்கின்றேன்.

கடந்த காலங்களை எடுத்து நோக்கினால், தமிழர் நலன்சார்ந்த பல விடயங்களில் மனித உரிமை செயற்பாட்டாளராக பல்வேறுபட்ட தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் நான் ஈடுபட்டுவந்துள்ளேன். எதிர்காலத்திலும் இந்த விடயங்களில் தொடர்ச்சியாக தேசியம் சார்ந்த சிந்தனையோடும் ஈடுபாட்டோடும் இந்தப் பணிகளில் ஈடுபடுவதற்குத் தயாராகவிருக்கின்றேன். மூன்று விதமான இலக்குகளை நோக்கி பயணிப்பதற்கு என்னை தயார்ப்படுத்தியிருக்கின்றேன். கடந்த காலங்களில் அதனைச் செய்திருக்கின்றேன்.

30 வருடகாலமாக தேசியத்துக்காக இழந்துபோய் நிற்கும் எம் இனம் எமது பொருளாதாரத்தை மீட்டெடுக்கவேண்டும். வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் எம் மக்களது வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக எமது



வளங்களை பயன்படுத்தி தற்சார்பு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவேண்டிய தேவை இருக்கின்றது.

கடந்த நல்லாட்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசிய கட்சிக்கு முட்டு கொடுத்துக்கொண்டிருந்தது என்ற சர்ச்சைகள் இருந்தாலும் இராஜதந்திர ரீதியான சில நகர்வுகளை நகர்த்தவேண்டிய தேவைப்பாடு இருந்ததன் காரணமாக ஐக்கிய தேசிய கட்சியுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணைந்து செயற்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் களமிறக்கப்பட்டுள்ள அனைத்து வேட்பாளர்களும் எமது கட்சி ஆசனத்தைப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சியில் தனித்தும் சேர்ந்தும் வாக்குகளை சேகரிக்கும் முயற்சியில் இறங்கியிருக்கின்றோம். எங்களுக்கிடையில் எந்தவிதமான காழ்ப்புணர்ச்சியும் இல்லை. காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சுக துக்கங்களில் பங்கெடுத்திருக்கின்றேன். காரணம், எனது குடும்பத்திலும் பலர் காணாமலாக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தளவில் கருணாவின் வருகையை பெரிதாக கணக்கெடுக்கவில்லை. ஏனெனில், அம்பாறை மாவட்ட மக்கள் தமிழோடும் தேசியத்தோடும் பின்னிப்பிணைந்தவர்கள். இருந்தாலும்கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதுள்ள அதிருப்தி, கருணாவோடு இங்குள்ளவர்களை கைகோர்க்க வைத்துள்ளதென்பது கசப்பான உண்மை. இந்த விடயங்களை மக்களிடம் எடுத்துரைத்து மீண்டும் தமிழ்த் தேசியத்தின்பால் மக்களை கொண்டு வருவதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். இந்த விடயத்தில் கட்சியின் அனைத்து வேட்பாளர்களும் ஒன்றிணைந்து பயணிக்க தயாராகவிருக்கின்றோம் என குறிப்பிட்டார்.

# அன்னமலை பகுதியில் யானை அட்டகாசம்

அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட சாளம்பைக்கேணி, சவளக்கடை அன்னமலை பகுதியில் நேற்று முன்தினம் காலை யானையொன்று உட்புகுந்து அட்டகாசத்தில் ஈடுபட்டது .

இதனையடுத்து பொதுமக்கள் சீன வெடிகளை பயன்படுத்தி குறித்த யானையை விரட்டுவதற்கு முற்பட்டனர்.

குறித்த யானையும் பொதுமக்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் நடமாடியதுடன், அறுவடை மேற்கொள்ள தயாராகவிருந்த நெற்கதிர்களை அழித்து அருகிலுள்ள நாணல் காட்டில் சென்று மறைந்துள்ளது.

இவ்வாறு ஊருக்குள் பிரவேசித்து மக்களை அச்சுறுத்திய யானை தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதன், நாவிதன்வெளி உதவி பிரதேச செயலாளர் என். நவநீதராஜா மற்றும் அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர் குழுவினர் ஆகியோர் வனஜீவராசிகள் திணைக்களத்துடன் இணைந்து நேரில் சென்று ஆராய்ந்தனர்.

அண்மைக்காலமாக யானைகளின் அட்டகாசம் அம்பாறை மாவட்டத்தில் அதிகரித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# முஸ்லிம் காங்கிரஸுடன் மக்கள் காங்கிரஸ் இணையாத காரணத்தை புரிதல் வேண்டும்

## திகாமடுல்ல மாவட்ட முதன்மை வேட்பாளர் ஹமீட்

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் வெற்றியை பொறுத்துக்கொள்ள முடியாதவர்கள் எங்கள் மீது அபாண்டங்களை அள்ளி வீசுகின்றனர் - என்று திகாமடுல்ல மாவட்ட முதன்மை வேட்பாளர் வை.எல்.எஸ்.ஹமீட் தெரிவித்தார்.

வேட்பாளர் வை.கே.றஹீமானின் ஏற்பாட்டில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது;

அம்பாறை மாவட்டத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து போட்டியிடுவதற்கு சம்மதம் தெரிவிக்கவில்லை என்றதொரு குற்றச்சாட்டை முன்வைக்கின்றார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸுடன் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் இணைந்து போட்டியிடுவதை எதிர்த்தவர்கள் அம்பாறை மாவட்டத்தில் இணைந்து போட்டியிட வரவில்லை என்று கூறி ஏதோ முஸ்லிம்களின் உரிமைக்கு உலைவைத்தது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்தான் என்றும் பிரசாரம் செய்கின்றனர்.



இந்நிலையில், ஒன்றை மட்டும் புரிந்துகொள்ள வேண்டும், இந்த விடயத்தில் நாங்கள் பேச்சுவார்த்தை நடத்திய காலம் கொரோனாவுக்கு முந்திய காலம். ஏப்ரல் 25 ஆம் திகதி தேர்தல் நடைபெற வேண்டும் என்று எதிர்பார்த்த நிலையில், அது நடந்தது. அந்தக் காலத்தில் தேசிய காங்கிரஸ் மொட்டில் கேட்பதாக இருந்தது. அந்தச் சூழ்நிலையில் மொட்டையும் ரெலிபோனையும் பொறுத்தளவில் இரண்டுதான் சாத்தியங்கள், ஒரு கட்சிக்கு நான்கு என்றால் அடுத்த காட்சிக்கு இரண்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஒன்று. மூன்று, இரண்டு, ஒன்று என்ற சாத்தியங்கள் அப்போதிருக்கவில்லை.

மக்கள் காங்கிரஸும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இணைந்து டெலிபோனில் போட்டியிட, தேசிய காங்கிரஸ் மொட்டில் போட்டியிட்டால் நான்கில் இண்டுதான் சாத்தியம். ஒன்றில் ரெலிபோனுக்கு நான்கு மொட்டுக்கு இரண்டு அல்லது மொட்டுக்கு நான்கு ரெலிபோனுக்கு இரண்டு என்பதே சாத்தியம்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸும் இணைந்து ரெலிபோனில் கேட்டால் மொட்டில் நான்கு ஆசனத்தை மேவுவதற்கு வழியில்லை என்பதற்கு நாங்கள் தெளிவான புள்ளி விபரங்களை வழங்கினோம். ஆனால், போலிப் பிரசாரங்களை இவர்கள் முன்வைக்கின்றார்கள். என்றாலும் மக்கள் உண்மை நிலையை அறிந்துள்ளார்கள்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் மூலம் திகாமடுல்ல மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் வெற்றியீட்டும்போது அதுவே முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் வென்று நாடாளுமன்றம் சென்றதாக சொல்ல முடியும். மாறாக, ஐக்கிய மக்கள் சக்தியில் வென்றால் அதனை நேரடியாக முஸ்லிம் கட்சியின் மூலம் நாடாளுமன்றம் சென்ற பிரதிநிதித்துவம் என்று கூறமுடியாது. எனவேதான், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் வெற்றியை இன்று உறுதிசெய்ய முன்வந்து, நாளுக்கு நாள் எமது கட்சியின் பக்கம் மக்கள் அணிதிரண்டு வருகின்றனர். எமது கட்சியில், எனது தலைமையில் களமிறங்கியுள்ள வேட்பாளர்கள் நாடாளுமன்றம் செல்கின்ற போது சவால் மிக்க நாடாளுமன்றத்தில் எமது சமூகத்துக்கான குரலாக அவர்கள் இயங்குவார்கள் என்பதை மனதிற்கொண்டு எமது மக்கள் இம்முறை தேர்தலை பயன்படுத்த வேண்டும் - என்றார்.




# நாவிதன்வெளி வறிய குடும்பங்களுக்கு மரக்கறிப் பயிர்கள் வழங்கப்பட்டன

நாவிதன்வெளி பிரதேசத்தில் வாழும் வறிய குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடன் கனடா ஆலம் விழுதுகள் அமைப்பின் ஊடாக மரக்கறிப் பயிர்கள் வழங்கப்பட்டன.

மரக்கறிப் பயிர்கள், விதைகள் என்பன தெரிவுசெய்யப்பட்ட 66 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வுக்கு நாவிதன்வெளி பிரதேச உதவி பிரதேச செயலாளர்



நாவிதன்வெளி கலாசார மத்திய நிலையத்தில் கடந்த திங்கட்கிழமை காலை 11 மணியளவில் அமைப்பின் கிளைத் தலைவர் கே.நிர்மலரூபன் தலைமையில் இந்நிகழ்வுகள் நடைபெற்றன.

இதன்போது தென்னம்பிள்ளை, என். நவனீதராஜா, பிரதி திட்டமிடல் பணிப்பாளர்,, ஆலம் விழுதுகள் அமைப்பின் அங்கத்தவர்கள், பயனாளிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# கிழக்கின் ஆளுநர் உகந்தைமலை விஜயம்



(காரைதீவு)

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் கிழக்கின் தென்கோடியிலுள்ள குமுக்கன் கூமுனை மற்றும் உகந்தைமலை முருகனாலயத்திற்கும் விஜயம் செய்தார். கிழக்கையும் ஊவாவையும் பிரிக்கும் கிழக்கின் தென்எல்லையிலுள்ள குமுக்கன் ஆற்றுக்கு குமண தேசிய பறவைகள் சரணாலயத்தினூடாக பயணித்து அவர் கூமுனையைச் சென்றடைந்தார்.

அங்கிருந்து வரலாற்றுப் பிரசித்திபெற்ற உகந்தைமலை முருகனாலயத்திற்கு விஜயம் செய்தார். அங்கு அவர் ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திசாநாயக்கவைச் சந்தித்து கலந்துரையாடினார். வருடாந்த ஆடிவேல்விழா உற்சவத்தை சுகாதார விதிமுறைப்படி சிறப்பாக நடத்துமாறும் ஏதாவது அவசியம் தேவைப்பட்டால் தன்னோடு தொடர்பு கொள்ளுமாறும் ஆளுநர் அனுராதா கேட்டுக்கொண்டார்.

பின்னர் மதியநேர பூஜையிலும் ஆளுநர் கலந்துகொண்டார். வரலாற்றில் கிழக்கு ஆளுநரொருவர் இக்காட்டுப்பகுதிக்கும் ஆலயத்திற்கும் விஜயம் செய்தமை இதுவே முதற்றடவையாகும் என ஆலயவண்ணக்கர் சுதுநிலமே திசாநாயக்க பெருமையோடும் மகிழ்ச்சியோடும் கூறினார்.

# மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பொருளாதார ரீதியில் சகல வளங்களையும் பெறச்செய்வதே எமது நோக்கம்

## ஜனாதிபதியும் இதற்கு முன்னுரிமை வழங்குவார் என்கிறார் பொதுஜன பெரமுன கட்சி வேட்பாளர் தவஞானசூரியம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிராமப்புறங்களிலுள்ள மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றார்கள். மாற்றி உடுப்பதற்குக்கூட உடுதுணிகள் இல்லாத மக்கள் பலர் உள்ளார்கள். அந்த மக்கள் எம்மை அன்போடு வரவேற்று எம்மிடம் அவர்களின் குறைகளைத் தெரிவிக்கின்றார்கள். மட்டக்களப்பு மாவட்ட மக்கள் அறுதிப் பெரும்பான்மையாக எம்மை வெற்றியடையச் செய்வார்கள் என நாங்கள் நம்புகின்றோம் - என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளரான இ.தவஞானசூரியம் தெரிவித்துள்ளார்.

களுவாஞ்சிக்குடியில் அமைந்துள்ள அவரது காரியாலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் சேவகனாக மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு சேவை செய்வதற்காகத்தான் நான் இந்த நாடாளுமன்றத் தேர்தலில் களமிறங்கியிருக்கின்றேன். மட்டக்களப்பு மாவட்ட மக்களை பொருளாதார ரீதியில் சகல வளங்களும் பெற்று நல்ல உயர்ந்த நிலைக்குக் கொண்டுவருவதுதான் எனது நோக்கம்.

மட்டக்களப்பு மாவட்டம் சகல துறைகளிலும் அபிவிருத்தி காணவேண்டும், அதற்காக பசுமைப் புரட்சித்திட்டம், உற்பத்தித் திறன் திட்டம் உள்ளிட்ட பல திட்டங்களை வகுத்துள்ளேன். அதற்கமைய இம்மாவட்டத்தில் 20,000 மெற்றிக்தொன் எள் உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ளோம். அதன்மூலம் 3,500 கோடி ரூபா இம்மாவட்டத்திற்கு வருமானமாகக் கிடைக்கும். நான் மக்களின் சேவகனாக துறைநீலாவணை தொடக்கம் வெருகல் ஆறு மற்றும் குடும்பிமலை வரைக்கும் கிட்டத்தட்ட 900 கிராமங்களுக்கு நேரடியாகச் சென்று அங்குள்ள மக்களின் குறைநிறைகளைக் கேட்டறிந்துள்ளேன். மக்களின் சிறந்த வாழ்க்கைத் தரத்தைக் கொண்டுவருவதுதான் எமது நோக்கமாகும். இதற்காக அரசாங்கமும் எமது ஜனாதிதி கோட்டபாய ராஜபக்ஷவும் முன்னுரிமை வழங்கி செயற்படுவார்கள் என்ற சமிக்ஞையை எமக்கு வழங்கியுள்ளார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு அரசாங்கத்தால் அபிவிருத்திக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி இம்முறை இம்மாவட்டத்தில் அமைச்சுப் பதவி பெறுகின்றவர் ஊடாக வழங்கப்பட வேண்டும், அதனூடாக மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும்,

எமது வெற்றியின் பின்னர் பாலங்களை புனரமைத்தல், விளைபொருட்களை அரசாங்கத்தினூடாக கொள்வனவு செய்து ஏற்றுமதிசெய்தல், குளங்களைப் புனரமைத்தல், ஏற்றுமதி வலயங்களை அமைத்தல், படுவாங்கரைப் பகுதியையும் எழுவாங்கரையையும் இணைக்கும் மண்டூர் - குருமண்வெளி ஓடுதுரைக்குப் பாலம் அமைத்தல், வீடுகளை அமைத்தல், மலசலகூடம் அமைத்தல், சிறு தொழிற்பேட்டைகளை உருவாக்குதல் உள்ளிட்ட பல விடயங்களை மேற்கொள்ளவுள்ளோம் - என்றார்.

# ஹிஸ்புல்லாவின் வெற்றிக்காக மகளிர் பேரணி

(ஓட்டமாவடி )

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு கட்சியில் போட்டியிடுபவரும், முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநருமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாவின் வெற்றியை உறுதிப்படுத்தும் மாபெரும் மகளிர் பேரணி மட்டக்களப்பு மாவட்ட எல்லைக் கிராமங்களான ரிதிதென்ன மற்றும் ஜெயந்தியாய கிராமங்களில் அண்மையில் நடைபெற்றது.

இப்பிரதேசத்தில் வசிக்கின்ற ஏராளமான பெண்களின் பங்களிப்பில் இந்தப் பேரணி நடைபெற்றது. இதன்போது பிரதேசத்திலுள்ள வீடுகளுக்குச்சென்று துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டதுடன் கூட்டங்களும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

வாகரை வடக்கு பிரதேச சபை உறுப்பினர் எஸ்.எம்.தாஹிரின் வழிகாட்டலில் நடைபெற்ற இந்தப் பேரணியில் கடந்த காலங்களில் ஹிஸ்புல்லாவினால் நன்மையடைந்த பல குடும்பங்களைச் சேர்ந்த தாய்மார் ஆர்வத்துடன் பங்குபற்றியிருந்தனர்.



# ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஐ.பி.எல்.

## மத்திய அரசிடம் பி.சி.சி.ஐ. அனுமதி கோரல்

## இரசிகர்கள் அனுமதி தொடர்பான முடிவு ஐ.அ.இ. அரசு கையில்




இந்தியன் பிரிமியர் லீக் தொடரை நடத்துவதற்கு அனுமதி தருமாறு மத்திய அரசிடம் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கோரிக்கை விடுத்துள்ள நிலையில், குறித்த தொடர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறவுள்ளதாக ஐ.பி.எல். தலைவர் பிரிஜேஷ் பட்டேல் தெரிவித்துள்ளார். இதேவேளை, போட்டிகளை மைதானத்தில் நேரடியாக இரசிகர்கள் பார்வையிடுவதற்கான அனுமதி தொடர்பான முடிவை ஐக்கிய அரபு இராச்சிய அரசு முடிவெடுக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முழு உலகையும் தாக்கிய கொரோனா வைரஸ் தொற்றால் கடந்த மாதம் நடைபெறவிருந்த இந்தியன் பிரிமியர் லீக் தொடர் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டது. ஐ.பி.எல். தொடர் நடைபெறாவிட்டால் பல கோடி வருமானங்களை இழக்க நேரிடும் என்ற அச்சம் நிலவிவந்த நிலையில், இவ்வருடம் நடைபெறவிருந்த ஐ.சி.சி. இருபதுக்கு இருபது உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் அடுத்த வருடம் ஒக்டோபர் மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில், ஒத்திவைக்கப்பட்ட குறித்த காலப்பகுதியில் ஐ.பி.எல். தொடரை நடத்துவதற்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு சிறந்த சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தை வைத்து ஐ.பி.எல். தொடரை நடத்த இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் நாளுக்குநாள் அதிகரித்து வருவதன் காரணமாக சொந்த மண்ணில் தொடரை நடத்த முடியாத நிலையில், ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறவுள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் செப்டெம்பர் - நவம்பர் காலப்பகுதியில் ஐ.பி.எல். தொடர் நடைபெறவுள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது.

# கொரோனா தொற்று இல்லை !

## இங்கிலாந்து குழாமுடன் இணையும் ஆர்ச்சர்




மேற்கிந்திய தீவுகள் அணியுடனான முதல் டெஸ்ட் முடிவின் பின்னர் இரண்டாவது டெஸ்ட் போட்டிக்காக இங்கிலாந்து அணி தயாராகிக்கொண்ட வேளையில் அவ்வணியின் இளம் வேகப்பந்துவீச்சாளர் ஜொப்ரா ஆர்ச்சர் அனுமதி இல்லாமல் கொரோனா பாதுகாப்பு வலயத்தை மீறி வெளியேறியிருந்தார்.

அதனை தொடர்ந்து ஜொப்ரா ஆர்ச்சர் இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கான குழாத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். பின்னர் இங்கிலாந்து கிரிக்கெட் சபை ஆர்ச்சருக்கு கடுமையான சட்டங்களை விதித்தது. அதன்பின்னர் ஐந்து நாட்கள் தனிமைப் படுத்தப்பட்டு பயிற்சிகளில் ஈடுபட்டார்.


இந்நிலையில், ஜொப்ரா ஆர்ச்சருக்கு இரண்டு முறை கொரோனா தொற்றை பரிசோதிக்கும் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில் இரண்டு தடவைகளிலும் அவருக்கு கொரோனா தொற்று இல்லை என முடிவு வந்துள்ளதன் அடிப்படையில் மூன்றாவதும் இறுதியுமான போட்டிக்கான இங்கிலாந்து குழாமுடன் ஜொப்ரா ஆர்ச்சர் இணையவுள்ளார்.



விளையாட்டு

கிருத்தி - அகீல்

thamilansports@yahoo.com



# உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடர்

## வெற்றியுடன் முதல் மூன்றுக்குள் நுழைந்த இங்கிலாந்து

மூன்று போட்டிகள் கொண்ட உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் டெஸ்ட் தொடரொன்று தற்சமயம் இங்கிலாந்து மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையில் நடைபெற்றுவருகிறது. கடந்த 12ஆம் திகதி நிறைவுக்குவந்த முதல் டெஸ்ட் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி 4 விக்கெட்டுகளினால் வெற்றிபெற்றிருந்தது.

இந்நிலையில், கடந்த திங்கட்கிழமை நிறைவுக்குவந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி இறுதி நேரத்தில் 113 ஓட்டங்களினால் வெற்றியை தனதாக்கியது. இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் 1-1 என சமநிலை பெற்றுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடும் இங்கிலாந்து அணிக்கு குறித்த டெஸ்ட் வெற்றியின் மூலம் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியலில் 40 புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் 11 போட்டிகளில் விளையாடியுள்ள இங்கிலாந்து அணி, மொத்தமாக 186 புள்ளிகள் பெற்று நான்காமிடத்திலிருந்து மூன்றாமிடத்திற்கு முன்னேறியுள்ளது.

இதனால் 180 புள்ளிகளுடன் மூன்றாமிடத்திலிருந்த நியூஸிலாந்து அணி நான்காமிடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளது. குறித்த உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியலின் முதலிடத்தில் 360 புள்ளிகளுடன் இந்திய அணி காணப்படுகிறது. நான்கு போட்டிகளில் விளையாடியுள்ள இலங்கை அணி 80 புள்ளிகளுடன் ஆறாமிடத்தில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# காற்பந்து உலகில் புதிய சாதனை நிலைநாட்டிய கிறிஸ்டியானோ ரொனால்டோ




இத்தாலியில் நடைபெற்றுவரும் செரி-ஏ காற்பந்து தொடரின் லீக் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒரு லீக் ஆட்டத்தில் யுவென்டஸ் அணி 2-1 என்ற கோல் கணக்கில் லாசியோவை வீழ்த்தியது.

இப்போட்டியில் யுவென்டஸ் அணியின் இரண்டு கோல்களையும் 51ஆவது நிமிடத்தில் பெனால்டி முறையிலும் மற்றும் 54ஆவது நிமிடத்திலும் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ அடித்தார். இவ்வெற்றியின் மூலம் செரி-ஏ காற்பந்து தொடரில் இதுவரை 34 ஆட்டங்களில் ஆடியுள்ள யுவென்டஸ் அணி 25 வெற்றி, 5 சமநிலை, 4 தோல்வி என்று 80 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறது. போட்டியில் தோல்வியை தழுவிய லாசியோ அணி 69 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் காணப்படுகிறது.

செரி-ஏ காற்பந்து தொடரில் கிறிஸ்டியானோ ரொனால்டோ ஒட்டுமொத்தமாக இதுவரை 61 போட்டிகளில் விளையாடி 51 கோல்கள் அடித்துள்ளார். இதன்மூலம் பிரபல்யமான காற்பந்து லீக் தொடர்களான செரி-ஏ, லா-லிகா மற்றும் இங்லீஷ் பிரிமீயர் லீக் ஆகிய மூன்று தொடர்களில் குறைந்தது 50 கோல்கள் அடித்த முதல் வீரர் என்ற சாதனையை போர்த்துக்கலைச் சேர்ந்த கிறிஸ்டியானோ ரொனால்டோ படைத்தார்.

# உபதலைவரானார் மொயின் அலி




அயர்லாந்து அணிக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடருக்கான இங்கிலாந்து அணியின் உபதலைவராக சகலதுறை வீரர் மொயின் அலி நியமிக்கப்பட்டுள்ளதாக இங்கிலாந்து கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் சவாலுக்கு மத்தியில் இங்கிலாந்து கிரிக்கெட் சபையானது முன்னின்று கிரிக்கெட் போட்டிகளை 117 நாட்களின் பின்னர் உலகிற்கு கொண்டுவந்தது. அதன் அடிப்படையில் தற்போது மேற்கிந்திய தீவுகள் அணி சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.

அதனை தொடர்ந்து அடுத்ததாக பாகிஸ்தான் மற்றும் அயர்லாந்து அணிகள் இங்கிலாந்து அணியுடன் விளையாடவுள்ளன. அந்த வகையில் அடுத்ததாக அயர்லாந்து அணி இங்கிலாந்து அணியுடன் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரில் விளையாடவுள்ளது. இதற்கான இங்கிலாந்து அணியின் பயிற்சி குழாம் அண்மையில் அறிவிக்கப்பட்டு அவ்வணி தற்போது பயிற்சிகளில் ஈடுபட்டு வருகிறது.

இந்நிலையில் எதிர்வரும் சில தினங்களில் அயர்லாந்து தொடருக்கான இறுதி ஒருநாள் குழாம் அறிவிக்கப்படவுள்ள நிலையில் இயன் மோர்கன் தலைமையிலான அணிக்கு மொயின் அலி உபதலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# மயோன் குறூப் அனுசரணையில்

## மருதூர் பிரிமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப் போட்டி





(எம்.என்.எம்.அப்ராஸ்)

மயோன் குறூப் கம்பனியின் அனுசரணையில் மருதூர் ஸ்போர்ட்ஸ் லீடர் கழகம் நடத்தும் மருதூர் பிரிமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் ஆரம்ப நிகழ்வு கடந்த சனிக்கிழமை சாய்ந்தமருது வொலிவோரியன் பொது விளையாட்டு மைதானத்தில் மருதூர் ஸ்போர்ட்ஸ் லீடர் கழகத்தின் தலைவர் எம்.எஸ்.எம்.ஹகீம் சரீப் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் உயர்கல்வி பிரதியமைச்சர் மயோன் முஸ்தபாவும், கௌரவ அதிதியாக மயோன் குறூப் கம்பனியின் உரிமையாளர் றம்லி முஸ்தபாவும், விசேட அதிதிகளாக முன்னாள் மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் எம்.எஸ்.எம்.மஸ்குட். ஏ. விளையாட்டு உத்தியோகத்தர் எம்.எம்.றிபாஸ் மற்றும் தொழிலதிபர் சஃறான் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். மேற்படி மருதூர் பிரிமியர் லீக் 2020 கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் மொத்தமாக 6 அணிகள் போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# சீத்துவக்கேடு

## 28



காரைக்கவி
கந்தையா பத்மானந்தன்

எங்கட வாரிவளவுப் பிள்ளையார் கோயிலில சித்திரா பருவம் அண்டு குறிச்சியில உள்ள பெடி பெட்டையள், இளந்தாரியள், குமரியள், குஞ்சு குருமன்கள், கிழடு கட்டையள், ஆம்பிளையள், பொம்பிளையள் எண்டு எல்லாரும் கூடுவினம். எங்கட வீட்டிலையும் நாங்கள் எல்லாரும் போவம். அதேமாதிரி மலர் வீட்டிலையும் எல்லாரும் வருவினம். அண்டைக்கு கோயிலுக்கு வாற எல்லாரும் அரிசியோ காயோ பழமோ பாலோ தயிரோ பூவோ எண்ணெயோ என்னண்டான்னை கொண்டுவருவினம்.

எங்கட குறிச்சிப் பெண்டுகள் கொஞ்சப் பேர் கோயில் முன் மண்டபத்தில இருந்து குழையல் சோறு போடுறதுக்காகக் காய்கறியள் வெட்டுவினம். இன்னும் சிலர் நீர்ச்சோறு போடுறதுக்கு பச்சை மிளகாய், வெங்காயம், தேசிக்காய் எல்லாம் வெட்டுவினம். இன்னும் கொஞ்சப் பேர் கஞ்சி காச்சிறதுக்கு ஆயத்தம் செய்வினம். கொஞ்சப் பேர் கோயில் முத்தத்தில சோத்துக் கிடாரம் வைக்கவும் கஞ்சிப் பானை வைக்கவும் அடுப்பு மூட்டுவினம்.

சின்னப் பெடியள் அயல் பனங் காணியளுக்கை போய் காங்கு மட்டை, கொக்கறை, பன்னாடை, பாளை, கருக்கு மட்டை எல்லாம் கொண்டு வந்து குவிப்பாங்கள். இளந்தாரியள் தண்ணிப் பீப்பாவில தண்ணி எடுத்தந்து கிடாரங்களிலை ஊத்துறது. வாழை இலை வெட்டிக் கழுவுறது. தேக்கம் இலை ஒடிக்கிறதெண்டு ஏதாவது ஒரு வேலை செய்வாங்கள்.

இப்பிடி ஊர் கூட வேணும், கூடி வேலை செய்யவேணும், கூடி கும்பிட வேணும். மனம் குதூகலிக்க வேணும். அதால ஒருத்தருக்கு ஒருத்தர் ஒற்றுமையாயும் சமாதானமுமாய் இருக்கவேணும் எண்டுதான் ஊர் முழுக்க கோயில்களும் கோயில்களில் ஊரிப்பட்ட திருவிழாக்களும் வந்தன எண்டு அப்பு சொல்லுவார்.

உதில பெரிய முசுப்பாத்தி என்னெண்டால் உள்ள நாள் முழுக்க கள்ளும் மச்சமும் மாமிசமும் சுருட்டுமாக் கோயில் பக்கமே வராமல் திரியிற கொஞ்சப் பேர் அண்டைக்கு குளிச்சு முழுகி இடுப்பில வேட்டி சால்வையோட வீபூதி பூசிக் கொண்டு பக்திப் பரவசமா நிண்டு எடுபிடி வேலையள் செய்யிறதைப் பாக்கத்தான் சித்திரகுப்தன் எவ்வளவு பவர்புல்லான ஆள் எண்டு விளங்கும்.

இப்பிடி வெளியில பொங்கலுக்கும் கஞ்சிக்கும் ஆயத்தம் நடக்க உள்ளுக்கை பூசைக்கும் அபிசேகத்துக்கும் கதை படிக்கிறதுக்குமான ஆயத்தம் நடக்கும். அதேமாதிரி மடப் பள்ளியில மடப்பள்ளி ஐயர் பிள்ளையாருக்கு உள்ளுக்குப் படைக்கிறதுக்கு மோதகம், வடை, அவல், கடலை வைக்கிறதெண்டு அடுப்பும் புகையுமாய் ஒரே அமர்க்களமாய் இருப்பார்.

கஞ்சி காச்ச சிவப்புப் பச்சையரிசிதான் பாவிக்கிறது. அரிசியை நல்லாக் கிளஞ்சு கழுவி கிடாரத்தில தண்ணி அளவா விட்டு அடுப்பில அவியவிட்டு அவிஞ்ச பிறகு பிழிஞ்ச தேங்காய்ப்பாலை விட்டு இறக்குவினம். பிறகு நல்ல சின்னன் சின்னனா அரிஞ்சு வைச்ச சின்ன வெங்காயம், பிஞ்சு மிளகாய். இடிச்ச இஞ்சி, உப்பு, எலுமிச்சம் புளி எல்லாம் விட்டு கலக்கினால் கஞ்சி ரெடி. சில கோயில்களிலை உந்தக் கஞ்சி இல்லாமல் பால் கஞ்சி இல்லாட்டில் சக்கரைக் கஞ்சி காச்சுவினம். இந்தக் கஞ்சியை விட முக்கியம் குழையல் சோறும் நீர்ச் சோறும்தான்.

குழையல் சோத்துக்கு குத்தரிசிதான் பாவிப்பினம். குத்தரிசியை கிடாரத்தில அவிய விட்டு அரிசி முட்டுக்காய் பதத்தில வர வேட்டி வைச்ச காய்கறி, பருப்பு, உப்பு, மிளகாய்த்தூள், இஞ்சி, உள்ளி, தேங்காயப் பால் எல்லாம் போட்டு கலக்கி அவிய விடுவினம். அரிசி நல்லா அவிஞ்ச பிறகு இறக்கி கடுகு, வெந்தயம், பெருஞ்சீரகம், கருவேப்பிலை எல்லாம் போட்டு தாளிச்சு கொட்டிக் கலக்கினால் குழையல் சோறு றெடி.

நீர்ச் சோறு போடுறதுக்கும் குத்தரிசிதான் பாவிப்பினம். கிடாரத்தில போட்டு அரிசி அவிஞ்சு வரேக்கை இறக்கிறதுக்கு கொஞ்சத்துக்கு முன்னால சின்னன் சின்னனா வெட்டின பச்சை மிளகாய், வெங்காயம் அளவா இஞ்சி உப்பு போட்டு கலக்கி மூடி விடுவினம். பிறகு இறக்கி கோயில் விறாந்தையில புதுப் பனம்பாயை விரிச்சு அவிஞ்ச சோத்தை அதிலை கொட்டி நிறையத் தயிர் விட்டு அளவாத் தேசிக்காய் புளி விட்டு கிளறி எடுத்தால் நீர்ச்சோறு ரெடி ஆயிடும்.

உந்த சித்திரபுத்திரனார் கதை கோயில்களிலை ஓலைச்சுவடியாகவோ இல்லாட்டில் புத்தகமாகவோதான் இருக்கும். கதை படிக்கிறதுக்கு இன்னார்தான் படிக்க வேணும், இப்பிடித்தான் படிக்க வேணும் எண்டு ஒரு ரூல்சும் கிடையாது. ஆரும் படிக்கலாம். எப்பிடியும் படிக்கலாம். சிலர் ராகம் போட்டுப் படிப்பினம். சிலர் கதை சொல்லுறமாதிரிப் படிப்பினம். எண்டாலும் சிலர் படிக்கிறதைக் கேட்டா படிச்சு முடிய இழுத்துக் குத்தவேணும் போல இருக்கும். சில கோயில்லை ஒரு ஆளே படிப்பார். சில கோயில்களிலை நாலஞ்சு பேர் ரீமா இருந்து மாறி மாறி வாசிக்கத் தொடங்குவினம்.

எங்கட கோயில்லை

**அத்தனும் அயனுமாலு**
**மானமாரிசிகள் தேவர்**
**நித்தமும் பலபலன்கள்**
**நெறியுடன் தெளிவதற்கு**
**சித்திர புத்திரனார்தாம்**
**செனித்ததோர் கதையைப் பாட**
**மத்தமா கஜமுகன்தொந்தி**
**வயிறுநங் காப்பதாமே....**

எண்டு சித்திரபுத்திரரின்ரை கதையை வினாசித்தம்பி வாத்தியார் படிக்கத் தொடங்கவே எப்படா உந்தக் கதை முடியும். எப்படா நாங்கள் உந்த சமைச்ச சோறு கஞ்சியை ஒரு பிடி பிடிக்கிறது எண்டு நாங்கள் ஒரே பரபரப்பு ஆயிடுவம்.. வினாசித்தம்பி வாத்தியார் மட்டும் எண்டில்லாமல் அவரோட கந்தப்பிள்ளை வாத்தியார், பொன்னாச்சி ஆச்சி, லச்சுமி ஆச்சி, மீனாச்சி ஆச்சி, தெய்வானை ஆச்சி எங்கட ஆச்சி எண்டு ஒரு பெரிய ரீமே இருந்து மாறி மாறி கதை படிப்பினம்.

***(தொடரும்)***



# “எவ்வளவோ பார்த்துட்டேன் அரசியலிலும் ஜெயிப்பேன்!”

**வித்யாராணி வீரப்பன்**



**“அப்பாவை என்னோட வாழ்க்கைல ஒரேயொரு முறைதான் பார்த்திருக்கிறேன். அப்போ, எனக்கு மூணு வயசு. என்னோட தாத்தா ஊரு கோபிநத்தத்துல நான் இருந்தப்போ காட்டுல இருந்து திடீர்னு வெளியே வந்த அப்பா என்ட்ட 10 நிமிஷம் பேசுனாரு. “நல்லா படி, டொக்டராகி மக்களுக்கு சேவை செய்யணும்” னு எங்கிட்ட சொன்னாரு.**

**அதுக்கு அப்புறம் அப்பாவை நான் பார்க்கவே இல்லை. ஆனால், அப்பா சொன்ன, அந்த சேவை பண்ணணும் அப்படிங்ற வார்த்தை என் மனசுக்குள்ள ஆழமா பதிஞ்சுட்டு. என்னால டொக்டராக முடியலானாலும் ஏதோ ஒரு வகையில் மக்களுக்கு சேவை செஞ்சுட்டுத்தான் வாரேன்”**

– இப்படி கூறும் வித்யாராணி வீரப்பன் தற்போது தமிழக பாரதிய ஜனதா கட்சியின் இளைஞரணி துணைத் தலைவர்.



தமிழகம், கர்நாடக மாநிலங்களை அதிர வைத்தவர் சந்தன கடத்தல் மன்னன் வீரப்பன். அவரது மகள்தான் வித்யாராணி. கடந்த 2004ஆம் ஆண்டு வீரப்பன் சுட்டுக் கொல்லப்பட, பிறகு பல இன்னல்களை வித்யாராணி சந்தித்தார். தடைகளைக் கடந்து வித்யாராணி பி.ஏ. பி.எல். படித்து வக்கீலுமாகிவிட்டார். பின்தங்கிய கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஸ்கூல் ஃபார் கிட்ஸ் என்ற அமைப்பையும் வித்யாராணி நடத்திவருகிறார்.

கட்சியில் கிடைத்த புதிய பதவி குறித்து வித்யாராணியிடம் பேசியபோது,

***“என் வாழ்க்கைல நான் சந்திக்காத பிரச்சினையே இல்லை. அரசியல்லையும் எதிர்நீச்சல் போடுவேன்”***

– என்கிறார் நம்பிக்கையுடன்.

வீரப்பன் வீட்டுக்குள் இரு கட்சித் தலைவர்கள் இருக்கிறார்கள் என்பதும் சுவாரஸ்ய தகவல். வித்யாராணியின் தாய் முத்துலட்சுமி பா.ம.க.விலிருந்து உடைந்த வேல்முருகனின் தமிழக வாழ்வுரிமை கட்சியில் சேர்ந்துள்ளார். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த ஆண்டு நடந்த நிகழ்ச்சியில் பா.ஜ.க. தலைவர் பொன். ராதாகிருஷ்ணனை வித்யாராணி சந்தித்துள்ளார். பா.ஜ.க.வில் சேருமாறு பொன். ராதாகிருஷ்ணன் அவருக்கு அழைப்பு விடுத்துள்ளார். ஏற்கனவே, சமூகசேவையில் ஈடுபட்டு வந்ததால், பொன். ராதாகிருஷ்ணனின் வேண்டுகோளை ஏற்று பா.ஜ.க.வில் வித்யாராணி ஐக்கியமானார். ஒரே வருடத்தில் புதிய பதவி அவருக்குக் கட்சியில் கிடைத்துள்ளது.

அரசியல் பிரவேசம் குறித்து வித்யாராணியிடத்தில் பேசியபோது,

**“கிராமத்துல பிறந்து வளர்ந்தாலும் படிச்சதுலாம் சென்னைதான்.**

**“பெரும்புத்தூர் செயின்ட். ஜோசப் பள்ளி, அயனாவாரம் பெத்தலகேம் பள்ளிகள்ள படிச்சேன். அதனால், நானும் ஒரு சிட்டி பொண்ணுதான். சொந்த வாழ்க்கையில எவ்வளோ பிரச்சினைகள் அதெல்லாம் சமாளிச்சிட்டேன். அதேபோல, அரசியல்லயும் கண்டிப்பா நான் ஜெயிப்பேன். அம்மா வேற கட்சில, நான் வேற கட்சில இருந்தாலும் ஒருவரோட விஷயத்துல மற்றவங்க தலையிடமாட்டோம். நான் தேசிய கட்சியை தெரிவுசெய்து அதில் இணைந்திருக்கிறேன். பிரதமர் மோடி இளைஞர்களுக்கு இன்ஸ்பிரேஷனாக இருக்கிறார். எனக்கும், அவர்தான் இன்ஸ்பிரேஷன்”**

– என்று சொல்கிறார்.

கடந்த 2004ஆம் ஆண்டு வீரப்பன் அதிரடிப்படையால் சுட்டுக் கொல்லப்பட்டார். அதிரடிப்படையின் தலைவர் கே. விஜயகுமார் எழுதிய ‘சேசிங் தி பிரிகண்ட் ‘ என்ற புத்தகத்தில்,

***“வீரப்பன் மனைவி முத்துலட்சுமி நிறை மாதக் கர்ப்பிணியாக எங்களிடத்தில் சரணடைந்தார். சென்னை மருத்துவமனையில்தான் அவருக்கு வித்யாராணி பிறந்தார். அதிரடிப்படை அதிகாரி ஒருவர்தான், வித்யாராணி என்ற பெயரை தெரிவு செய்தார்.”***

– என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.



Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7